Reg. No. M. 2911.

ஸ்ரீமுக-ஆடி
1933ஞு ஜூலை- ஆகஸ்ட்டுமீ

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 OCT 1933

மாலை 5 மணி 4.

ஓர் செந்தமிழ்

மாதப் பத்திரிகை.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

N33.5.4
197892

ஈழ கேசரி.

வட இலங்கையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை தோறும் 12 பக்கங்களுடன் வெளிவருவதோர் சிறந்த வாரப் பத்திரிகை.

(நான்காவதாண்டு)

இலங்கை, இந்தியா, பர்மா, மலாய்நாடு முதலிய இடங்களில் ஏராளமான சந்தாதாரர்களையுடையது

சிறந்த பேரறிஞர்களால் எழுதப்பெறும் இலக்கண இலக்கிய சம்பந்தமான அரிய கட்டுரைகளும், வரலாற்று ஆராய்ச்சி, அரசியல், பொருளாதார நிலை, சமயம், கல்வி, மாதர் பகுதி, சிறுவர் பகுதி, சமூக முன்னேற்றம் முதலிய பொது விஷயங்களும், வர்த்தமானங்களும் சிறப்பாக வெளிவருகின்றன.

தமிழன்பர்கள் யாவரையும் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேம்.

ஆண்டுச் சந்தா:

இலங்கை, இந்தியா, பர்மா ரூபா **4.**
மலாய் நாட்டுக்கு வெள்ளி **4.**

மாதிரிப் பிரதி இனம்! உடனே எழுதுங்கள்!!

விலாசம்:
"ஈழ கேசரி" அதிபர்,
சுன்னுகம், இலங்கை.

197892
சென்னை

தமிழரசு.

சிறந்த மாதப் பத்திரிகை.

ஆசிரியர்: டாக்டர். மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்.

அறிவை விரிவடையச் செய்யும் வியாசங்கள், நல்ல நல்ல கதைகள், நகைச் சுவை ததும்பும் கட்டுரைகள், சரித்திரங்கள் முதலியவைகள் அடங்கியிருக்கின்றன. சித்திரப் படங்களால் இது அலங்கரிக்கப்பட்டு வெளிவருகிறது.

சந்தா விபரம்:

வருடம் 1-க்கு ரூ. 1—0—0. தனிப் பிரதி 1 அணா.
அயல் நாடுகளுக்கு 2—0—0. „ 2 „

விலாசம்:

மானேஜர், "தமிழரசு ஆபீஸ்,"
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

சன்மார்க்கன்.

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

நாவலூற்று சாமி சிவநேசம் அவர்களை ஆசிரியராகப் பெற்றுச் "சன்மார்க்கன்" பகுத்தறிவுக் கேற்றவாறு மக்கட் பிறப்பில் உயர்வு தாழ்வாகிய சாதி, சமய வேற்றுமைப் பிணக்குகளைக் களைந்து, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரத்துவமான உரிமைகளைப் பெறும் வழிகளும், உயரிய கட்டுரைகளும் நிரம்பப் பெற்று வெளிவருவது.

சந்தா விபரம்:

வருடம் 1-க்கு ரூ. 1—0—0. தனிப் பிரதி 2 அணா.
அயல் நாடு „ 1—8—0.

விலாசம்:

மானேஜர், "சன்மார்க்கன்,"
திண்டுக்கல்.

" பாரதி "

சிறந்த செந்தமிழ் மாதப்பத்திரிகை

4-ம் ஆண்டு முடிவுற்று ஸ்ரீமுக சித்திரை முதல்
5-ம் ஆண்டு ஆரம்பம்.

சுதந்திரம் கொண்டு சமத்வம்பற்றிச் சகோதரத்வம் ஏற்று
குறைந்த சந்தாவிலே நிறைந்த விஷயங்களால் உயர்ந்த
மாலிகையாய் ஜாதி, மத, கட்சி பேதங்களற்று
இந்தியரனைவரும் பாரத மாதாவின் மக்க
ளென்ற மேலான கொள்கையுடன்
தேசாபி விருத்தியை முக்கிய முதல் நோக்கமாகக்கொண்டு
தேச விடுதலைக்காக உழைக்கும்
தேசீய மணங் கமழும் செந்தமிழ் மாலிகை
"பாரதி" ஒன்றேயாகும்.

உடனே சந்தாதாரர்களாய்ச் சேருங்கள்.
உங்கள் நண்பர்களுக்கும் இதனைப்பற்றி
அறிக்கை செய்து, சந்தாதாரர்களாய்ச்
சேர்த்துக் கொடுங்கள்.

சந்தா விபரம்:

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ. 2/= அல்லது 3 ஷிலிங்
வெளி நாடுகளுக்கு „ ரூ. 3/= „ 5 „
போஷக சந்தா குறைந்தது ரூ. 100/=
தனிப் பிரதி விலை அணா 3. அயல் நாடு அணா 4.
மாதிரிப் பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
நகரங்கள்தோறும் ஏஜெண்டுகள் தேவை.
இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும்
ஏஜெண்டுகளை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

விபரத்திற்கு 2 அணா ஸ்டாம்புடன் எழுதவும்.

பொறுப்பாளர்,
"பாரதி" ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

நம்மிடம் கிடைக்கும் இதர நூல்கள்.

1.	நெப்போலியன் போனபார்ட்	0—4—0
2.	மூத்தண்ணு (ஓர் அப்பறி கற்பிதம்)	1-12—0
3.	அறநூல் மூலம்	0—3—0
4.	ஷை பதவுரையுடன்	0-12—0
5.	ஸ்ரீ அரவிந்த யோக விளக்கம்	0—4—0
6.	வீர சிவாஜி விஜயம்	0—3—0
7.	ஸ்ரீ ராமகிருஷ்ணாமிருதம்	0—6—0
8.	அன்னை (ஸ்ரீ அரவிந்தர் அருளியது)	0—4—0
9.	கீதை காட்டும் பாதை	0-10—0
10.	புது யுகப் பாட்டு	0—5—0
11.	ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம்	0-12—0
12.	தென் இந்தியா விவசாய நூல்	1—4—0
13.	ஜான்ஸி மஹாராணி லக்ஷ்மிபாய்	0—2—0
14.	போலந்து நாட்டின் சுதந்திரம்	0—1—0

தபாற் செலவு பிரத்தியேகம்.

பாரதிப் புத்தகாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

"பாரதி"யில் விளம்பரஞ் செய்ய விகிதம்.

சாதாரண	பக்கம்	1-க்கு	மாதம் 1-க்கு	ரூ	10—0—0
,,	,,	½-க்கு	,,		5—8—0
,,	,,	¼-க்கு	,,		3—0—0
கவர்	,,	2 & 3	,,		15—0—0
,,	,,	4	,,		20—0—0

விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன்பணம் அனுப்பவேண்டும்.

நீண்டகாலம் விளம்பரந் தருவோர் மானேஜருக்கு எழுதவும்.

சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

தமிழ் நாட்டின் தேசீய கவி.

(ஓர் அரிய ஆராய்ச்சி நூல்.)

"பாரதி" ஆசிரியர்

திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள் பதிப்பித்தது.

கவிச் சக்ரவர்த்தி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, கவிதா விலாசம், தேசாவேசம், இயற்கை ரசனை இவைகளை யறிய இதைவிட வேறு சந்தர்ப்பம் வாய்க்கப்போகிறதா?

கிரௌன் ⅛ சைஸ் கிளேஸ் பதிப்பு.

240 பக்கங் கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ **1**.

தபாற் செலவு வேறு.

"பாரதி"

பைண்ட் வால்யம்

'தமிழ் நாட்டு மாடேன் ரேவியூ' வெனப் புகழப்பெற்று, சென்ற 1929-ம் ஆண்டு முதல் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இந்த பைண்ட் வால்யங்களில் பல பெரியோர்கள் சரிதைகளும், தேசாபிமானச் செல்வர்களின் ஜீவியக் குறிப்புகளும், அவர்தம் படங்களும் நிறைந்திருக்கின்றன.

நேர்த்தியான காலிகோ- கில்ட் பிரிண்ட்.

1-ம்	வருட வால்யம்	1-க்கு விலை	ரூ. 3—0—0.
2-ம்	,,	,,	ரூ. 2—8—0.
3-ம்	,,	,,	ரூ 2—8—0.
4-ம்	,,	,,	ரூ. 2—8—0.

3-ம் வருட அனுபந்தம் ரூ. 0—4—0.

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர்க்குத் தபாற் செலவுடன் வால்யம் 1-க்கு ரூ 3½ அல்லது 5½ ஷிலிங்.

'பாரதி' ஆலயம்

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



சிறந்த செந்தமிழ் மாலிகை.

பொருள் அடக்கம்.

மாலை 5. ஸ்ரீமுகஞூ ஆடிமீ மணி 4.

தொடர் எண்.		பக்கம்.
1.	கேள்விகள்—	241
2.	நம்பூதிரி பிராமணர்களின் பொதுப் பழக்க வழக்கங்கள்— ஆசிரியர், "பாரதி." ...	242
3.	ஹிந்தியில் பத்திரிகையின் வளர்ச்சி— திரு. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள், M. A. ...	247
4.	இளமை காத்தல்—திரு. பெ. தூரன் அவர்கள் ...	253
5.	வில்லியம் ஷேக்ஸ்பியர்—திரு. E. பரமசிவம் அவர்கள், B. A.	258
6.	கிறிஸ்துநாதரின் உயிர்த் தியாகம்—(மொழிபெயர்ப்பு) ...	271
7.	காதலர் இருவர்—திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்...	275
8.	பிரதாபன்—"ஞான விநோதன்"	278
9.	கிராமவாசி—"அனுபவி"	286
10.	ஈஸ்வர த்ரோஹி—திரு. S. V. வெங்கட்டநாராயண சர்மா அவர்கள், B. A. B. L. ...	288
11.	இராஜா இராம் மோகன ராய் அவர்களின் நூற்றாண்டு விழா— திரு. என். வேங்கடரமணன் அவர்கள் ...	307
12.	பைந்தமிழ்ச் சோலை—காதல்— ஸ்ரீவை. திரு. R. வெங்கடாசலம் அவர்கள் ...	311
13.	ஆராய்ச்சி மேடை —	316
14.	ஆசிரியக் குறிப்புகள்—	318

படம்:

1. இராஜா இராம் மோகன ராய்.

இராஜா இராம் மோகன ராய்.

பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.
ரா. சுப்ரமண்யம், பொறுப்பாசிரியர்.

மாலை	ஸ்ரீமுக-ஆடி	மணி
5	1933-ஹு ஜூலை-ஆகஸ்ட்டுமீ	4

கேள்விகள். *

கவி ரவீந்திரநாத தாகூர்.

இறைவனே, ஒவ்வொரு காலத்திலும், மறுபடியும் மறுபடியும்
உனது தூதர்களை
இந்த இரக்கமற்ற உலகிற் கனுப்புகிறாய்.
அவர்கள் தங்கள் மொழிகளை விட்டுச் சென்றிருக்கிறார்கள்:
"குற்றம் பொறு, எல்லோரிடத்தும் அன்பு கொள்—
வெறுப்பென்னும் குருதிச் செங்கறைகளை
உனது ஹிருதயத்தினின்றும் அகற்றிவிடு."
இவைகள் போற்றற்பாலன; சதா கவனத்தில் வைக்கற்பாலன;
இருந்தாலும் இன்று, இக் கெட்ட நாளில்,
நான் அவற்றை அர்த்தமில்லாத வணக்கத்துடன் வெளிக்
கதவிற்கு அப்புறமே துரத்திவிட்டேன்.

* பெ. தூரன் மொழிபெயர்த்தது.

நம்பூதிரி பிராமணர்களின் பொதுப் பழக்க வழக்கங்கள்.

ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர், "பாரதி".

திருவிதாங்கூர் இராஜ்யத்திலிருக்கும் நம்பூதிரி பிராமணர்களின் பழக்க வழக்கங்கள் மற்ற பாகங்களில் இருக்கும் பிராமணரது பழக்க வழக்கங்களைக்காட்டிலும் அநேக முக்கிய விஷயங்களில் மாறுபட்டிருக்கின்றன. நம்பூதிரிகளால் அனுசரிக்கப்படும் ஆசாரங்களானது பொதுவாக அறுபத்துநான்காகும். அவை

பாசாங்கு என்னும் இருட்டுப் போர்வையின் மறைவில்
ரகஸியமா யிருக்கும் பகைமை
உதவியற்றவர்களை அடித்துத் தள்ளுவதை
நான் பார்த்திருக்கிற தில்லையா?

வலிமையின் மமதைக் கொடுமைகளின் முன் வாயிழந்த நியாயம்
தனிமையில் அழுவதை
நான் பார்த்திருக்கிற தில்லையா?

ஆவது கருதாத இளைஞர்கள் உணர்ச்சியற்ற பாறைகளில் மோதி
வீணுக அழிவதை நான் பார்த்த தில்லையா?

இன்று என் வாய் அடைத்துக்கொண்டது; என் பாட்டு
ஊமையாய் விட்டது.
இருண்ட கனவில் எனது உலகம்
இருண்ட சிறைப்பட்டுக் கிடக்கிறது;
இறைவா, கண்ணீர் விட்டுக்கொண்டு உம்மைக்
கேட்கிறேன்:

"உமது காற்றை விஷமாக்குகிறவர்களை, உமது ஒளியைக்
கெடுப்பவர்களை
நீரே மன்னித்திருக்கிறீரா? அவர்களிடத்து அன்புகொண்டு
மிருக்கிறீரா?"

காதல் இல்லையேல் சாதல்.

களை மற்ற (பிறநாட்டு) பிராமணர்கள் அறுபத்துநான்கு அனுச்சாரங்கள் என்று கேவலமாகச் சொல்லுகின்றனர். எனினும் நம்பூதிரிகள் கீழ்வரும் அனுச்சாரங்கள் அறுபத்துநான்கையும் ஒன்று தவறுது சரிவர அனுஷ்டித்து வருகின்றனர். அப் பழக்க வழக்கங்களானது வேதாந்தியும் சீர்திருத்தக்காரருமான சங்காராச்சாரியாரால் ஏற்படுத்தப்பட்டதென்று கர்ணபரம்பரையாகச் சொல்லிவந்தாலும், அவைகளிற் சில பாசுராமரால் ஏற்படுத்தப்பட்டே இருக்கலாம். சாதாரணமாக அவைகளைப் பேச்சுக்களினுல் நம்பினுலும் மலையாளத்தில் ஆச்சாரங்கள் நான்கும், அனுச்சாரங்கள் 60-ம் இருக்கின்றன. அவ் வாச்சாரங்கள் மலையாளத்துக்கே உரியதாயிருப்பதினுல், அவைகளைக் கேரளாச்சாரம் என்று சொல்லாம்.

அறுபத்துநான்கு ஆச்சாரங்களாவன:

1. பற்களைக் குச்சிகளால் விளக்கக்கூடாது.

2. வஸ்திரங்கள் கட்டினபடியே குளிக்கக்கூடாது.

3. அணிந்திருக்கும் வஸ்திரங்களைக் கொண்டு (குளிக்கும்போது) உடம்பைத் துடைக்கக்கூடாது.

4. சூரியோதயத்திற்கு முன் குளிக்கக்கூடாது.

5. குளிக்காமல் உணவு சமைத்தல்கூடாது.

6. இராத்திரிகளில் (பாத்திரங்களில்) வைத்திருந்த தண்ணீரை உபயோகிக்கக்கூடாது.

7. குளிக்கும்பொழுது மனதில் எதையும் நினைத்தலும், குளிக்குமுன் சங்கற்பம் எதுவும் செய்தலும் கூடாது.

8. ஒரு காரியத்திற்கு உபயோகித்த தண்ணீர் மிஞ்சினுல் மற்றொரு காரியத்திற்கு உபயோகிக்கக்கூடாது.

9. பிறரை (வேறு யாரையாயினும்) தொட்டால் கட்டாயம் குளிக்கவேண்டும்.

10. தீண்டப்படாதோர் என்று அழைக்கப்படுபவரின் சமீபத்தில் போக நேரிட்டால், உடனே குளிக்கவேண்டும்.

11. தீண்டப்படாதவர் உபயோகிக்கும் கிணறு குளங்களை மிதிக்க அல்லது தொட நேர்ந்தால் உடனே குளிக்கவேண்டும்.

நூறு முறை சிறை செல்வதைக் காட்டிலும் ஒரு கலப்பு மணம் செய்துகொள்வது மேல்.

12. விளக்குமாற்றால் சுத்தம் செய்யப்பட்ட ஒரு இடமானது தண்ணீர் தெளிக்கப்படாமலிருக்குமானால், அவ்விடத்தில் மிதித்து நடக்கக்கூடாது.

13. நெற்றியில் (குறுக்கு வசமாக மூன்று கோடுகள் விழும்படி) விபூதி பூசிக்கொள்ளுதல் வேண்டும்.

14. மந்திரங்களைத் தனக்குள்ளேயே ஜெபித்துக்கொள்ள வேண்டும்.

15. பழைய சாதம் புசிக்கக்கூடாது.

16. குழந்தைகள் சாப்பிட்டு மீதி வைக்கும் உணவை யாரும் அருந்தல் கூடாது.

17. சிவனுக்குப் படைத்த அதாவது நைவேத்தியஞ் செய்த எதையும் சாப்பிடுதல் கூடாது.

18. சாதம் காய்கறி முதலியவைகளைக் கை கொண்டு பரிமாறுதல் கூடாது.

19. ஓமம் வளர்க்கும்பொழுது எருமை நெய் உபயோகிக்கக் கூடாது.

20. கருமச் சடங்குகளுக்கு எருமைப் பாலையோ நெய்யையோ உபயோகிக்கக்கூடாது.

21. உண்ணும்பொழுது வாய் கொள்ளாமல் உணவை எடுத்துத் திணித்து உண்ணக்கூடாது.

22. தீட்டுப்பட்டிருக்கும்பொழுது வெற்றிலை போடக்கூடாது.

23. பிரமச்சாரி விரதத்தை (பிரமச்சாரிகள்) கடைப்பிடித்தொழுகவேண்டும்.

24. பிரமச்சாரிகள் தங்கள் குருக்களுக்கு தக்ஷிணை கொடுக்க வேண்டும்.

25. வெளியிடங்களில் வேதங்கள் ஓதக்கூடாது.

26. கல்யாண காலங்களில் பெண்களைக் கொடுப்பதற்கென்று பணம் வாங்குதல் கூடாது.

27. தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்காக விரதங்கள் அனுஷ்டிக்கக்கூடாது.

சாராயக் கடைக்குப் போவதைக் காட்டிலும் சர்ப்பத்துக் கடைக்குப் போ.

28. ஒரு பெண் விலக்காயிருக்கும்பொழுது, மற்றொரு பெண் அவளைத் தொட்டுவிட்டால், அவள் குளித்துவிட்டால் போதுமானது. ஆனால் ஒரு ஆண் தொட்டுவிட்டால், உடனே அவள் பூணூலை மாற்றுவதோடு சில சடங்குகள் செய்தும் குளிக்கவேண்டும்.

29. பிராமணர்கள் நூல்நூற்றல் கூடாது.

30. பிராமணர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தாங்களே துவைத்துக்கொள்ளுதலும் கூடாது.

31. க்ஷத்திரியர்கள் லிங்கம் வைத்துப் பூசை செய்யக்கூடாது.

32. (நம்பூதிரிப்) பிராமணர்கள் கருமச் சடங்குகள் சம்பந்தப்பட்ட பரிசில்கள் எதுவும் சூத்திரர்களிடமிருந்து பெறக்கூடாது.

33. தகப்பனுக்கும், பாட்டனுக்கும், அவன் அப்பனுக்கும், தாய்க்கும், தாயின் பாட்டனுக்கும், தாய் தகப்பனைப் பெற்ற இரு பாட்டிகளுக்கும் (திவசம்) திதி செய்ய வேண்டும்.

34. திதிகள் அமாவாசையன்று செய்ய வேண்டும்.

35. கருமாதிச் சடங்குகளை, செத்த தினத்திலிருந்து ஒரு வருடம் பூர்த்தியாகும் நாளில் செய்ய வேண்டும்.

36. ஒருவர் இறந்ததிலிருந்து அவ் வருடம் முடியும்வரை தீக்ஷை அனுசரிக்கவேண்டும்.

37. சிரார்த்தங்கள் செய்வது இறந்த நக்ஷத்திரங்களைப் பார்த்து அதே நக்ஷத்திரத்தில் செய்யவேண்டும்.

38. கருமாதிச் சடங்குகள் செய்வது, குழந்தை பிறந்த தீட்டு ஏதாவதிருந்தால் அத் தீட்டுக் கழிந்தவுடன்தான் செய்யவேண்டும்.

39. ஒரு சுவீகாரப் புத்திரன், சுவீகாரத் தாய் தந்தையர்க்கும் தன்னை ஈன்ற தாய் தந்தையர்க்கும் சிரார்த்தம் செய்யவேண்டும்.

40. ஒருவன் இறந்து பட்டால், அச் சவத்தைத் தன் வீட்டின் பக்கத்திலே சுட்டெரிக்கவேண்டும்.

41. சந்நியாசிகள் பெண்களை ஏறிட்டுப் பார்க்கக்கூடாது.

42. சந்நியாசிகள் சகல இச்சைகளையும் ஒழிக்கவேண்டும்.

43. இறந்த சந்நியாசிகளுக்குச் சிரார்த்தம் செய்யக்கூடாது.

என்று இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற வகுப்பு ஏற்படுத்தப்பட்டதோ அன்றே இந்தியாவும் தாழ்த்தப்பட்டு விட்டது.

44. நம்பூதிரி பிராமண ஸ்திரீகள் தங்கள் கொழுநரைத் தவிர வேறு யாரையும் (பிறபுருடர்கள் முகத்தை) பார்த்தல் கூடாது.

45. நம்பூதிரி ஸ்திரீகள் வெளியே போவதாக இருந்தால் வேலைக்காரிகளின்றிச் செல்லுதல் கூடாது.

இவர்கள் வெளியே போகும்பொழுது நாயர் பெண்கள் எப்பொழுதும் இவர்கள் முன்னுக்குப் போய்க்கொண்டே எதிரில் வரும் அல்லது வழியில் இருக்கும் ஜனங்களுக்கு அவர்களின் வருகையைப் பற்றி எச்சரிப்பதோடு ஆண் மக்களை அப்புறம் போகும்படியும் செய்யவேண்டும்.

46. பெண்கள் எப்பொழுதும் வெள்ளை வஸ்திரங்களையே தரிக்கவேண்டும்.

47. பெண்கள் மூக்குக் குத்திக்கொள்ளக்கூடாது.

48. பிராமணர் மதுபானம் செய்தால் ஜாதிப் பிரஷ்டம் செய்யப்பட்டுவிடவேண்டும்.

49. பிராமணர் தங்கள் மனைவிகளல்லாத வேறு பிராமண ஸ்திரீகளுடன் விபசாரம் செய்தால் ஜாதியை விட்டு நீங்கிவிடவேண்டும். (மேற்கூறிய இரண்டுக்கும் சட்டதிட்டங்கள் இருக்கின்றனவே யொழிய அதன்படி நடப்பதில்லை.)

50. துஷ்ட தேவதை வணக்கம் உதவாது. கோயில்களில் பிதிர்தேவதைகளை வழிபடக் கூடாது. கோயில்களுக்குள் விக்கிரக ஆராதனை கூடாது. அபாயகரமான சாவு வந்திறந்த முன்னோர்களுக்குக் கோயில்கள் ஏற்படுத்தக்கூடாது.

51. கோயிலிலிருக்கும் விக்கிரகத்தை சூத்திரர்களும் மற்றவர்களும் கைகளினால் தொடக்கூடாது.

52. ஒரு தெய்வத்திற்கு நைவேத்தியம் செய்த பதார்த்தங்களை மற்றோர் தேவதைக்குப் பூசைக்காக உபயோகிக்கக்கூடாது.

53. கல்யாணம் முதலிய சடங்குகள் ஓமம் வளர்க்காமல் செய்யக்கூடாது.

54. பிராமணர்கள் ஒருவருக்கொருவர் ஆசிகள் கூறக்கூடாது.

55. அவர்கள் ஒருவருக்கொருவர் நமஸ்காரம் செய்துகொள்ளக்கூடாது.

56. யாகங்கள் செய்யும்பொழுது பசுக்களைக் கொல்லக்கூடாது.

பல ஆயிரக் கணக்கான விரோதிகளைக் கொன்று வெற்றி பெறும் வீரத்தைக் காட்டிலும் ஒரு விரோதியின் மனதைக் கவர்வதே மிக மிகப் பெரிய பராக்கிரமமாகும்.

ஹிந்தியில் பத்திரிகையின் வளர்ச்சி.

திரு. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள், M. A.

இந்தியாவில் பத்திரிகைகளின் ஸ்தாபனங்களும், அவைகளின் வளர்ச்சியும் மேல்நாட்டுப் பத்திரிகைகளின் போக்கைப் பின்பற்றினவைகளாக இருக்கின்றன. ஆனால் மேல்நாடுகளில் பத்திரிகை ஒரு பெரிய, பலமுள்ள ஸ்தாபனமாக இருக்கின்றது. வாழ்க்கையின் எந்தத் துறையிலும் அதனுடைய செல்வாக்கு இவ்வளவென்று சொல்லி முடியாது. ஆனால் இந்தியாவிலுள்ள பத்திரிகைகளில், ஒரு சில நீங்கலாக, மற்றவைகளெல்லாம் குற்றுயிருடன் ஜீவித்து வருகின்றன. அவைகள் செல்

---

57. சிவனுக்காகவும் விஷ்ணுவுக்காகவும் அனுசரிக்கும் பூசை நைவேத்தியங்களில் மாறுபட்டு (குழப்பங்கள்) மன வெறுப்புகள் ஏற்படுதல் கூடாது. மத சம்பந்தமாக விஷ்ணுவைப்பற்றியும் சிவனைப்பற்றியும் விவாதங்கள் கூடாது. கேரள ஜனங்கள் இரு கடவுட்களையும் சமமாகப் பாவித்தே வணங்கவேண்டும்.

58. நம்பூதிரிகள் மூன்று நான்கை ஒன்று சேர்த்துப் போடாமல், ஒரே நூலைப் பூணூலாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும்.

59. குடும்பத்தில் மூத்த குமாரன் ஒருவனே கல்யாணம் செய்யவேண்டும்.

60. இறந்துபோன பிதுர்க்களுக்குச் செய்யும் மரியாதைச் சடங்குகள் சாதம் படைத்தே செய்யவேண்டும்.

61. க்ஷத்திரியர்களும் இதர ஜாதியாரும் தங்கள் மாமன்மார்களுக்குத் தகனக் கிரியைகள் செய்யவேண்டும்.

62. க்ஷத்திரியர்களுக்குள்ளும் மற்றவர்களுக்குள்ளும் வார்சுபாத்தியம் மருமகன்களுக்கே உரியது.

63. விதவைகள், முற்றும் துறந்த சந்நியாச வாழ்க்கையே நடத்தவேண்டும்.

64. சதி தர்மத்தை அனுஷ்டித்தல் கூடாது.

‘ ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்”

வாக்கற்றவை என்பது மட்டுமன்று; இடைவிடாமல் பொது ஜனங்களுடைய தயவை யாசித்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் பத்திரிகைகளின் அவசியம் மென்மேலும் உணரப்பட்டு வருவதைக் குறித்து நாம் சந்தோஷிக்க வேண்டும்.

இந்தியாவில் மிகவும் செல்வாக்குள்ளவை ஆங்கிலப் பத்திரிகைகளே யாகும். குஜராத்தி, வங்காளி, ஹிந்திப் பத்திரிகைகளை அடுத்தபடி சொல்லலாம். தமிழ்ப் பத்திரிகைகள் மிகவும் செல்வாக்குக் குன்றினவைகளாக இருப்பதைப் பற்றிப் பெரிதும் வருந்த வேண்டி யிருக்கிறது. ஹிந்தியிலுள்ள பத்திரிகைகளைப் பார்த்துவிட்டுத் தமிழிலுள்ளவைகளையும் பார்த்தால், நாம் எவ்வளவு பின்னாலிருக்கிறோ மென்பது நன்கு விளங்கும். சிறந்த காகிதங்களில் அழகிய சித்திரப் படங்களுடனும், உயர்ந்த கட்டுரைகளுடனும் வெளிவரும் ஹிந்திப் பத்திரிகைகள் பல இருக்கின்றன. தமிழில் ஒன்றாவது அப்படி இல்லையே என்றுதான் வருந்துகிறேன்.

இத்தனைக்கும் சுமார் 70 வருஷங்களுக்கு முன் ஹிந்திப் பாஷையே திட்டமான ஒரு நிலையிலில்லை. பேசப்படும் பாஷை இடத்துக்கு இடம் மாறுபட்டிருந்தது; இப்பொழுதும் அப்படியே இருக்கிறது. ஆனால் அப்பொழுது எழுதப்படும் பாஷை என்று ஒன்று இல்லை என்றே சொல்ல வேண்டும். புதிதாக ஹிந்தியில் பத்திரிகைகள் ஏற்பட்டு, வசன நடையும் இலக்கண முறைகளும் சிறுகச் சிறுகத் தெளிந்து, இப்பொழுது அஃதிருக்கும் நிலைமையைப் பார்த்தால் ஆச்சரிய முண்டாகிறது. தற்காலத்திய ஹிந்தி வசன நடை தெளிவாக இருப்பதுடன், சக்தி வாய்ந்ததாகவும், விதம் விதமான அபிப்பிராயங்களைச் சுலபமாகவும் அழகாகவும் எடுத்துக் காட்டக் கூடியதாகவும், படிப்பதற்கு மனோகரமாகவும் இருக்கிறது. பத்திரிகைகள் தோன்றிய பிறகு, எழுத்தாளிக்கு எழுத்தாளி பாஷையைச் சுத்தப்படுத்தி யிருப்பதால், இடைவிடாத சீர்திருத்தத்தின் பலனாக இந்த வசன நடை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் பாஷையைச் சுத்தப்படுத்திய ஒரு பெருமை ஹிந்திப் பத்திரிகைகளுக்கு உண்டு.

ஆதியில் ஹிந்திப் பத்திரிகைகள்

1837-ம் வருஷத்துக்கு முன்பே போர்டு வில்லியத்தில் (கல்கத்தாவில்) ஹிந்தி அச்சுக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டன வென்றாலும், அவைகளின் பிரசுரங்களின் விலை அதிகமாகவும், அச்சு அசுத்தமாகவும் இருந்தபடியால், அவைகளால் விசேஷ பலன் உண்டாகவில்லை.

இயற்கை அறமே இல்லறம்.

ஆனால் டில்லியில் இதே சமயத்தில் ஏற்பட்ட லிதோகிராப் யந்திர சாலைகளாலும், பின்னாலேற்பட்ட அச்சுக்கூடங்களாலும் நல்ல பலன் ஏற்பட்டது. இதுமுதல் ஹிந்தியில் புஸ்தகங்களும் பத்திரிகைகளும் பெருவாரியாக வெளிவரலாயின.

1865-ம் வருஷம் முதல் 1905 வருஷம்வரை நடந்து வந்த ஹிந்திப் பத்திரிகைகளின் ஜாப்தா ஒன்று என் முன்பாக இருக்கிறது. அச் சமயம் வெளிவந்த எல்லாப் பத்திரிகைகளின் விவரங்களும் அதிலடங்கி யிருப்பதாகக் கூறமுடியாது. அப்படி யிருந்த போதிலும் அந்த ஜாப்தா மிகப் பெரியதாக இருக்கிறது. இப் பத்திரிகைக ளெல்லாவற்றையும் ஆராய்வதென்பது என் நோக்கமன்று; அதனால் ஒரு லாபமுமில்லை. இரண்டொரு பத்திரிகைகளையும் அவற்றின் ஆசிரியர்களையும் பற்றிச் சொல்ல வேண்டி யிருக்கலாம். மற்றவைகளைப் பற்றிப் பொதுப்படக் கூறினாலே போதுமென்று நினைக்கிறேன்.

இப் பத்திரிகைகள் வட இந்தியாவிலும் தெற்கிலும் பல விடங்களிலிருந்து வெளிவந்துகொண்டிருந்தன. காசி, பிரயாகை, லக்ஷ்மணபுரி, கான்பூர், கல்கத்தா, பம்பாய், ஆஜ்மீர், லாகூர் முதலான வெவ்வேறிடங்களில் வெவ்வேறு ஆசிரியர்களால் பிரசுரிக்கப்பட்டு வந்தன. அப்படிப் பிரசுரமாகும் இடங்களுக்குச் சமீபத்தில்தான் அவைகளுக்கு அதிகமான ஆதரவு கிடைத்து வந்தது. சர்க்காரும் பத்திரிகைகளை ஆதரித்து வந்ததற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. முக்கியமாக நாகரி லிபியின் அவசியம், தாய்ப் பாஷையின் பெருமை, புராணம் முதலானவைகளிலிருந்து தெரிந்துகொள்ளக் கூடிய நீதிகள், ராஜாங்க சம்பந்தமான கட்டுரைகள், ஹாஸ்யம், புஸ்தக ஆராய்ச்சி, கிருஷிகம், கணிதம், கைத்தொழில் முதலியவைகள்தான் பத்திரிகைகள் எழுதும் விஷயங்களாக இருந்தன. நினைத்தவர்கள் நினைத்த விடத்தில் பத்திரிகைகளை ஆரம்பித்து, பணக் கஷ்டம் நேர்ந்தால் நினைத்த மாத்திரத்தில் நிறுத்திக்கொண்டதாக எண்ண வேண்டி யிருக்கிறது. ஏறக்குறைய எல்லாப் பத்திரிகைகளும் அற்பாயுள் உள்ளவைகள்; ஒன்றாவது நீடித்து நடக்கவில்லை. மிகவும் சக்தி வாய்ந்த ஆசிரியர்கள் நடத்தி வந்த பத்திரிகைகள்கூட அவர்கள் ஆயுட் காலத்தில் நடைபெற்று, அவர்கள் மாண்ட பிறகு நசித்துப் போயின.

ஒரு ஆண் கல்வி கற்றால் அது அவனுக்கே உபயோகமாகிறது. ஒரு பெண் கல்வி கற்றால், அப் பெண்ணின் குடும்பத்திற்கே உரித்தா யிருக்கின்றது.

சர்க்காரின் கோபத்தாலும் அடக்குமுறையாலும் பத்திரிகைகள் கஷ்டப்படுவதென்பது தற்காலத்திய விஷயமென்று மட்டும் நினைக்கலாகாது. 1868-ம் வருஷம் முதல் பாரதேந்து ஹரிச்சந்திரா என்ற திறமையுள்ள ஆசிரியர் 'கவி வசன சுதா' என்ற ஹாஸ்யப் பத்திரிகை ஒன்றை நடத்திவந்தார். ஐக்கிய மாகாண சர்க்கார் அதில் 100 பிரதிகள்வரை வாங்கி அதை ஆதரித்துவந்தனர் என்றாலும் ஓரிடத்தில் உயர்ந்த உத்தியோகஸ்தர் ஒருவரைப் பரிகசிப்பதாகச் சர்க்காருக்குத் தோன்றியது. ஹரிச்சந்திரா சமாதானம் என்ன சொல்லியும் சர்க்கார் கோபம் தணியவில்லை. 100 பிரதிகள் வாங்குவது நிறுத்தப்பட்டது!

இருந்தபோதிலும், 'கவி வசன சுதா' இடைவிடாமல் நடந்து வந்தது. அதைப்பற்றி ஹிந்திக்காரர்கள் மிகவும் சிரேஷ்டமாகச் சொல்லுகிறார்கள். ஜனங்கள் அது வெளிவருவதை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்; பிறகு இன்பத்துடன் படித்து வந்தனர். இப்படிப்பட்ட பத்திரிகைகூட அதன் ஆசிரியருடைய மரணத்துக்குப் பின் நின்றுபோய்விட்டது. என்றாலும் சுமார் 60, 65 வருஷங்களுக்கு முன்—அப்பொழுது ஹிந்தியில் சிறந்த வசன நடை என்பது அபூர்வமாயிருந்தது—ஒரு ஹிந்திப் பத்திரிகை நன்றாக நடந்துவந்ததென்பது ஸ்வாரஸ்யமான விஷயமாயிருக்கிறது.

இந்தப் பத்திரிகைகளெல்லாம் இப்பொழுது இல்லாமற்போனாலும், இவைகள் சில பெரிய காரியங்களைச் சாதித்திருக்கின்றன என்பதிற் சந்தேகமில்லை. ஓரளவுக்கு ஹிந்தி வசன நடையை நிர்மாணம் செய்ததைத் தவிர அதை விவகாரத்துக்கு ஏற்றதாகச் செய்த பெருமை இவைகளுக்கு உண்டு. இவைகளெல்லாஞ் சேர்ந்து, ஹிந்தி பேசப்படும் பிரதேசங்களில், ஹிந்திப் பிரசாரத்தை இடைவிடாமல், தீவிரமாகச் செய்துவந்திருக்கின்றன. வங்காளத்திலும், பஞ்சாபிலும், மத்திய மாகாணத்திலும் ஹிந்திக்குச் செல்வாக்கு ஏற்பட்டதற்கு இப் பத்திரிகைகள் முக்கிய காரணமாயின. தவிர இவ்வளவு விஸ்தாரமான பிரதேசங்களில், பத்திரிகைகளைப் படிக்கும் வழக்கத்தை ஜனங்களுக்குள் உண்டாக்கிப் பரப்பிய பெரியதொரு காரியத்தை இவைகள் செய்திருக்கின்றன. எனவே பண்டித மகா **வீரப்பிரசாத் த்விவேதி** என்ற ஆசிரியர் **'சரஸ்வதி'** என்ற பத்திரிகையைச் சிறப்பாக நடத்திவந்தபோது, அதன் முழுப் பெருமையையும் முற்றிலும் உணர்ந்து, அதனால் பூரண பலனையும் அடைய வழி ஏற்பட்டிருந்தது. அற்பாயுளுள்ள அநேகம் பத்திரிகைகள் எல்லாஞ் சேர்ந்து செய்த ஒரு பெரிய காரியம் இதுவேயாகும்.

மனிதனை நேசித்தலே கடவுளை நேசித்ததாகும்.

'சரஸ்வதி'ப் பத்திரிகையும் பண்டித மகாவீரப்பிரசாத் த்விவேதியும்

ஹிந்தி உலகத்தில் 'சரஸ்வதி'ப் பத்திரிகைக்கும் பண்டித மகாவீரப் பிரசாத் த்விவேதிக்கும் இருக்கும் மதிப்பு கொஞ்சமன்று. 1903 முதல் 1920-வரையில் பண்டிதர் மேற்படி பத்திரிகையின் ஆசிரியராயிருந்தார். 1903-க்கு முன்பு வருஷக் கணக்காகவே பத்திரிகை நடந்துவந்தது. இப்பொழுதும் நடந்து வருகிறது. இருந்தாலும் பண்டிதர் காலத்தில்தான் அதன் சிறப்பு அளவுகடந்து விளங்கியது; அப்பொழுதுதான் அது நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவந்தது. பண்டிதருடைய குணாதிசயங்கள், அவர் சாதித்த காரியங்கள், போதித்த நீதிகள் இவைகளையெல்லாம் விவரமாய் ஆராய்வதற்குத் தனியாய் ஒரு கட்டுரை மட்டும் எழுதினால் போதாது; ஒரு புஸ்தகமே எழுதவேண்டியிருக்கும். ஆனால் இப்பொழுது நாம் கவனிக்கவேண்டியது 'சரஸ்வதி' மூலியமாய் அவர் சாதித்த இரண்டு முக்கிய காரியங்களே. அவைகளாவன:

(1) ஹிந்தி வசன நடையிலிருந்த தவறுகளையெல்லாம் முற்றிலும் திருத்தி, இலக்கண விதிகளுக்குப் பூரண மதிப்பையளித்து. அதனால் ஏற்பட்ட வசன நடையை எந்த விதமான விவகாரத்துக்கும் ஏற்றதாகச் செய்தார்.

(2) ஆங்கில மோகத்தில் முழுகியிருந்த திறமையுள்ள அநேக எழுத்தாளிகளைப் பொறுக்கிப் பொறுக்கி எடுத்து, அவர்களுக்கு உற்சாகமூட்டி, அவர்களைத் தாய்ப் பாஷையின் சேவையில் ஈடுபடும்படி செய்தார். இவர்களனைவரும் தற்சமயம் ஹிந்திப் பத்திரிகைகள் திறமையாக நடப்பதற்குக் காரணமாயிருக்கிறார்கள்.

இதனால்தான் ஹிந்திக்காரர்களெல்லாரும் பண்டிதரை, 'பாஷையை நிர்மாணம் செய்பவர்' என்றும், 'எழுத்தாளிகளை நிர்மாணம் செய்பவர்' என்றும், 'பூஜ்ய ஆசார்ய த்விவேதிஜீ' என்றும் போற்றுகிறார்கள்.

இத்தனைக்கும் இவர் காலத்தில் தேசீய இயக்கமும், தாய்ப் பாஷைப் பற்றும் அவ்வளவு தீவிரமாக இல்லை. வங்காளப் பிரிவினையால் ஏற்பட்ட சுதேசி, பகிஷ்கார இயக்கங்கள் மும்முரமாக இருந்தனவென்றாலும், தற்காலத்திய அளவுக்கு அவை எம்மாத்திரம்? இந்த நிலைமையில் தாய்ப் பாஷையை வளர்த்து, எழுத்தாளிகளை

எந் நாட்டில் பெண்மணிகளை கௌரவிக்கிறார்களோ, அந் நாடு சிறப்புடன் விளங்குகிறது.

யுண்டாக்கி, அவர்களால் தற்சமயம் ஹிந்திப் பத்திரிகைகள் மிகவும் உன்னதமான நிலைமையில் இருக்கின்றன என்றால், பண்டிதர் வேலை அபாரமானது என்று சொல்லவும் வேண்டுமா?

'ஹிந்தி கேசரி': சர்க்கார் அடக்குமுறை

தேசீய இயக்கம் வலுக்க வலுக்கச் சர்க்கார் அடக்குமுறையும் கடுமையான அளவுக்கு வந்துவிட்டது. அவ் வியக்கத்தின் ஆதரவால் பத்திரிகை வளர்ந்ததற்கு ஒரு காரணம் பண்டித மாதவராவ் சப்ரே என்பவர் நடத்திவந்த 'ஹிந்தி கேசரி' என்ற பத்திரிகையாகும். இது 1909-ம் வருஷம் நாகபுரியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது; ராஜீயத் துறையில் திலகரைப் பின்பற்றி வந்தது; மிகவும் சிறப்பாக நடந்துவந்தது. ஆனால் சர்க்கார் சீற்றங்கொண்டு, இவரைக் கைது செய்து, இவர்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டதன்மேல், இவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்; பத்திரிகையும் நின்றுபோய் விட்டது. அடக்குமுறையின் அலங்கோலந்தான் என்னே!

பிற்காலத்து தேசீயமும் பத்திரிகைகளும்

1919 முதல் தேசீய இயக்கம் மிகவும் வேகமாக நடக்கலாயிற்று. அதன் ஆவேசமானது அநேக தேசபக்தர்களைக் கிளப்பிவிட்டது. அவர்கள் தங்கள் வேகத்தையெல்லாம் பத்திரிகைகளிலும், புஸ்தகங்களிலும், கட்டுரைகளிலும், உபந்நியாசங்களிலும் காட்டலானார்கள். சர்க்காரின் அடக்குமுறை அந்த வேகத்தை யடக்கக்கூடியதாகக் காணோம். 1919 முதல் 1922-வரையில் ஹிந்திப் பாஷைக்கும் பத்திரிகைகளுக்கும் மிகவும் சிறந்த காலம் என்று சொல்லவேண்டும். பாய் பரமானந்த் (இப்பொழுது தீவிரவாதியல்லர்), ஸ்வாமி சத்யதேவ், பண்டித கணேஸ் சங்கர வித்யார்த்தி (கான்பூர் கலகத்தில் மாண்டவர்), ஸ்ரீ ப்ரகாஸ், ஸ்ரீ வாஸ்தவ், சம்பூர்ணானந்த், ராம்தாஸ் கௌட், ராம் நரேஸ் த்ரிபாடி, ஹரிபாவூ உபாத்தியாயர், பண்டித சுந்தரலால், மகாத்மா காந்தி. ....முதலான அநேகர் பத்திரிகைகளின் பெருமையையும் செல்வாக்கையும் அதிகரித்தனர். 'ஹிந்தியானது இந்தியா முழுவதற்கும் தேசீய பாஷையாக வேண்டும்' என்ற பிரசாரத்தாலும் விசேஷ பலன் ஏற்பட்டது.

எனவே நமக்கு முன்பாக 'பிரதாப்,' 'சரஸ்வதி,' 'சாந்த்,' 'மாதுரி,' 'விசால் பாரத்,' 'ஹம்ஸ்,' 'வீணா,' 'கர்ம பூமி,' 'விஸ்வமித்ர' முதலான எண்ணிறந்த உயர்தரப் பத்திரிகைகளைக் காண்கிறோம். தமிழில் இவ்வளவு சிறப்பான பத்திரிகைகளுமில்லை; இத்தனை பத்திரிகைகளுமில்லை. இதற்கும் சுமார் 70 வருஷங்களுக்கு முன் ஹிந்திப் பாஷையில் ஒழுங்கான வசன நடைகூட இல்லை!

ஹிந்தியில் பத்திரிகைகள் நல்ல வளர்ச்சி யடைந்திருக்கின்றன என்பது உண்மையானாலும், இன்னும் பல அம்சங்களில் அவை விருத்தியடைய வேண்டியிருக்கிறது என்று ஹிந்திக்காரர்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள். அவைகளுக்கும் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கும் இன்னும் ஏணி வைத்தால்கூட எட்டாது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

நல்ல குணங்களை வளர்க்கும் தன்மை காதல் மணத்திற்கு உண்டு.

இளமை காத்தல். *

திரு. பெ. தூரன் அவர்கள்.

"இளமை காக்க விரும்புகில்லிரோ?
இன்பம் காக்க விரும்புகில்லிரோ?"

இந்த இரண்டு மூன்று தலைமுறைகளில் மக்களின் சராசரி ஆயுட்காலம், நாகரீகம் படைத்த நாடுகளிலே, ஒரு மாமாங்கத்திற்கு மேல் பெருகிவிட்டது. அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் சராசரி வயது ஐம்பதுக்கு மேல் உயர்ந்திருக்கிறது. இது ஆயுள் வளர்ச்சியின் ஆரம்பமே. சமூக அபிவிருத்தியில் சிரத்தையுடையவர்கள் மனிதனது சராசரி ஆயுட் காலம் குறைந்தது அறுபது வருஷங்களுக்காவது உயர வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இப்பொழுது எழுபது எண்பது வருடக் கிழவர்களைத்தான் நாம் பார்க்கிறோமென்றும் இனிமேல் தொண்ணூறு, நூறு வயதுக் கிழவர்களையும் காண வேண்டுமென்றும் அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆசிரியர் மெட்சிகாப் (Metchikoff) நாம் நூற்றி நாற்பது வருடம் வாழ வேண்டுமென்று கூறுகிறார். "கோடியில் ஒரு மனிதன்கூட அவனுக்குண்டான வயதைப் பூர்த்தி செய்வதில்லை. எளிய இயற்கை வாழ்க்கை, உடல், மனம் இவைகளைச் சரிவர போஷித்தல் இவைகளினாலே நமது ஆயுள் பெரிதும் நீளுவதோடு, நமது ஆற்றலும், இன்பமும், ஆக்கும் சக்தியும் அதிகமாகிறது. எழுபது வரு

---

* J. T. சண்டர்லண்ட் மாடர்ன் ரிவியூவில் எழுதியதின் மொழிபெயர்ப்பு.

டத்தில் சாகும் மனிதன் அவனுடைய வாலிபத்திலேயே உயிர் நீத்தவன் ஆகின்றான்."

தேகமே முதுமை அடைகின்றது. ஆத்மா முதுமை அடைகிறதானாலும் அது மிகச் சிறிய வரம்புவரையிலுமே. காலக் கிரமத்தில் என் உடல் அழிவது திண்ணம்—இது குறிப்பிட்ட சில தொண்டாற்றுதற்கே ஆக்கப்பட்டது. அவ் வேலை முடிந்ததும், தேவையில்லாத உடையென அதை நான் தள்ளிவிடுவேன். எனது தேகம் எனது ஆத்மன் அல்ல.

உபநிஷதம் கூறுகிறது: "முதுமை, அழிவு இவைகள் உடம்பையும், புலன்களையும் ஞாபக சக்தியையும், மனதையும்தான் பாதிக்கின்றன. ஆனால் இவற்றைக் கவனித்துக் கொண்டிருக்கும் ஆத்மனைப் பாதிப்பதே இல்லை. ஆத்மன் எப்பொழுதும் சலிப்படைவது கிடையாது. ஆத்ம ஞானி எப்பொழுதும் மழுங்குவதில்லை. புலன்களாகிய கதவுகளே மாசடைந்து அடைபடுகின்றன. ஆத்மன் எப்பொழுதும் மறப்பதில்லை. ஞாபகசக்திதான் குறைந்துவிடுகிறது."

சில சமயங்களில் கிழவர்களைப் பார்த்து அவர்கள் இன்னும் கொஞ்சகாலந்தானே வாழ முடியும் என்று நாம் இரக்கப்படுகிறோம். ஆனால் அவர்கள் நல்வாழ்க்கையை மேற்கொண்டு தங்கள் தலைமுறைக்குத் தொண்டாற்றத் தங்கள் ஆத்மனை அச்சத்தினின்றும் பாதுகாத்து வந்திருந்தார்களானால், நாம் ஏன் அவர்களுக்காக இரக்கப்பட வேண்டும். அதற்கு மாறாக அவர்கள் கிழத்தன்மையைக் கிட்டிவிட்டார்களென்றும், தங்கள் பிறவியை நன்கு பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்களென்றும், பூர்ண வாழ்க்கையை வாழ்ந்து விட்டார்களென்றும் மகிழ்ந்து அவர்களை வாழ்த்துவோம்.

வாழ்க்கையை நன்கு நடாத்தி முதுமை பெறுவதை அருவியின் போக்குக்கு ஒப்பிடலாம். அருவி கடலைச் சமீபிக்கச் சமீபிக்க மோதி அலைவதும், சத்தமுமின்றி அகண்டு ஆழ்ந்து அமைதி அடைகிறது.

முதுமை அடைவது மலை ஏறுவதைப் போல் இருக்க வேண்டுமென்று நான் நினைக்கின்றேன். ஒவ்வொரு அடியும் நம்மை ஒரு படி உயர்த்துகிறது. ஆகாயம் தூய்மை அடைகிறது. பார்வை விசாலப்படுகிறது. இறுதியில் அதி அற்புதமான தெய்வீக வாசனை வீசுகின்ற, நாம் நேசித்த இறந்த நண்பர்களை சந்திக்கும், சாவெனும் மலையின் உச்சியை அடைகிறோம்

கல்வி, தொழில், அரசு, வழக்க ஒழுக்கம், நாகரீகம் முதலியவற்றால் ஆகிய ஒன்றே தேசம் எனப்படும்.

முதுமை அடையும் காலத்து நாம் பயப்பட வேண்டியது ஒரு சமயம் ஆத்மனும் முதுமை அடைந்துவிடுமோ என்பதே. எப்படி அதைத் தடுப்பது?

ஒரு காரியம் நீ சதா செய்துகொண்டிருக்க வேண்டும். உன் தேகத்தைத் தவிர வேறு எதையும் முதுமை பாதிக்கும் என்று ஒருபொழுதும் நினைக்காதே. உன்னுடைய ஆத்மனைப் பற்றிக் கீழ்க் கண்டவாறு எப்பொழுதும் நினை. "நான் இளைஞன், நான் எப்பொழுதும் இளமையோடிருப்பேன், எனது தேகம் மூப்படைய வேண்டியதே; ஏனெனில் இது மண்ணுப் பாண்டம். ஆனால் அதைப்பற்றி எனக்கென்ன? நான் அவிரூபமானவன் ஆதியந்தமற்ற கடவுளுக்கு நான் ஒரு புதல்வன்."

இன்னும் வேறு காரியங்களும் செய்ய வேண்டும். முதுமை ஓய்வு ஒழிச்சலோடு அமைதியாய் வாழ்வதற்கு ஆனபருவம் என்பதை அறிந்துகொள். உலக வாழ்க்கையிலிருந்து சீக்கிரம் விலகிக் கொள். மனக்கொந்தளிப்புக் கொள்ளாதே; போதை வஸ்துக்களை உபயோகிக்காதே; வாழ்க்கையை எளிதாக்கு.

விளையாட மறுபடியும் பழகிக்கொள். குழந்தைப் பருவத்திலும், இளமைப் பருவத்திலும் விளையாடி இன்பமடைந்தாய்; இளமை உணர்ச்சியோடு இருக்க வேண்டுமானால், முதுமைப் பருவத்திலும் விளையாடுவது அவசியம்.

போதுமான விளையாட்டுகளையும் பொழுது போக்குகளையும் ஏற்படுத்திக்கொள். தேகத்திற்கு நித்திரை வேண்டி இருத்தல் போன்று மனத்திற்கு இவை வேண்டியிருக்கின்றன. மனமும் உடலும் ஓய்வு எடுத்து எழுச்சி பெறுகின்றன. வயது ஆக ஆக உடம்பிற்கு ஓய்வு அதிகம் வேண்டியிருப்பது போன்று மனத்திற்கும் வேண்டியிருக்கிறது.

உனது காலப் போக்குகள் இள வயதில் இருந்தன போல அவ்வளவு கடினமானவைகளாக இருக்கக்கூடாது. ஆனால் அவைகள் இப்பொழுதுதான் அதிக அவசியம். உனது வலிமைக்கு ஏற்றவைகளைத் தெரிந்துகொள். அவை உன்னை அலுப்படையச் செய்யக்கூடாது; உனது மனதார ஆனந்தம் அளிப்பதாக இருக்க வேண்டும்; அவை எளிமையாயுமிருக்க வேண்டும்.

சாக்கிரடீஸ் கிழப் பருவத்தில் சங்கீதம் கற்றுக்கொண்டார்.

ஒரு தேசத்தார் தங்கள் நாகரீகத்தை மற்றொரு தேசத்தாரிடை புகுத்துவது நியாயமன்று.

க்ளாட்ஸ்டன் தமது எண்பத்தேழாவது வயதில் சைக்கிள்விடக் கற்றுக்கொண்டார்.

ஜார்ஜ் பென்க்ராப்ட் தொண்ணூறு வயதாகி இறக்கும் வரையி லும் குதிரைச் சவாரி செய்வதை விடவில்லை.

எனக்கொரு கிழவரைத் தெரியும்; அவர் அனைவரும் ஆச்சரி யப்படும்படியாகவும், தமது பேரப்பிள்ளைகள் பெரு மகிழ்ச்சி அடை யும்படியாகவும் அற்புதமாகக் கதை சொல்லுபவர் ஆகிவிட்டார். அவர் தமது இளமையில் "கதை என்றால் காசுக்கெத்தனை" என்று கேட்ட ஆசாமி. ஆனால் பிற்காலத்திலே இரண்டு மூன்று பேரப் பிள்ளைகள் அவரைச் சுற்றிக்கொண்டு கதை சொல்லும்படி வேண் டவே அவர் சொல்ல முயற்சிக்கலானார். அப்பியாசத்தால் குழந் தைகள் ஆனந்திக்கும்படி கதை சொல்லுவதில் வல்லவரானார். அந் தக் கதைகள் குழந்தைகளுக்கு இன்பமளித்ததோடு அவருக்கு ஒரு புதிய உள்ளத்தை உண்டாக்கி அவரை மறுபடியும் இளைஞர் ஆக்கி விட்டன.

இளமையோடிருக்க வேண்டுமானால், புதுப் புது விஷயங்களி லும், புதுப் புது எண்ணங்களிலும், புதுப் புதுப் படிப்புகளிலும் விருப்பங்கொள். உனது சக்திக்கேற்பப் புதுப் புது முயற்சிகளி லும் ஈடுபடு. நீ இன்னும் ஒரு வருடம் அல்லது ஒரு நாள் இருப்ப தானாலும் பாதகமில்லை. ஆரம்பி; எஞ்சியிருக்கும் நாட்களைப் பெரி தும் பயன்படுத்திக்கொள்

உழைப்பைக் குறைத்துக்கொள் ஆனால் உழைப்பின்றி இருக் காதே. சோம்பல் மூளையைப் பாழாக்கிவிடும் என்பதை நினைவில் வைத்துக்கொள். அது ஆயுளையும் குறைத்துவிடும்.

பிறர் நலத்தில் சிறத்தைகொள் பிறர் தண்ணீர் குடிப்பதற் காகப் பொட்டைக் காடுகளிலும் கிணறுகள் வெட்டிவை. நீ இறந்த பிறகு மற்றவர்களுக்கு நிழலும் கனியும் கொடுக்க மரங்கள் பயிரிடு.

முன்னேற்றத்தில் நம்பிக்கைக்கொள். முன்னேறி வாழ். வரும் தலைமுறையில் நம்பிக்கைகொள். உனக்குப் பிறகு மேலான மக்கள் தோன்றி நீ நிலைநாட்டும் காரியங்களைச் சிறந்த வழியில் செய்து முடிப்பார்களென்பதில் நம்பிக்கைகொள்.

இப் பெரும் பூவுலகில் நிகழ்ந்து வரும் விஷயங்களில் ஆர்வம் கொள். ஒரு சில பத்திரிகைகளை வாசிப்பதாலும் சிறந்தவைகளை வாசி. முன்னால் நீ விரும்பிய பழம் புத்தகங்களையெல்லாம் படி;

ஒரு நாடு இனியொரு நாட்டை அடிமைப்படுத்துவது சரியல்ல.

புதுப் புத்தகங்களில் மனித சமூகத்தின் முன்னேற்றத்தைக் கூறு பவைகளையே விசேஷமாகப் படி. இந்த எண்ணங்களும், விஷயங் களும் இளமை ஊற்றைத் திறந்து உனது ஆத்மனில் ஒழுகும்படி செய்யும்.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுடைய வாழ்க்கையில் சிரத்தை கொள்; மற்றவர்களுடன் கலந்து வாழ். நட்பைப் போற்று. உனது பழைய நண்பர்கள் குறைந்து கொண்டு வருவதைக் கண்டு, இருப்ப வர்களை ஆழ்ந்து நேசி. இளைஞர் சிநேகத்தை நாடு. ஏசு கிறிஸ்து வைப் போல குழந்தைகளிடம் அன்புகொள். அவர்கள் சேர்க்கையை நாடு. நீ அவர்களிடம் அன்பு கொள்ளுகிறாய் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ளட்டும். அவர்கள் அன்பு, அவர்கள் குதூகலம், அவர்கள் சிரிப்பு, அவர்கள் முகப்பிரகாசம் இவைகளுக்கு உனது ஆத்மனை இளமையோடு இருக்கச் செய்யும் அற்புத சக்தி உண்டு.

அன்பு முதுமையைப் போக்கும் பெரு மருந்து. அன்பு, நடுங்கும் நெஞ்சிற்குப் புத்துணர்வு கொடுக்கிறது. நாம் முதுமை அடைவதே யில்லை. அன்பால் குளிர்காலப் பனியிலும் வசந்தகால ஒளி விளங்குகிறது.

பல வகையிலும் அன்பை வளர்; அன்பு ஊற்றுப் பெருக் கெடுத்தோடிக்கொண் டிருக்கட்டும்; சுயநலத்தாலோ, சோம்ப லாலோ, கவனக் குறைவாலோ அது தடைபடாமல் தடுத்துக்கொள். அன்பே உயிர்; அதுவே வாழ்வின் உச்சி; அது ஆத்மனில் விளங் கும் இறைவனின் உயிர். "அன்பு கொள்பவன் கடவுள் ஒளி பெற் றவன்."

பணிவும் எளிமையும் உள்ள அன்பே மேலுலகத்திற்குச் செல் லும் நேர் வழியாகும். அன்பு தனது பொன்மணிகளை ஒலிக்குங் கால் சொர்க்கவாசற் கதவுகளெல்லாம் தாமே திறக்கின்றன. அன்பு காட்டும் சொர்க்கத்தை அடைய, சாவை எதிர்பார்க்க வேண்டிய தில்லை. இவ் வுலகிலேயே நாம் செல்லும் எந்த இடத்திலும், நாம் தங்கும் எந்த இடத்திலும் இச் சுவர்க்கம்தானே தோன்றுகின்றது.

இயற்கை அன்னையை நேசி; அவளோடு நெருங்கிப் பழகு. சூரிய ஒளியைக் காதலி; சூரிய ஒளியில் வாழ். இளவேனில் வரவை எதிர்பார்; இளவேனிற் பூக்களைக் கண்டு மகிழ். அழகிய அந்திக் காலத்தைப் பார்த்து இன்புறுமலிராதே. இரவில் ஆகா யத்தை அண்ணாந்து பார்; நட்சத்திரங்களின் சாந்தி உனது ஆத்ம னைத் தழுவட்டும். இப்படி உனது ஆத்மன் முதுமையை எதிர்க்க

பிறப்பால் உயர்வு தாழ்வு கருதுவது மடமை.

வில்லியம் ஷேக்ஸ்பியர்.

திரு. *E*. பரமசிவம் அவர்கள், *B.A.*

வில்லியம் ஷேக்ஸ்பியர், ஆங்கில இலக்கிய வுலகில் ஒப்பாரும் மிக்காருமின்றித் தனித்து நின்று பிரகாசித்துக்கொண்டிருக்கிறார். இவர் 16-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றி, 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மறைந்தார். அவர் இறந்து இற்றைக்கு முந்நூறு வருடங்களுக்கு மேலாகிறது. இங்கிலாந்தில், பல பேராசிரியர்கள், அவருக்கு முன்னும் பின்னும் தோன்றியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் ஷேக்ஸ்பியரே நடுநாயகமாய் விளங்குகிறார். இவ்விதம், இந்தியாவிற்கு இயற்கை அரணாக விளங்கும் இமயமலைத் தொடரில் வானளாவிய சிகரங்களுக்கு மத்தியில்

லாம். இவற்றைவிட உனது உயிர் தெய்வத் தன்மை பொருந்தியது என்பதை நம்பு; கடவுள் அருகிலேயே இருக்கிறார் என்பதை அறிந்துகொள்.

இறைவனது ஒளியைக் கொண்டே நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்றன; அவரது உயிரே உனது தேகத்தில் மிளிர்கின்றது. அக் கருணைக் கடலின் ஒரு துளியே உனது உள்ளத்தில் எழும் அன்பு. இவற்றை எல்லாம் நம்பு.

அமரத் தன்மையில் உனது நம்பிக்கை யென்னும் விளக்கைச் சுடர்விட் டெரியும்படிச் செய்; ஏராளமான எண்ணெயை ஊற்று. எப்படி? பெருநெறி பிடித்தொழுகி, உனது வாழ்க்கை கடவுள் மயமானது ஆக ஆக நீ உன்னுள்ளேயே கடவுள் விளங்குவதைத் தெளிவாகக் காண்பாய். பின்பு உனது ஆத்மன் அழிவுறாது என்ற நிச்சயத்தோடு இருப்பாய்.

எல்லாவற்றிற்கும் மேல் உனது குற்றங்குறைகளையும், உனது முதுமையையும், உனது சாவையும் ஒரு அற்புதப் பொன்மயமான ஆடையாக ஆக்கவல்ல உயிர்மயமான, அன்பு மயமான ஒரு அபார தெய்வ சக்தி இருக்கின்றதென்பதை நம்பு.

தன்னுயிரைப் போல் மன்னுயிரைக் கருதுவதுதான் சகோதரத்துவம்

கௌரிசங்கர் எவ்விதம் எல்லாவற்றிற்கும் உயர்ந்து நிற்கிறதோ, அவ்விதமே ஆங்கில இலக்கிய பேராசிரியர்கள் ஆகிய சாசர், மில்டன், வொட்ஸ்வொர்த், ரஸ்கின், டெனிஸன், பிரவுனிங் முதலானோர் நடுவில் ஷேக்ஸ்பியர் மகோன்னத தோற்றத்துடன் விளங்குகிறார். உலகம் இம் மேதாவியின் சரிதத்தை விரிவாக அறிய விரும்புகிறதெனினும், காலமென்னும் இருட்டிரையால் அது மூடப்பட்டிருப்பதால், கன்ன பரம்பரையால் வந்த சில ஜீவிய சரித்திர நிகழ்ச்சிகளைக்கொண்டு திருப்தியடைய வேண்டியிருக்கிறது.

இளமை

சாகரம் சூழ் இங்கிலாந்தில் அவான் என்னும் நதிக் கரையிலுள்ள ஸ்ராட்போர்டு என்னும் கிராமத்தில் 1564-ம் ஆண்டில் வில்லியம் ஷேக்ஸ்பியர் தோன்றினார். இவரது தந்தை ஜான் ஷேக்ஸ்பியர் சில்லரை வியாபாரியாயிருந்து காலக்கிரமத்தில் அதிகப் பொருள் ஈட்டி, பொது ஜன சேவை செய்து, அவர்களின் மதிப்பைப் பெற்றிருந்தார். வில்லியம் ஷேக்ஸ்பியர் ஜெனித்தபோது, அவர் கௌரவ நியாயாதிபதி பதவியை அடைந்து, அதிகச் சிறப்புடன் வாழ்ந்துவந்தார். ஜான் ஷேக்ஸ்பியருக்கு சங்கீதத்திலும் நாடகத்திலும் அளப்பரிய பிரியம் உண்டு. ஷேக்ஸ்பியரது தாயார் ஒரு நிலச் சுவான்தாரின் மகள்; நற்குணமுடையவள்.

ஷேக்ஸ்பியர், தன் ஊரில் உள்ள கிராமர் ஸ்கூலில், 'சைமன் கன்ட்' என்ற ஆசிரியரிடம் கல்வி பயின்றார். இவர் பொலிவுள்ள வதனத்துடன், புத்தியின் விசாலத்தைக் காட்டும் உயரிய நெற்றியும், அழகிய விழிகளும் அமையப்பெற்று மாணவர் திலகமெனப் பிரகாசித்து, உபாத்தியாயரின் அன்பிற்குப் பாத்திரனாக விளங்கினார். பள்ளிக்கூடத்தில் லத்தீன், கிரீக் ஆகிய பாஷைகள் விசேஷமாகக் கற்பிக்கப்பட்டன. பிரெஞ்சு பாஷையிலும் இவருக்குக் கொஞ்சம் பயிற்சி உண்டு. இவ்விதம் பல மொழிகளிலும் பயிற்சிபெற்றது பிற்காலத்தில் இப் பாஷைகளின் பழ நூல்களில் புதைந்துகிடக்கும் விஷயங்களை ஆழ்ந்தெடுத்துத் தன் நாடகங்களுக்கு உபயோகிக்கத் துணையாயிருந்தது. குடும்ப நொடிப்பால், இவர் தம் பதின்மூன்றும் வயதில் கல்விச்சாலையை விட நேர்ந்தது.

இவர் பிறந்த ஊராகிய 'ஸ்ராட்போர்டு' பல்வளமும் நிறைந்து, வானளாவிய தருக்கள் செறிந்து, இயற்கை அழகு சொட்டும் 'அவான்' நதிக்கரையில் உள்ளது. அக் காலத்தில் அக் கிராமத்தைச் சுற்றி வனம் அடர்ந்திருந்தது. ஷேக்ஸ்பியர் விடுமுறை நாட்களில் பையன்களோடு கானகத்தில் விளையாடச் சென்று, இயற்கை வனப்பைக்

மனிதனுக்கு மதமா, மதத்திற்கு மனிதனா என்பதைக் கவனியுங்கள்.

கண்டு களித்திருத்தல் வேண்டும். காலையிலும், மாலையிலும் மாட்சிமையுடன் கதிரவன் தோன்றி மறையும் சமயங்களில், விண்ணிடைப் புலனாகும் அருங்காட்சிகள், இவர் மனதைப் பரவசப்படுத்தி இருத்தல் வேண்டும். அந்தந்தப் பருவங்களில், மரஞ் செடி கொடிகள் தங்கள் இலைகளை யுதிர்த்துத் தளிர்க்கும்போது இயற்கை யடையும் மாற்றங்களையும், புயற்காற்றடித்து, இடிமுழக்கிப் பளீர் பளீரென மின்னி மழை பெய்யும்போது, இயற்கை அடையும் பயங்கரத் தோற்றத்தையும் பலதடவைகளில் கண்ணுற்று வியந்து பாராட்டி இருத்தல் வேண்டும். இதற்குச் சான்றுகள் அவர் ஆக்கிய நூல்களில் ஆங்காங்கு சொற் சித்திரங்களில் தீட்டப்பட்டிருக்கும் இயற்கை வர்ணனைகளேயாகும்.

ஷேக்ஸ்பியருக்கு முன்னுள்ள இங்கிலாந்து சரித்திரத்தில் உள்நாட்டுச் சண்டைகளும், சமயப் போர்களும் மலிந்து கிடப்பது காணலாம். அவைகளால் நாடு பட்ட கஷ்டம் ஜனங்கள் மனதைவிட்டகலவில்லை. இவர் சிறு பையனாக இருக்கும்போது, கணப்பைச் சுற்றி உட்கார்ந்து குளிர்காயும்போது, உள்நாட்டுச் சண்டைகளால் ஏற்பட்ட கஷ்டங்களைப்பற்றி வயோதிகர் அதிக உணர்ச்சியுடன் பேசுவதை மிகக் கவனமாய்க் கேட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு கேள்வி மூலம் அறிந்த சரித்திரக் கதைகளே இவரது தேச சரித்திர நாடகங்களாக (Historical Plays) பரிணமித்தன எனக் கொள்ளல் வேண்டும். ஒரு தேசம் ஒற்றுமைக் குறைவால் சீரும் சிறப்பும் குன்றுமென்றும், ஒற்றுமையால் புத்துயிரும் புது வாழ்வும் பெற்றுச் சகல துறைகளிலும் செழித்தோங்குமென்ற உண்மைக்கு இங்கிலாந்து தேச சரித்திரம் எவ்விதம் எடுத்துக்காட்டாக இருக்கிறதென்று ஆங்கிலேயர் மனதில் பசுமரத் தாணிபோல் தம் சரித்திர நாடகங்களில் விளக்கிக் காட்டியிருப்பதே இதை ரூபிக்கும்.

அக் காலத்தில் பல நாடகக் கம்பெனிகள் கிராமங்கள்தோறும் சென்று நடித்துவந்தன. 'ஸ்ட்ராட்போர்டு'க்கு அருகிலிருந்த 'கெனில் ஓர்த்' மாளிகையில் எலிசபெத் ராணி விஜயம் செய்யும்போது, அவ்வரசியைக் கௌரவிக்கும் பொருட்டு நாடகம் நடைபெறும். ஊரிலும், 'கெனில்ஓர்த்' மாளிகையிலும் நடிக்கப்பட்ட நாடகங்களுக்குச் சங்கீதப் பிரியரான தன் தந்தையொடு அதிக ஆவலுடன் இவர் சென்றிருக்க வேண்டும். இந் நாடகங்களே இவரிடம் இயற்கையாய் அமைந்து கிடந்த கவிதா—நாடக சக்திகளை எழுப்பி வளர்த்து வந்தன போலும்!

"ஆறிடு மேடும் மடுவும்போல் செல்வம்"—ஒரு சமயம் ஒருவரிடம் குவிந்து மற்றொரு சமயம் இன்னொருவரிடம் செல்லும் இயல்

காதலுக்கு, நாடு, மொழி, நிறம், வகுப்பு மதம், வயது, அந்தஸ்து முதலிய வேற்றுமைகள் இல்லை.

புடையதாகையால், ஷேக்ஸ்பியருடைய குடும்பம் கடனால் நொடித்ததால் இவர் பதின்மூன்றாம் வயதில் பள்ளிக்கூடத்தை விட அவசியம் ஏற்பட்டதென முன்னே கூறினோம். ஆனால் அவரது குடும்பம் வறுமையால் பீடிக்கப்படும்படி அவ்வளவு தாழ்ந்த நிலைமை யடையவில்லை. படிப்பை விட்டவுடன் அவர் கொஞ்சக்காலம் உபாத்தியாயராகவும், சில காலம் வக்கீல் குமாஸ்தாவாகவும் வேலைபார்த்ததாகத் தெரிகிறது.

விவாஹம்

1582-ம் ஆண்டு ஷேக்ஸ்பியர் பதினெட்டாம் வயதில் எட்டு வயதிற்கு மூத்த ஆன் ஹாத்வே என்ற மாதை மணந்தார்; ஐந்தாண்டுகள் இல்லறம் இனிதே நடைபெற்றது. அதற்குள் சூசனா என்ற பெண் மகவும், ஹேம்லட், ஜூடித் என்ற ஆணும் பெண்ணுமாகிய இரட்டைக் குழந்தைகளும் பிறந்தன.

இவ்விதம் மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான போதிலும், ஷேக்ஸ்பியர் சிறு வயதாயிருந்தமையால் அவருக்கு வாலிபக் குறும்பு போகவில்லை. இவருக்கு வேட்டையில் அதிக விருப்பம் இருந்ததால், வாலிபரோடு வேட்டைக்குச் செல்வது வழக்கம். ஒரு நாள் இவர் தன் நண்பர்களுடன் தாமஸ் லீஸி என்ற பிரபுவின் காட்டில் மான் வேட்டை யாடினதற்காகக் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் தண்டிக்கப்பட்டதாகவும், அதன் பின் இவர் தாமஸ் லீஸியை நிந்தித்துப் பாட, அவர் முனிந்து பல இன்னல்கள் இழைக்க, அவைகளைத் தாங்கமாட்டாமல் ஊரைவிட்டு லண்டன் நகருக்கு ஓடினார் என்பர் ஒரு சாரார். மான் திருடினது கற்பனைக் கதையென மறுத்துத் 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற கருத்தை மனத்திலிருத்தி ஷேக்ஸ்பியர் லண்டனுக்குப் பொருள் தேடப் போனார் எனக் கூறுவர் மற்றொரு சாரார். காரணம் எவ்விதமிருப்பினும் ஷேக்ஸ்பியர் 1587-ம் ஆண்டு லண்டனை அடைந்தார் என்பதில் யாதொரு அபிப்பிராய பேதமுங் கிடையாது.

லண்டனில் ஷேக்ஸ்பியர்

ஷேக்ஸ்பியர் லண்டன்மா நகரை யடைந்தபோது, எலிஜபத் மஹாராணியார் அரசாண்டார்கள். அவ்வம்மை காலத்தில் அந்நிய தேசத்தார் பயமின்றியும், உள்நாட்டுக் கலகமின்றியும் நாட்டில் அமைதி நிலவியிருந்தது. ஆகையால் இங்கிலாந்து செல்வத்திலும் கல்வியிலும் செழித்தோங்கிற்று. இக் காலத்தில்தான் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியார் நம் நாட்டிற்கு வியாபாரத்திற்கு வந்தனர். இங்கி

எல்லா உயிர்களிலும் வீற்றிருக்கும் பரம்பொருள் ஒன்றே.

லாந்தில் பொது ஜனங்களிடை அறிவுத் தாகம் அதிகமிருந்தது. அதைத் தணிப்பதற்கு பத்திரிகைகள், நாவல்கள், படக் காக்ஷிகள் முதலான சாதனங்கள் அக் காலத்தில் கிடையாது. அக் காலத்தில் நாடகமே பொழுது போக்கிற்கும், அறிவு புகட்டுவதற்கும் நல்ல சாதனமாயிருந்தது. நாடகத்திற்குப் பொது ஜனங்களின் ஆதரவு அதிகமாயிருந்ததினால், படித்தவர்கள் நாடகமெழுதுவதிலும் நடிப்பதிலுமே தங்கள் முழு கவனத்தையும் செலுத்தினர். அக்கால நாடகாசிரியர்களாகிய க்ரீன், மார்லோ, பீல், போமண்ட—பிளச்சர், பென் ஜான்ஸன் ஆகியோர் நல்ல ஊதியமும், புகழும் பெற்று வந்தனர். தன் குடும்பத்தை மறுபடியும் உயர்த்தக் கருதிய ஷேக்ஸ்பியரும் வெகு சீக்கிரம் பொருளும், புகழும் சம்பாதிப்பதற்குச் சாதகமாயிருந்த நாடக வுலகில் இறங்கியது போற்றத் தக்கதாகும். இத் துறையில் அவர் வெற்றி பெற்றதற்கு அவரது இயற்கை நாடக—கவிதா சக்தியும், உழைப்பில் சலிப்பின்மையும் முக்கிய காரணங்களாகும்.

தமிழ் நாடகக் கலையைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறுகிறேன். இலக்கியத்திற்கும் வாழ்விற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ஒரு நாட்டின் மக்கள் உற்சாகமும், வீரமும் நிறைந்து வாழும்போது உதிக்கும் இலக்கியம் மேலானதாயிருக்கும். ஒரு நாடு க்ஷீணதசையில் இருக்கும் போது எழும் இலக்கியம் உபயோகமற்றதாயிருக்கும். எலிஜபெத் ராணி காலத்தில் இங்கிலாந்து உற்சாகம் நிறைந்து விளங்கினதால், அக் காலத்தில் ஆங்கில நாடகக் கலை உச்ச நிலை யடைந்தது. தற்காலம் ருஷியா விழித்தெழுந்து புன்முறுவலுடன் தொழில் புரிந்துகொண் டிருப்பதால், அங்கு புத்தம் புதிய நாடகங்கள் எழுதப் படுகின்றன. நவீன முறையில் மின்சாரத்தால் இயக்கப்படும் நாடகசாலைகள் ஆயிரக் கணக்கில் கட்டப்படுகின்றன. ருஷியாவின் தலை நகரான மாஸ்கோவில் மாத்திரம் ஐயாயிரம் நாடகசாலைகளாம்! நம் தமிழ் நாட்டில் நாடகக் கலையின் நிலை அந்தோ பரிதாபம்! சரித்திர காலத்திற்கு முன்னால் எழுதப்பட்ட குலேபகாவலியும், சதாரமும், கோவிலனும், ஹரிச்சந்திரனும் தான் இன்றும் நடக்கின்றன. தமிழ் நாடக அரங்கத்தில் பாடகர்களைப் பார்க்கிறோமே யல்லாமல் நடிகர்களைக் காண்பது அருமையாயிருக்கிறது. இந் நிலைமை தமிழ் நாடு இன்னும் இக் கலையில் தூங்கிக்கொண்டிருப்பதை உணர்த்துகிறது. பழைய தமிழ் நாடக நூல்களை வங்காள குடாக்கடலில் வீசி யெறிந்து விட்டுப் புத்துயிர் அளிக்கும் நவீன நாடகங்கள் தமிழில் எழுதப்பட வேண்டும். இப்பொழுதுள்ள நாடகக் கொட்டகைகளை இடித் தெறிந்து அழகிய நாடகசாலைகளைக் கட்ட வேண்டும்.

வாழ்வு பழக்க வழக்கங்களின் தொகுதி.

லண்டனில் அநேக நாடகக் கொட்டகைகளிருந்தன. முனிஸிபாலிடி, நாடகசாலைகளை ஊருக்குள் கட்டுவதற்கு அனுமதியளிக்காததால், நகருக்கு வெளிப்புறத்தில் அவைகள் அமைக்கப்பட்டிருந்தன. நாடகங்களுக்குச் செல்லும் தனவந்தர்கள் குதிரைகளில் ஏறிச் செல்லுவது வழக்கம். கையிலொரு காசுமின்றியும், ஆளுதவியின்றியும் லண்டன் சென்ற ஷேக்ஸ்பியர் 'குளோப்' நாடகசாலையில் நாடகத்திற்கு வருவோர்கள் குதிரைகளை கவனிக்கும் தொழிலில் அமர்ந்தார். கொஞ்ச காலத்திற்குப் பின் அந் நாடகக் கம்பெனியில் ஒரு நடிகரானார். நாளடைவில் சுய முயற்சியால் முன்னேறி, பிரபல நாடக நூலாசிரியராகிய மார்லோவின் நட்பைப் பெற்று அவருடைய உதவியால் பழைய நாடகங்களைக் காலத்திற்கேற்பப் புதிப்பித்தெழுதி நாடகம் அமைக்கும் சக்தியை விருத்தி செய்து கடைசியில் தானே சுயமாக நாடகங்களை இயற்றும் ஆற்றல் பெற்றார்.

இப் புவி ஒருவனுடைய வயதிற்கேறப மாறுபட்டுத் தோன்றும். அதற்குக் காரணம் மனிதன் பால்யத்திலும், வாலிபத்திலும், வயோதிகத்திலும் வெவ்வேறு வர்ண மனக் கண்ணாடியால் உலகை உற்று நோக்குவதாகும். ஒருவன் சிறு பையனாயிருக்கும் போது பொன் முட்டையிடும் வாத்துக் கதையைக் கேள்விப்பட்டவுடன் அதை உண்மையென நம்பி அவ்விதம் தனக்கும் ஒரு வாத்திருப்பின் நலமாயிருக்குமென ஆகாசக் கோட்டை கட்டுகிறான். காரண காரியங்களுடன் உலகம் இயங்குவது சிறு வயதில் புலனாவதில்லை. மணம் முடித்து இல்லறம் இனிதே நடத்தும்போது, இப் பார் துன்பம் கலவாத இன்ப மயமாகத் தோன்றும். வாழ்வில் கஷ்டப்பட்டு அனுபவம் முதிர முதிர உலகம் காரண காரிய நியதியால் கட்டுண்டு நடக்கிறதென்றும், அறிவு மயங்கித் தவறிழைப்பின் அதன் பயன் துக்கமென்றும் ஒருவன் நமக்குத் தீங்கிழைத்தால் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணமும் தோன்றல் இயல்பு. வயோதிகத்தில் குற்றம் பொறுக்கும் குணமிகுந்து இவ் வுலகு சாந்த மயமாகத் தென்படும் எனவே, ஒருவன் கருத்து வயதிற்கேற்ப மாறுவதுதான் அவனது அறிவின் வளர்ச்சிக்கும் அறிகுறியாகும்.

உற்சாகம் மிகுந்த வாலிப வயதில் லண்டன் நகரை யடைந்த ஷேக்ஸ்பியர் கவலையற்ற மனமாகிய வெள்ளைக் கண்ணாடியால் நோக்கியதால், உலகம் இன்பமயமாகத் தோன்றிற்று. ஆகையால் 1590-ம் ஆண்டு எழுதத் தொடங்கி 1600-ம் வருடம்வரை இன்பரச மிகுந்த பாடல்களும், இன்ப நிலை நாடகங்களும் (Comedies) இயற்றினார். 'வீனஸ்—அடோனிஸ்,' 'லுக்கிரிஸின் கற்பழித்தல்' ஆகிய இன்பப் பாடல்களும் இடைவிடா நகைப்பை விளைவிக்கும் 'தப்பிதத்தால்

தீய பழக்கத்தின் வலிமை கொடிது.

விளைந்த தமாஷ்,' 'வெனிஸ் வியாபாரி,' 'கோடைகால நடுநிசிக் கனவு' முதலிய இன்பநிலை நாடகங்களும், விகடன் பால்ஸ்டாப் திகழும் நாலாவது ஹென்ரி இரண்டு பாகங்கள், ஐந்தாவது ஹென்ரி முதலிய சரித்திர நாடகங்களும் இக் காலத்தில் வரையப்பெற்றனவாகும்.

'வீனஸ்—அடோனிஸ்' என்ற கவியை ஸவுத்தாம்டன் பிரபுவிற்கு ஷேக்ஸ்பியர் அர்ப்பணம் செய்ததையால் அவ்வள்ளல் இவருக்கு பெரும் சன்மானம் அளித்தார். பொருளீட்டும் நோக்கத்துடன் லண்டனை அடைந்த ஷேக்ஸ்பியர் செலவில் சிக்கனமா யிருந்து வந்தார். ஸவுத்தாப்டன் பிரபு கொடுத்த பணத்தால் தகப்பனார் பட்ட கடனை அடைத்தார். இவரது நாடகங்கள் ஜனங்களால் பெரிதும் விரும்பப்பட்டதால், அதிகமாய் நடிக்கப்பட்டு நல்ல வருமானம் பெற்று வந்தார். 1597-ம் ஆண்டு சொந்த ஊரில் அழகிய வீடொன்றும், ஏராளமான நிலமும் வாங்கினார். 1600-ம் வருடம் இரு முக்கிய நாடகக் கொட்டகைகளில் பங்காளியானார். இவ்விதம் இவர் லண்டன் போன பதிமூன்று வருடங்களுக்குள் செல்வமும் செல்வாக்கும் பெற்று உயர்நிலை யடைந்தார். 1600-ம் வருட முதல் 1607-ம் ஆண்டுவரை ஷேக்ஸ்பியர் துக்கமாகிய புகைபடிந்த கரிய மனக் கண்ணாடியால் உலகை உற்று நோக்கியதால், துன்பநிலை நாடகங்களை (Tragedies) எழுதினார். 'ஹேம்லட்' 'ஒத்தலோ,' 'லீயர்' மன்னன், 'மேக்பத்' முதலிய சிறந்த துன்பநிலை நாடகங்கள் இக்காலத்தில் வரையப்பட்டனவாகும். காண்போர் மனதில் கவலையும், கலக்கமும் ஒருங்கே விளைவிக்கும் சக்தியுடைய நாடகமே உயரிய துன்பநிலை நாடகமாகும். இவரது துன்பநிலை நாடகங்கள் இத்தன்மையுடையன என விளக்க 'மேக்பத்' என்ற நாடகத்தை சிறிது ஆராய்வோம். 'மேக்பத்' பிரபு ஸ்காட்லண்டு தேச மன்னனாகிய டன்கனின் தானைத் தலைவராவர். இவர் அரச பதவியில் மோகங்கொண்டு தன் வீட்டில் விருந்தினராக வந்திருந்த டன்கனைக் கொல்ல நினைக்கிறார். அவ்வெண்ணத்தை நிறைவேற்ற அவரது மனைவி பிடர் பிடித்துத் தள்ள அரசனைக் கொன்று மேக்பத் மன்னனாகிறார். ஆனால் டன்கன் புதல்வரிருவரும் தப்பியோடி இங்கிலாந்தின் படைவலியால் மேக்பத்தைப் போர்க்களத்தில் கொல்லுகிறார்கள். மேக்பத் மனைவி கொலையின் கொடூரத்தைச் சகிக்க முடியாது பைத்தியம் பிடித்து இறக்கிறாள். மாபெரும் சேனாதிபதியாகிய மேக்பத் பேராசைக்கு இடம் கொடுத்து சந்தர்ப்பம் இடம் கொடுக்கச் செய்த கொலைக் குற்றத்திற்கு அவர் மனச் சாக்ஷியால் மொத்துண்டு துயிலைத் துறந்து அரும் பொக்கிஷமாகிய மன அமைதியை இழந்து துக்கசாகரத்தில் கரை காணாது மூழ்கித் தவிப்பதை நோக்குங்கால் நம் கண்களிலும் கண்ணீர் சொட்டு

அவாவின்றி நாம் ஒரு சிறு காரியத்தையும் இயற்றல் முடியாது.

கிறது. மேலும் பாபத்தின் பயன் மரணம் என்பதை அறிவுறுத்தி நாமும் குற்றம் விளைவிப்பின் இக் கதியே நேருமென்ற திகிலை நம் மனதில் தோற்றுவிக்கிறது.

ஷேக்ஸ்பியர் சோகரசம் ததும்பும் துன்பநிலை நாடகங்கள் தொடர்ச்சியாக எழுதியதற்குக் காரணம் இக் காலத்தில் அவருக்குப் பல கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டு உலகம் துன்ப மயமாகத் தோன்றியிருத்தல் வேண்டும். இவரது குடும்பத்தில் துக்கம் உண்டாகும் சம்பவம் ஏதாகிலும் நிகழ்ந்திருக்க வேண்டும். இவருக்கு ஆதரவு அளித்து உயர்த்திய ஸவுத்தாம்டன் பிரபுவிற்கு தாழ்வு காலம் ஏற்பட்டது இவரது மனதைப் புண்படுத்தி யிருத்தல் வேண்டும். கவலையென்னும் எட்டிக் கனியை ருசி பார்த்த பின்தான் மனிதன் வாழ்வைப்பற்றி ஆழ்ந்து சிந்திக்கிறானாதலால், ஷேக்ஸ்பியரது சிந்தனா சக்தியும் இக்காலத்திலேயே முதிர்ச்சி யடைந்தது. இவருடைய துன்பநிலை நாடகங்களில்தான் இவரது மனோசக்தியின் மாண்பு காணக் கிடக்கிறது.

ஷேக்ஸ்பியர் லண்டனில் தங்கியிருந்த கடைசி காலமாகிய 1607-ம் வருஷ முதல் 1611-ம் ஆண்டுவரையில் எழுதிய நாடகங்களில் சோக ரசம் நிறைந்திருந்த போதிலும் இன்பமாக முடிகின்றன. இக் காலத்தில் இயற்றியவைகளில் 'சிம்பலின்,' 'மாரிகாலக் கதை,' 'புயற்காற்று' முக்கியமானவை. இத்தாலி தேசத்திலுள்ள மிலான் சமஸ்தான மன்னனாகிய பிராஸ்பரோ தன் தம்பி அந்தோனியோவிடம் அரசாங்க நிர்வாகத்தை ஒப்புவித்து, மாந்தரீக வித்தையில் மனதைச் செலுத்திவருகிறார். அந்தோனியோ நேப்பில்ஸ் அரசன் உதவியால் அரசனாகி, பிராஸ்பரோவையும் அவரது மகள் மிராண்டாவையும் ஒரு படகில் வைத்து நடுக்கடலில் விடுகிறான். தெய்வ சங்கல்பத்தால் அப் படகு மூழ்காது மத்தியதரைக் கடலிலுள்ள ஒரு தீவை அடைகிறது. பிராஸ்பரோ தன் மகளுடன் ஏரியல் என்ற தேவதையை மந்திர பலத்தால் குற்றேவல் செய்யச் சொல்லி அங்கு வசித்துவருகிறார். ஒருநாள் நேப்பில்ஸ் தேசத் தரசன், அவனுடைய மகன் பர்டினாண்டு, அந்தோனியோ முதலானோர் ஒரு கப்பல் படையுடன் ஆப்பிரிக்காவிலிருந்து இத்தாலி தேசத்திற்குத் திரும்பிச் செல்லும்போது இத் தீவிற்கருகில் வருகிறார்கள். இதையறிந்த பிராஸ்பரோ ஏரியலை ஏவிப் புயற்காற்று உண்டாக்கிக் கப்பல்களைத் தன் தீவிற்குக் கொண்டு வருகிறார். பர்டினாண்டிற்கும் மிராண்டாவிற்கும் காதல் அரும்புகிறது. பிராஸ்பரோ தன் தம்பியையும், ஜென்ம விரோதியாகிய நேப்பில்ஸ் தேசத்து மன்னனையும் மன்னித்துத் தன் மகளைப் பர்டினாண்

இச்சையே உலகத்தை ஆக்கியது.

டிற்குக் கன்னிகாதானம் செய்துகொடுக்கிறார். இந்நாடகத்தை 1607-ம் ஆண்டிற்கு முன் ஷேக்ஸ்பியர் எழுதியிருப்பரேல், துன்பநிலை நாடகமாகவே முடித்திருப்பர். பிராஸ்பரோ பழிக்குப் பழி வாங்கக் கருதி கப்பல்களைப் புயற்காற்றால் கடலில் கவிழ்த்தியிருப்பர். இக் காலத்தில் ஷேக்ஸ்பியர் சாந்த நிலையடைந்தார். மாலை வேளையில் மஞ்சள் வெயிலில், இப் புவி மனத்திற் கினிமையாகத் தோன்றுவதுபோல ஷேக்ஸ்பியருக்கும் வாழ்வு அன்பு மயமாய்த் தோன்றினமையால், இக் காலத்தி லெழுதிய நாடகங்களை இன்ப நிலை நாடகங்களாக்கினார்.

இறுதிக் காலம்

1600-ம் ஆண்டுக்குப் பின் ஷேக்ஸ்பியர் வருடம் ஒன்றுக்கு 3000 பவுன் வருமானம் பெற்றுவந்தார். சொந்த ஊருக்குத் திரும்பிப் போகும் காலத்தையே ஆவலுடன் எதிர்பார்த்து, அங்கு ஏராளமான நிலம் வாங்கினார். திரவியந் தேடும் நோக்கத்தோடு லண்டனையடைந்த ஷேக்ஸ்பியர், வாழ்க்கைப் போரில் வெற்றியுற்று வாகை மாலை சூடி, நாடகசாலைகளின் பங்குகளை விற்றுவிட்டு, 1611-ம் ஆண்டு ஸ்ராட்போர்டுக்குத் திரும்பினார். உலகம் போற்றும் ஒப்பற்ற தன் நாடகங்களை ஒன்று சேர்த்துப் புத்தக ரூபத்தில் ஷேக்ஸ்பியர் வெளியிடாதது ஆச்சரியமாயிருக்கிறது. அவைகளைப்பற்றிச் சிந்தனை சிறிதும் ஏனோ செலுத்தாது அவைகளின் கையெழுத்துப் பிரதிகளைக் கூடத் தன்னிடம் வைத்துக்கொள்ளவில்லை!

ஷேக்ஸ்பியர் ஸ்ராட்போர்டுக்குத் திரும்பிய பின் எழுத்து வேலையை அறவே விடுத்து அபரிமிதமான சந்தோஷத்துடன் கிராம சேவையில் காலத்தைக் கழித்து வந்தார். ஸ்ராட்போர்டு வாசிகள் இவரது சேவைக்காகப் பெரிதும் மரியாதை செய்து வந்தனர். ஊர்ப் பணி செய்துகொண்டிருந்த ஷேக்ஸ்பியர் நோய்வாய்ப்பட்டு, ஐம்பத்திரண்டாம் வயதில் பிறந்த தினத்தில் 1616-ம் வருடம் ஏப்ரல்மீ 13உ பூதவுடம்பு நீத்துப் புகழுடம்பு பெற்றார். பெரிய மனிதர்களைப் புதைக்கும் அவ்வூர்க் கல்லறையில் வெகு மரியாதையுடன் அடக்கம் பண்ணப்பட்டார். அவரது குழிமேட்டுக் கல்லில், "அருமை நண்பரே! என் குழியைத் தோண்டாதீரென ஏசுவின் பெயரால் கேட்டுக் கொள்ளுகிறேன். தோண்டாதவனைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக; தோண்டுகிறவனைச் சபிப்பாராக!" என வெட்டப்பட்டிருக்கிறது. இவ் வாசகம் ஷேக்ஸ்பியரால் எழுதப்பட்டதாகும். கேவலம் கல்லறைக் கல் தன் ஞாபகச்சின்னமாயிருக்க விரும்பியது ஏனோ? அக்கால மக்களைக் களிப்பிக்க எழுதப்பட்ட தன் நாடக நூல்கள் எக்கால மக்க

எந் நேரமும் மனதிற்கு ஏதாவது வேலை கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும்.

ளின் அறிவுத் தாகத்தைத் தணிக்கும் வற்றாத ஊற்றாக இலங்குமென ஷேக்ஸ்பியர் எண்ணவில்லைபோலும்! ஆம், பெரியோர் தங்கள் பெருமையை உணர்வதில்லை. ஷேக்ஸ்பியர் நூல்களைப் படிப்போர் மனம் இன்ப வாரிதியில் ஆழ்ந்து தத்தளியாது என் செய்ய முடியும்! இவரது நூலின்பத்தை நுகரும் மக்கள் இவரை எவ்விதம் மறப்பர்? உலகின் பல பாகத்தினின்றும் வருடந்தோறும் ஆயிரக்கணக்கில் இம் மகானின் கல்லறைக்கு யாத்திரை சென்று வருகின்றனர். இன்று ஷேக்ஸ்பியர் உயிர்பெற்று எழுந்தால், உலக மாந்தரால் போற்றப்படுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைவார் என்று சொல்லவும் வேண்டுமோ?

ஷேக்ஸ்பியரது புலமை

லண்டனிலுள்ள ஷேக்ஸ்பியரது நண்பர்கள் அவரது ஞாபகார்த்தமாக அவராக்கிய எல்லா நூல்களையும் ஒன்று சேர்த்து 1620-ம் வருடம் வெளியிட்டனர். அந்நாள் முதல் இந்நாள்வரை அஃது எடுக்க எடுக்கக் குறையாத அறிவுச் சுரங்கமாக ஒளிர்கிறது. அவரது நூல்கள் பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. நம் தாய் பாஷையிலும் அவரது நூல்கள் யாவும் மொழிபெயர்க்கப்படின் தமிழணங்கு சிறப்படைவாள். ஆயிரக்கணக்கில் உரைநூல்கள் பல தேச அறிவாளிகளாலும் எழுதப்பட்டிருக்கின்றன. லண்டனில் "ஷேக்ஸ்பியர் புத்தகாலயம்" ஒன்றிருக்கிறது. அதில் அவரது நூல்களும் உரை நூல்களும் மாத்திரம் வைக்கப்பட்டிருந்தால், வியாக்யான நூல்களின் தொகையை ஒருவாறு யூகித்துக்கொள்ளலாம். ஷேக்ஸ்பியர் முப்பத்தேழு நாடகங்களும், சில்லரைப் பாக்கள் பலவும் இயற்றியிருக்கிறார். "லுக்கிரிஸின் கற்பழித்தல்," "வீனஸ்-அடோனிஸ்" ஆகிய முக்கிய பாக்கள் இரண்டிலும் இன்பச் சுவை மலிந்திருத்தல் காணலாம். இவரது நாடகங்கள் யாவும் இன்பநிலை நாடகம் (Comedy), துன்பநிலை நாடகம் (Tragedy) ஆகிய இரு பெரும் பிரிவுகளில் அடங்கும்.

இன்பநிலை நாடகத்தில் முக்கிய நாடகப் பாத்திரங்கள் பல இன்னல்கள் அடைந்தபோதிலும், இறுதியில் இன்புறுகின்றனர். வெனிஸ் வியாபாரி, கோடைகால நடுநிசிக் கனவு, புயற்காற்று ஆகிய இவைகள் இன்பநிலை நாடகங்கள். அல்லி அர்ஜுனா என்னும் தமிழ் நாடகம் இவ்வினத்தையே சேரும். விஜயன் அல்லியை அடைவதற்குக் குறத்தி தந்த மாத்திரையைக் குளத்தில் உரைப்பதும், பாம்பின் கனம் குறைந்ததற்காகப் பாம்புப் பிடாரன் அல்லியை முனிவதும் ஆகிய நிகழ்ச்சிகள் உள்ளத்தை உவகையில் அமிழ்த்துவதுபோன்று, ஷேக்ஸ்பியரது

சோம்பேறியின் மனம் பேயின் கொமிற்சாலை.

இன்பநிலை நாடகங்களிலும் நகைச்சுவை, இன்பச்சுவை பொங்கித் ததும்பி மனதைப் பரவசப்படுத்துகிறது. வெனிஸ் வியாபாரியில் பூங்கொடி போர்ஸியா வக்கீலுடை தரித்து, நீதிமன்றம் சென்று தன் கணவனின் ஆருயிர் நண்பர் அந்தோனியாவை எமன் வாயிலிருந்து மீட்டி, என்றும் பிரியாமல் அணிந்திருக்க வேண்டுமென்று தன் பர்த்தாவிற்குக் கொடுத்திருந்த கணையாழியைப் பெறுவதும், அந்தோனியாவுடன் இல்லம் புகுந்தவுடன் கணவனைப் பிணங்கி இறுதியில் உண்மையுரைப்பதும் ஆகிய நிகழ்ச்சிகள் ஆனந்தத்தை அள்ளி யிறைக்கின்றன.

துன்பநிலை நாடகத்தில் கதாநாயகர்கள் ஆசாபாசத்தால் கட்டுண்டு கஷ்ட சந்தர்ப்பத்தில் சிக்கி, துன்பத்தி லுழன்று, இறுதியில் இன்னுயிரையும் இழக்கின்றனர். மேக்பத், ஹேம்லட், லீயர் மன்னன், ஒத்தலோ முதலியன கல்மனதையும் கரைக்கும் துன்பநிலை நாடகங்களாகும். கோவலன் நாடகம் இவ்வினம். கோவலன் மாதவியின் காம வலையிற் பட்டு, செல்வமிழந்து, சிரமப்பட்டு, மதுரையில் கொலையுண்பதும், ஆழ்ந்து விசாரியாது தன் கணவனைக் கொன்ற பாண்டியனைக் கண்ணகி அழித்து மதுரையை எரிவாய் மடுப்பதும், துயரையும் திகிலையும் ஏககாலத்தில் உண்டாக்குவதைப்போல ஷேக்ஸ்பியரது துன்பநிலை நாடகங்களிலும் சோகரசம் ததும்பி ஓடுகிறது. சகல கலைகளுக்கும் உறைவிடமாய், வாலிபத் திலகமாய் விளங்கும் ஹேம்லட் கயற்கண்ணாள் ஒபிலியாவைக் காதலிக்கிறான். அச் சமயம் அவரது பிதாவின் ஆவி தோன்றித் தன்னை வஞ்சகமாய்க் கொன்று நாட்டையும், நன் மனைவியையும் அபகரித்த கொடியோனாகிய தன் சகோதரனை வாழ்க் கிறையாக்கி வஞ்சம் தீர்க்க வேண்டுமெனப் பணிக்கிறது. இவ் வாணையை ஏற்ற ஹேம்லட்டிற்கு உலகம் உத்தமர் உறைவிடம் என்ற எண்ணம் மறைந்து, அசுரர் வாழும் ஆபாச இடமெனத் தோன்றினமையின், இப் பிரபஞ்ச வாழ்வை வெறுக்கிறான். உடம்பெடுத்ததிற்காகப் புலம்புவதும், மணப் பெண்ணாக மகிழ வேண்டிய ஒபிலியா பிணக்கோலமானதைப் பார்த்து ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்து அவளுடைய சவத்தின்மேல் விழுந்தழுவதும், முடிவில் சிற்றப்பனைக் கொன்று தானும் மடிவதும் எவருள்ளத்தையும் உருக்கும்.

ஷேக்ஸ்பியர் தன் நாடகங்களுக்கு வேண்டிய விஷயங்களைக் கற்பனா சக்தியால் சிருஷ்டியாது, பழங் கதைகளையும், சரித்திர நிகழ்ச்சிகளையும் நாடக ரூபத்தில் அமைத்தார். ஆகையால், இவரது நாடகங்களில் காணப்படும் அநேக கதைகளுக்காவது இன்சுவைக் கனிகளுக்

ஆண்டவன் குணங்களைச் சதா சிந்தித்துக்கொண்டிருப்பது தீய எண்ணங்களை ஒட்டுவதற்கு மகா நல்ல வழி.

காவது இன்று உலகம் இவரைப் போற்றவில்லை. 'அடுத்தது காட்டும் பளிங்குபோல்' தானுறையும் இப் பிரபஞ்சத்தைப் பிரதிபலிக்கும் ஆற்றல் வாய்ந்தவரே புலவர் பெருமான் எனப்படுவார். ஷேக்ஸ்பியர் இயற்கை வனப்புக்களைச் சொற் சித்திரங்களில் தீட்டியிருப்பதுடன் மக்கள் மனதையும் நன்கு பிரதிபலித்திருக்கிறார். மாலை வேளையில் உய்யான வனத்தில் வாவிகளில் நீர்க்கோழிக் கூட்டம் நீந்தி விளையாடுவதைக் கண்ணுறுவதும், தென்றலில் அலைந்தாடும் பூங்கொம்புகளினின்றெழும் வாசனையை முகர்ந்தும், கிளி குயில் முதலிய புள்ளினங்களின் சங்கீதங்களைக் கேட்டும் செல்லுவதுபோல இவரது நூல்களை வாசிக்கும்போது, ஆங்காங்கு தென்படும் வர்ணனைகள் மனதிற்கு இன்பமூட்டுகின்றன. எனினும் இயற்கை யணங்கின் எழிலைப் பாடுவதில் சிலர் இவரையும் தாண்டியிருக்கின்றனர் எனச் சொல்லலாம். ஆனால் நாடகப் பாத்திரங்கள் சிருஷ்டிப்பதில் இவருக்கு இணை இப் புவியில் எவரும் இல்லை என அஞ்சாது அறையலாம். "உலகம் பலவிதம்" என்பது பழமொழி. மாந்தர் குணத்திலும், செயலிலும், உருவிலும் வித்தியாசப்பட்டுத் தோன்றுவது பிரத்தியட்சம். குணத்திற்குத் தக்கபடி நடை யுடை பாவனை அமையும். இயற்கையோடு ஒப்ப ஷேக்ஸ்பியர் உண்டாக்கியிருக்கும் எண்ணற்ற நாடகப் பாத்திரங்களும் ஒருவருக்கொருவர் வித்தியாசப்பட்டே விளங்குகின்றனர். இவரது பேனாவாகிய மந்திரக் கோலால் கட்டி எழுப்பப்பட்ட ஹேம்லட், மேக்பத், ஒத்தலோ, பால்ஸ்டாப் ஆகிய ஆடவர்களையும், டெஸ்டிமோனா, போர்ஸியா, ஒபிலியா போன்ற வனிதா ரத்தினங்களையும் கேவலம் ஷேக்ஸ்பியர் மூளையிலிருந்து உதித்த கற்பனை மக்கள் எனக் கருத முடியவில்லை. உயிருள்ளவர்களாகவே தோன்றுகின்றனர். நாடகப் பாத்திரங்கள் சிருஷ்டித்திருப்பதில்தான் ஷேக்ஸ்பியரது சிந்தனா சக்தியின் ஆழமும், கற்பனா சக்தியின் உயர்வும் புலனாகின்றன. ஆம், மக்களின் உள்ளத்தை அவர்களின் வாக்கிலும், செயலிலும் பிரதிபலிக்கும் வன்மையில் எப் புலவரும் இவருக்கெதிரில் நிற்றல் முடியாது.

பால்ஸ்டாப்

நாடகப் பாத்திரம் சிருஷ்டிக்கும் சக்தியை விளக்க இவர் மனதிலிருந்து உதித்த விகடர்களுக்கெல்லாம் அரசனாக விளங்கும் பால்ஸ்டாப்பைப்பற்றிச் சிறிது கூறுவோம். பால்ஸ்டாப் இளவரசராகிய ஐந்தாவது ஹென்றியின் விகடன். பருத்த சரீரமும், உண்ண உண்ண விசாலிக்கும் சால்போன்ற தொந்தியும் உடையவன். "நீ உன் பாதங்

தினந்தோறும் செய்யும் ஆழ்ந்த சிந்தனையால்—தியானத்தால் எல்லாத் தீய பழக்கங்களையும் மாற்றி, உயர்வை அடைந்து நம்முள் புதியதொரு சக்தியைப் பெற்று சிறப்படையலாம்.

களைப் பார்த்து எவ்வளவு காலமாகும்?'' என ஹென்ரி அவனைக் கேட்க, ''நான் வாலிபனுயிருக்கையில் பார்த்ததுண்டு'' என விடையிறுக்கிறான். முகத்தைக் காட்ட வேண்டாமென முனிந்த அரசன் முன் முகத்தை மூடிச் சென்றவனும், திருடர்களைக்கொண்டு தோட்டத்திற்கு நீர் பாய்ச்சிப் ''பொழுது புலர்ந்துவிட்டது, நிறுத்துங்கள், நிறுத்துங்கள்'' எனக் கூவியவனுமான தேன்ஞலிராமனைத்தான் பால்ஸ்டாபிற் கீடாகப் பகரலாம். இவனது வாக்கும் செயலும் நகைப்பையே விளைவிக்கின்றன. ஐந்தாவது ஹென்ரி போருக்குச் சிப்பாய்கள் சேர்க்கும்படி பால்ஸ்டாபிடம் பணம் கொடுத்தனுப்புகிறார். அதைக் கண்டவாறு செலவழித்துவிட்டு, எலும்பும் தோலுமாயுள்ள பிச்சைக்காரர்களைச் சொற்பச் செலவில் திரட்டி, அவர்களுக்குத் தலைவனைக் கண்டோர் நகைக்க லண்டன் மாநகரின் வீதி வழியாகப் போர்க்களம் நோக்கிச் செல்லுகிறான். அந்தச் சேனையைப் பார்த்த ஐந்தாவது ஹென்ரி ''உடலுறுதியற்றவர்களை ஏன் படையில் சேர்த்தாய்?'' எனக் கேட்க, ''திடத் தோள்வீரர்களும் போர்க்களத்தில் மடிந்து மண்ணோடு இரண்டறக் கலக்கத்தான் போகிறார்கள். இவர்களென்ன அதற்குத் தகுதியற்றவர்களா?'' எனப் பதிலளிக்கிறான். போர்க்களத்தில் பால்ஸ்டாபை ஒரு வீரர் எதிர்க்கிறார். சற்று நேரம் வாள் போர் புரிந்து குப்புற விழுந்து இறந்ததுபோல் பாசாங்கு செய்கிறான். அந்த வீரர் விழுந்தவனை வெட்டாது விட்டுச் செல்லுகிறார். சற்றுநோம் கழித்து மெதுவாகக் கண்களை விழித்து, நான்கு திக்கிலும் நோக்கிப் பகைவர் சமீபத்திலில்லாமை கண்டு எழுந்திருக்கிறான். ஹென்ரியால் குத்தி வீழ்த்தப்பட்ட அஞ்சா நெஞ்சம் படைத்த ஹாட்ஸ்பரின் சவம் அருகில் கிடப்பதைப் பார்க்கிறான். அவரும் தன்னைப்போல் பாசாங்கு செய்துகிடந்து எழுந்துவிட்டால் ஆபத்தெனக் கருதி, அப் பிரேதத்தின் மேல் நாலைந்து தடவை வாளால் குத்துகிறான். இத் தருணம் ஹென்ரி அங்கு வந்து ''இறந்துகிடந்த நீ எவ்விதம் உயிர்பெற்றாய்'' என வினவ, ''நான் இவ் வீரரோடு நெடுநேரம் கடும்போர் புரிந்து வெட்டி வீழ்த்தினேன். இவரைக் கொன்ற கௌரவம் என்னைச் சேர்ந்தது'' என்கிறான். இவ்விதம் குருதி வெள்ளம் பாய்ந்தோடும் போர்க்களத்திலும் பால்ஸ்டாபின் விகட புத்தி போகவில்லை. இவனைப் படைத்த ஷேக்ஸ்பியரின் நாடக சக்திக்கும் ஓர் அளவுண்டோ?

ஷேக்ஸ்பியர் ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்து, லண்டன் மாநகரத்தில் வாழ்க்கைப் போரில் வெற்றிபெற்றுக் கடைசி காலத்தைத் தன் சொந்த ஊரில் கழித்தார். இவரது நூல்கள் அகவுலகையும் புறவுலகையும் தெற்றெனப் பிரதிபலிக்கும் பெருமை வாய்ந்தன. இவரது நூல்களில் இயற்கை எழில் சொற்சித்திரங்களில் தீட்டப் பெற்றிருப்பதுடன், வையத்தார் உள்ளக் கருத்துக்கள் யாவும் பொதிந்து கிடக்கின்றன. ஆங்கில அணங்கு ஷேக்ஸ்பியரைத் தன் முடியில் சூடிப் பெருமை அடைந்துகொண்டிருக்கிறாள். இவரது நூல்கள் பல்வேறு பாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. புவிப் புலவர்களுக்கெல்லாம் ஷேக்ஸ்பியரே சக்கிரவர்த்தி என்பது பல்மொழி வல்லார் துணிவாகும். கார்முகில்போல சதா அறிவு மழை வருஷிக்கும் நூல்களை ஈந்த ஷேக்ஸ்பியருக்கு உலகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது.

தீய பழக்கத்தால் கெடும் மானிடர் கோடா கோடி.

கிறிஸ்துநாதரின் உயிர்த் தியாகம்.

(ரெவரண்டு ஜே. பி. கிரிகரியின் பிரசங்கத்தின் மொழிபெயர்ப்பு.)

பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன் சிலுவை மரத்தில் ஏசுநாதர் தமது பிராணனைப் பலியாக்கிக் கொடுத்தார். இப் பெரிய தியாகத்தின் சரிதை தேசங்கள்தோறும் பல வேறு பாஷைகளில் எழுதப்பட்டு வருகிறது. உலக முடிவு பரியந்தம் வரவிருக்கும் தலைமுறையார்களுங்கூடக் கிறிஸ்துநாதரின் மரணத்தைச் சிந்தித்தும் பிரசங்கித்தும் வருவார்கள்.

அக் காலத்துச் சரித்திராசிரியர்கள் இச் சம்பவத்தைப் பலவாறாக வருணித்திருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் தனித் தனியே கிறிஸ்துநாதருடைய சிலுவை மரத்துப் பலியை விவரித்துக் காவியங்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் கூறும் விஷயங்களில் எவ்வித முரண்பாடுமில்லை. எழுதப்பட்டுள்ள சரித்திரங்களில் இப் பெரிய தியாகத்தின் விசேஷங்கள் பொருத்தமுள்ள முறையில் விளக்கப்பட்டிருக்கின்றன. உலக சரித்திரங்கள் மட்டுமல்ல, பெற்றோர்கள் பிள்ளைகளுக்குத் தலைமுறை தத்துவமாகச் சொல்லி வைக்கும் பாரம்பரை ஐதீகங்களுங்கூட இச் சம்பவத்தை நிரூபிக்கின்றன. தத்துவ

ஆண்டவர் அபார அண்டத்தையும் அதில் அடங்கிய அனைத்தையும் அன்புடன் மானிட மக்களுக்கே கொடுத்திருக்கிறார். அவைகளை அறிந்து உபயோகித்து அனுபவிக்க வேண்டியது மனுஷ சமூகமே.

சாஸ்திரம் முதற்கொண்டு ஏனைய சாஸ்திரங்களும் இவ் வுண்மையை ஸ்திரப்படுத்துகின்றன. ஆகையால் சிலுவை மரத்தில் கிறிஸ்து நாதர் செய்த உயிர்த் தியாகம் மறுக்கக் கூடாத ஓர் சத்தியம்.

சரித்திரங்களில் கூறப்படும் இப் பெரிய பிராண பலியை நாம் ஆராய்ந்து பார்க்க பல வேறு மார்க்கங்களைக் கூறலாம். இவ்வளவு பரிதபிக்கத் தக்க சம்பவம் நாடகங்களிலுங்கூட வருணிக்கப்படவில்லை. எல்லோருக்கும் நன்மையே செய்துகொண்டு வந்த ஏசுநாதர் தம் மினத்தவராலே கொலைபுரியப்பட்டார். குற்றமற்றவர்கள் பலர் தண்டிக்கப்பட்டவர்களாயினும், கிறிஸ்துநாதருக் கிடப்பட்ட கொடிய தண்டனையில் விளங்குவது போன்ற நீதித்தவறு இழைக்கப்பட்டிருப்பதாக எக் காலத்தும் எந்தப் புஸ்தகத்திலும் குறிக்கப்படவில்லை. ஏசுநாதர் தண்டனைக்குரிய குற்றம் எதுவும் செய்யவில்லையென்று அவரை விசாரித்த நீதவான்கள் அனைவரும் ஏகோபித்த அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். இவருக்கு மரண தண்டனையிட்டவருங்கூட "இவரிடத்தில் எந்தக் குற்றத்தையும் காணேன்" என்று பகிரங்கமாகச் சொன்னார். ஆனாலும் மாசற்றவரென்று ஒப்புக் கொள்ளப்பட்ட ஏசுநாதருக்கு மரண தண்டனை யிடப்பட்டது.

எங்கும் கேட்டிராத விசேஷம்

மதக்கோட்பாடுகளில் கிறிஸ்துநாதருடைய மரணம் முக்கியம் படைத்தது. ஏனெனில் கிறிஸ்து மார்க்கத்திற்கு இதுவே அஸ்திவாரம். கிறிஸ்துவானவர் சிலுவையில் மரிக்காதிருந்தால், கல்லறையிலிருந்து அவர் உயிர் பெற்று எழுந்திருக்க முடியாது. அவர் உயிர்த்தெழாதிருந்தால், கிறிஸ்து மதம் புனிதமடைந்து மக்களுடைய மனங்களைக் கவரும் சக்தி பெற்றிராது. ஏசுநாதர் தம் உயிரைச் சிலுவை மரத்தில் பலிகொடாதிருந் திருப்பாராயின் உண்மைத் தியாகத்தைக் கிறிஸ்து மதம் அறிந்திராது. மேலும் சகல மதங்களுக்கும் தியாகமே அஸ்திவாரமாக விருக்கிறபடியால், தியாகமில்லாத மதம் தோன்றியிருக்கக் காரணமில்லை.

அன்றியும் கிறிஸ்து மதத்தின் சாரம் சிலுவைப் பலியில் அடங்கியுள்ளது. கிறிஸ்துவைப் போதிக்க வந்த அர்ச் பவுல் சிலுவை மரத்திலுயிர்விட்ட நாதனைக் குறித்துப் பிரசங்கிக்காதிருந்தால், போதகர் தொழிலுக்குத் துரோகஞ் செய்ததாக எண்ணப்பட்டிருப்பார். "வழியும், உண்மையும், உயிரும் நானே" என்று கிறிஸ்துநாதர் தம்மைப்

மனித வளர்ச்சியை எவ்விதத்திலும் தடைப்படுத்தும் அல்லது நாசப்படுத்தும் மதச் சட்டங்களையோ தேசச் சட்டங்களையோ சமூகச் சட்டங்களையோ மனிதர் நாசப்படுத்தினாலன்றி மானிடர்கள் ஒருக்காலும் முன்னேற முடியவே முடியாது.

பற்றிக் கூறியுள்ளார். ஆயினும் அவர் சென்ற வழி சிலுவை மரம் நாட்டப்பட்ட கல்வரி மலையை நோக்கினது. சிலுவை மரத்தில் தொங்கும் பொழுது, ரோமர் படைத் தளகர்த்தன் ஒருவன் கிறிஸ்து நாதர் வழி திருபயினான். "உண்மை என்ன"வென்று பிலாத், தான் கேட்ட கேள்விக்கு இச் சம்பவம் தக்க விடையாகவு மிருந்தது. சிலுவை மரத்தில் உயிர்விட்ட நாதர் நித்திய ஜீவியத்தை மக்களுக்கும் பெற்றுத் தந்தார்.

கிறிஸ்து மார்க்கத்தின் வெற்றியும், மகிமையும் கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கையும் ஆதரவும் ஏசுநாதருடைய தியாகத்திலிருந்து பிறக்கின்றன. ஏனெனில் அவர் சிலுவையைக் கொண்டே தீய வழிகளுக்கு இழுக்கும் சக்திகளை வென்று சாவின் பயங்கரத்தைப் போக்கி உலகத்தை மீட்டிருக்கிறார். "எந்தக் கிறிஸ்தவன் தன்னுடைய சிலுவையைத் தூக்கிக்கொண்டு அவர் பின் செல்லுகிறானோ, அவன் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை" என்று ஏசுநாதர் கூறியிருக்கிறார்.

சிலுவைத் தியாகம் உலக சரித்திரத்தில் கேட்டிராத மாறுதல்களை உண்டுபண்ணி யிருக்கிறது?

உலகத்தின் மத்திய ஸ்தானம்

கிறிஸ்துநாதரின் மரண காலத்தில் ரோமருடைய ஆக்ஷி உலகமெங்கும் சிறந்து விளங்கியது. பிரளய காலத்துக்குப் பின்னுள்ள 2000 வருஷ உலக ஞானம் அனைத்தும் அவர்கள் வசம் அடங்கியிருந்தது. எல்லா சுக போகங்களையும் அவர்களே அனுபவித்து வந்தார்கள். அந்நிய நாட்டு விலை பொருட்கள் கடல் மார்க்கமாக ரோம் நகர் வந்து சேர்ந்தன. உலக வர்த்தகத்தில் அந் நகர் தலைமை பெற்றிருந்தது. அத்லாந்திக் சமுத்திரத்திலிருந்து யூபிராட்டிஸ் நதிவரையிலும் ஆப்பிரிக்காக் கண்டத்துப் பாலை வனங்களிலிருந்து ரைன் நதி, டானியூப் நதிவரையிலும் ரோமருடைய அதிகாரம் வலுத்து நின்றது. ஆயினும் ஒரு சிலரே அவற்றை அநுபவித்து வந்தார்கள். ஏனென்றால் ரோமருடைய பேரும் கீர்த்தியும் அவர்களுடைய அடிமைகள் செய்து வந்த ஊழியங்களிலிருந்து பெறப்பட்டன. அடிமைகளில்லாத வீடுகளை அக் காலத்தில் காண்பதரிது. செல்வச் செருக்கு ரோமருடைய புத்தியை மழுக்கிவிட்டது. மக்கள் விருப்பினபடி நடந்து சுகாநுபாவங்களை நுகர வேண்டியதே வாழ்க்கையின் நோக்கமென்று அவர்கள் கொண்டார்கள்.

எண்ணங்களாலேயே நாம் உயர்வு அடைகிறோம்; எண்ணங்களாலேயே நாம் தாழ்வு அடைகிறோம்.

ஏற்பட்ட மாற்றம்

கிறிஸ்துநாதருடைய மரணம் மேலே கூறிய எண்ணத்தை முற்றிலும் மாற்றியது. ஏனெனில் துன்பமும் துயரமும் இன்பத்திற்கு வழியாகக் கொள்ளப்பட வேண்டுமென்று கிறிஸ்து மதம் போதிக்கத் தலைப்பட்டது. இவ்வித போதனை எந்தக் காலத்திலும் வெளிவந்ததில்லை; ஏசுநாதருடைய சிலுவைப் பலியிலிருந்து மக்களுடைய மனங்களில் இவ் வெண்ணம் உதித்தது.

துக்கமும் துயரமும் மனித சுபாவத்திற்குரியன. ஆயினும் அவற்றை நாம் தண்டனைகளாகவே எண்ணி வருகிறோம். துக்கமும் துயரமும் தண்டனையின் அடையாளங்கள் என்று நாம் நினைக்குந்தோறும் அவை நம்மைத் துன்புறுத்து மென்பதில் சந்தேகமில்லை. அவைகள் வரவிருக்கும் இன்பத்தை அறிவிக்கும் முன்னோடிகள் என்று நாம் எண்ணத் தொடங்கினால் கவலைகொள்ள ஏதுவிராது.

கிறிஸ்துவானவர் எவரும் செய்யத் துணியாத காரியத்தைச் செய்து முடித்தார். மக்கள் அநுபவிக்கும் துன்பங்கள் அவர்களுக்குப் பலனளிக்கக் கூடிய மார்க்கமென்று சிலுவை மரத்திலிருந்து அவர் கற்பித்தார். மறுக்கப்பட்டிருந்த நித்திய ஜீவியத்தை அவர் தம் தியாகத்தால் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தார்.

நூதன எண்ணம்

ஏசுநாதருடைய மரணத்திற்குப் பின்னும் துன்ப துயரங்கள் மக்களை வாட்டி வருகின்றனவென்றாலும், அவைகள் வரவிருக்கும் பாக்கியங்களின் அறிகுறிகள் என்று கிறிஸ்து மார்க்கம் போதிக்கிறது. ஆகவே மேலே கூறிய கிறிஸ்து மதப் போதனையினால் மக்களிடம் கோழைத்தன மதிகரிக்காமலிருந்து வருவதுடன், அவர்கள் பொறுமைசாலிகளாகவும் தாராள சிந்தை நிறைந்தவர்களாகவும் காணப்படுகிறார்கள். ஏனெனில் வாழ்க்கையில் குறுக்கிடும் துன்ப துயரங்களை ஜெயித்தால் மட்டும் பேரின்ப பாக்கியங்களுக்கு அடிகோலப்படும் என்ற சித்தாந்தம் சிலுவை மரத்திலிருந்து போதிக்கப்பட்டிருக்கிறது.

வெளி உலக விஷயங்களை ஒன்றுமே அறியாது, அனுபவியாது, அறிவிருந்தும் அறியாதவர்களாய்க் கண்ணிருந்தும் குருடராய்க் காதிருந்தும் செவிடர்களாய் அறியாமை என்னும் அந்தகாரத்தில் அடைபட்டு மந்தைகளில் மாடுகள் போன்று மாதர்கள் எத்தனை ஆண்டுகளுக்குத்தான் கஷ்டப் பட்டுக்கொண் டிருப்பார்கள்?

காதலர் இருவர்.

திரு ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.

வில்லியம் ஷேக்ஸ்பியர் ஆங்கில நாட்டு மகா கவி. வாடும் மனித இதயத்துக்கு இன்னமுது ஊட்டும் இங்கித நண்பன்; முக்காட்டைத் திறந்து, முக மூடியைக் கிழித்து, மனித உள்ளத்தில் ஓட்டி, அதை வெளிப்படுத்தும் சிறந்த அன்பன். காதலர் ஊடலை கவலைகொண்டு வருணிக்கும் அருமையான ஆசிரியன். இந்த மகான் 37 நாடகங்கள் எழுதியிருக்கிறார். அவைகள் பல்வேறு வகையுள்ள வாழ்வை விளக்கிக் காட்டியிருக்கின்றன. அவைகளிலே காதலின் சிறப்பையும், கொடுமையையும், பயங்கரத்தையும், இனிப்பையும் துயரத்தையும், தூய்மையையும், படுகுழியையும், மண மண்டபத்தையும் ஒருங்கே கூட்டி விளக்கிக் காட்டும் நாடகங்கள் மூன்றே. அவைகள் **ஹாம்லெட்** என்றும் **ஒதெல்லோ** வென்றும், **ரோமியோ ஜூலியத்** என்றும் பெயர்கள் தாங்கியவை. நமது நாட்டு ஹிந்து—முஸ்லீம் காதலை நான் நினைக்குங்கால், அந்த மூன்று நாடகங்களும் என் மனக் கண்ணில் தோன்றாமலிருப்பதில்லை. அதிலும் ஒதெல்லோவும், ரோமியோ ஜூலியத்தும் என் மனதைக் கொள்ளை கொள்ளுகின்றன.

*   *   *   *   *

ரோமியோ ஜூலியத்து நாடகத்தின் கதைச் சுருக்கம் பின் கண்டவாறு:— இதாலியா தேசத்து ஒரு நகரில் இரண்டு குடும்பங்கள் வசித்து வந்தன. அவை இரண்டுள்ளும் தீராப் பகை; எனவே, அந் நகரம் ஆறாத்துயர ஆழ்கடலில் அமிழ்ந்து நின்றது. **மாண்டேகு** என்று ஒரு கூட்டத்தாருக்குப் பெயர். காபுலெட் என்று வேறு வகுப்பார் அழைக்கப்பட்டனர். இரு வகுப்பாரில் இருவர் எப்போதேனும் தெருவில் சந்தித்து விட்டால், உடனே பூசல், பின்னர் சண்டை, இறுதியில் குத்தும் கொலையும் நேருவது மிக மிகச் சாதாரணம். மாண்டேகு வமிசத்தில் ரோமியோ பிறந்தான். காபுலெட் குலத்தில் ஜூலியத் உதித்தாள்.

தேசாபிவிருத்திக்குத் தடைகளா யிருக்கும் எல்லாவித கண்மூடிப் பழக்க வழக்கங்களையும் மண்மூடிப் போகச் செய்தாலன்றி தேசாபிவிருத்தி யென்பது வீண் கனவே யாகும்.

இவர்கள் இருவருக்குள்ளும் ஒளி மறைந்த காதல், ஆனால் நிறைந்து ததும்பும் அன்பு மணம் என்றால் இருவருக்குள்ளும் இல்லாவிடில் மரணம் என்பது காதலர்களின் தீர்ப்பு. இதை அறிந்த இரு குடும்பத்தாரும் திகைப்பும் வருத்தமும் கோபமு மூண்டு, மரணத்தைத் தடுக்க அரும் பாடுபடுகிறார்கள். ஜூலியத்துக்கு வேறு வரன் பார்க்கப்பட்டான். காதலர் இருவருக்குள்ளும் ஒரு பாதிரியார் தூது. ஜூலியத்தின் மண நாள் நெருங்குகின்றது. இதற்குள் காதலர்கள் இருவரும் மறைந்து, ஒளிந்து சமயம் பார்த்து, பெரியவர்கள் அறியாமல் வீட்டுப் புறக்கடைச் சுவரிலும், தோட்டத்தின் மறைவிலும் முத்தமிட்டு, காதல் மிகுந்து, கனிமொழி பகர்ந்து, கட்டித் தழுவி, கண்ணீர் சொரிந்து, சிந்தை கலங்கி ஏக்க முற்றுப் பிரிகின்றனர். ரோமியோ நகர்விட்டு அகல்கின்றான்.

ஜூலியத் தன் மண நாள் அன்று மயக்கம் தரும் மருந்தொன்றை பாதிரியாரின் விருப்பத்திற்கிணங்கி குடிக்கிறாள். அவள் செத்துப் போனாள் என்று கொண்டு, அவளை உற்றார் உறவினர் அடக்கம் செய்கின்றனர். பாதிரியார் ரோமியோவிடம் சென்று அவனை அழைத்து வருகின்றார். ஆனால் மயக்க மருந்தைப் பற்றி சொல்ல மறந்துவிடுகிறார். ரோமியோ வந்தான் ஜூலியத் இறந்து அடக்கமாயிருப்பதாகக் கொண்டு, அந்த இடத்திலேயே தன்னைக் குத்திக்கொண்டு இறக்கிறான்.

ஜூலியத் மயக்கம் தெளிந்து விழித்துக்கொள்ளுகிறாள். காதலன் தனது காலடியில் மாண்டு கிடப்பதை காண்கின்றாள். வாழ்வே உயிர், காதலே வாழ்வு என்ற உண்மைப் பித்தை, மண்டையில் ஏற்றிக்கொண்ட உத்தமி ஜூலியத், தன் காதலன் சவத்தை மார்புடன் அணைத்து இறுகத் தழுவி, அரை நொடியில் இறக்கிறாள். பாதிரியார் தனது தவறை உணர்ந்து, தனது உயிரை மாய்த்துக் கொள்ளுகிறார். காதலின் இனிமையும் கொடுமையும்தான் என்ன? ரோமியோவும், ஜூலியத்தும் காதல் சித்திரங்கள். அவர்களைப் போல் மனம் பூரித்து, மணம் நாடும் ஹிந்துவும் முஸ்லீமும் உளம் வாடும்படி தவிக்கவிடும் மனிதர்கள் மனிதர்களாவார்களா?

*   *   *   *   *

"ஒதெல்லோ" மொரோகோ நாட்டு வீரன். 'டெஸ்டிமோனு' கன்னல் மொழியாள். ஒரு கிறிஸ்தவப் பெண். ஒதெல்லோ, டெஸ்டிமோனு வீட்டுக்கு வருவான். போர்த் திறனைக் காட்டும் வீரச்

நல்ல எண்ணங்களே நல்ல துணைவர்கள்; அவைகள் ஒருக்காலும் தவறுதலுக்குக் கொண்டுபோகாது. அவைகள் நல்ல காரியங்களைச் செய்யும்படி செய்து பூரண வாழ்விற்கு உதவி செய்யும்.

செயல்களை டெஸ்டிமோனுவுக்கு விரித்துரைப்பான். ஒதெல்லோவின் இயற்கை வீரமும், டெஸ்டிமோனுவின் இளகிய நெஞ்சமும் காதல் கூடத்தில் கலந்து பேசின. அவர்கள் இருவரும் இரண்டு உருவமாய், ஆனால் ஒருயிராய் அன்று முதல் விளங்கினார்கள். நடுவே வந்தான் 'அயாகோ.' அயாகோ சுய நலம் கொண்டவன். அவன் கெட்டவன் என்று மற்றவர் சொல்லுவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. புருஷனைத் தங்கள் வயப்படுத்த மருந்து கொடுக்கும் மனைவியர்களும் நம்மவர்களில் உண்டு என்பார்கள். அதிகாரத்தில் ஆசை கொள்ளுவது தவறாயிருக்கலாம். ஆனால் அது குற்றமல்ல; தேளுக்கு கொட்டாமலிருக்க முடியாது; அது அதன் இயற்கை.

அது போல், அதிகாரத்தில் பற்றுக் கொண்ட சுயநலப் பிரியனை அயாகோவுக்கு, காதலர்களின் இதயம் கண்ணுக்குப் புலப்படவில்லை. காதலைக் காணாமல் அவர்கள் இதயத்தில் காமம் ஒன்றை மட்டுமே அயாகோ கண்டான். அதற்கேற்றவாறு சூழ்ச்சி செய்யலானான். ஒதெல்லோ மூர்க்கன், முரடன், முன் கோபி என்றும், எனவே எப்பொழுதும் அவள் ஆபத்துக்குள்ளிருக்கிறாள் என்றும் டெஸ்டிமோனுவிடம் அயாகோ சொன்னான். டெஸ்டிமோனு நய மொழியினள்; ஆனால் நஞ்சு மனத்தினள் என்று ஒதெல்லோவிடம் சொல்லி, அவளுடைய கற்பைப் பற்றித் தூற்றினான் அயாகோ. சுருக்கம் என்னவெனில், ஒதெல்லோவின் பொறுமை, கோபமாக மாறி, கொழுந்துவிட்டு எரிந்தது. டெஸ்டிமோனுவின் இளகிய நெஞ்சம் தடுமாற்றமடைந்தது. ஒதெல்லோ பழி வாங்க நினைத்து டெஸ்டிமோனுவைக் கொடூரமாய் கொல்லுகிறான். கொன்ற பிறகு அயாகோ தன்னிடம் சொன்னது யாவும் பொய் என்று காண்கின்றான். பின்னர் தற்கொலை புரிந்து கொள்ளுகிறான். காதலின் பயங்கரத்தை கண் கொண்டு பார்க்க முடியாது. ஹா!

*   *   *   *   *

ஹிந்து—முஸ்லீம் காதலைப் பற்றித்தானோ, ஷேக்ஸ்பியர் இவ்விரு நாடகங்களையும் எழுதி வைத்தார் என்று எண்ணும்படி நமக்கு அவ்வளவு பொறுத்தமாயுள்ளன. அவ்விரு நாடகங்களும். "காதல், காதல், காதல், காதல் போயின்,—சாதல், சாதல், சாதல்" என்று மனித வாழ்வைப்பற்றி சுருக்கமாகச் சொல்லி முடித்தார் கவி பாரதியாரும். ஹிந்து—முஸ்லீம் காதல் என்பது கடவுளின் கட்டளை. இதை அறிந்தவர்கள் உணர்வார்கள். இயற்கை வீரமும்

எங்கு நன்மை இருக்கிறதோ அங்கு தீமை நீங்கிவிடும்; எங்கு சமாதானம் இருக்கிறதோ அங்கு குழப்பம் நிர்மூலமாக்கப்படும்; எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு பகைமை நீங்கிவிடுகிறது; எங்கு பரிசுத்தம் இருக்கிறதோ அங்கு எல்லாப் பாவங்களும் ஜெயிக்கப்படுகின்றன.

பிரதாபன்.

"ஞான வினோதன்"

கானோர் கோட்டையி லின்று பெருத்த கொண்டாட்டம். கோட்டை முழுவதும் நன்கு அலங்கரிக்கப்பட் டிருக்கின்றது. தரையில் நீல வானத்தையும், பசும் புல்லையும் பழித்துப் பஞ்சு போலவும, பட்டுப்போலவும் மிருதுவான—கிரேக்கர்கள் நெய்த உயர்ந்த-இந்திரநீல ஜமுக்காளம் விரித்திருக்கிறது. மணிமண்டபத் தூண்கள் எல்லாம் பல்வேறு பட்டுக்களால் மூடப்பட்டு மரகதத் தூண்களெனவும், மாணிக்கத் தூண்களெனவும், கோமேதகத் தூண்களெனவும் திகழ்கின்றன. சபாமண்டபத்திற்கு மேலே பச்சைப் பட்டு விதானம் விளங்குகின்றது.

விடிந்தது முதல் வாத்தியங்கள் கோஷித்துக்கொண் டிருக்கின்றன. சங்கங்கள் ஏங்கின. அதிர்ந்தன முரசம். காயகஸ்திரிகள் குயில்போன்ற குரலில் இசைத்துக்கொண் டிருக்கிறார்கள். இன்னொருபுறம் நாட்டியக் கச்சேரி நடக்கின்றது. ஆடவர்கள் போலே விளையாட்டுப் பயில்கிறார்கள் ஓர் சார். மற்றொரு சார் மல்யுத்தம் நடக்கிறது. ஜனங்கள் யாவரும் சபாமண்டபத்தில் கூடியிருக்கின்றனர், ஆனந்த சாகரத்தில் முழுகிப்போய்க் கிடக்கின்றனர்.

இளகிய உள்ளமும் ஒன்று சேர்ந்து வாழ்வது இறைவனுடைய கொடிய விதியாகும். இதை மறுப்போர் மனமின்றி, மானமின்றி, மாண்பு குன்றி மரிப்பவர்களேயாவார்கள். இந்த விதியின் வேதத்தையோ, வேகத்தையோ, போக்கையோ தடுக்க முயலுவோர்கள் காதலை அறியாதவர்கள்; காதலர்களுக்குச் சவக்குழி தோண்டுபவர்கள். காதலர்களுக்குள் ஒருவர் மரித்து மற்றவர் உயிர் வாழ்வது என்ற அற்ப வழக்கமில்லை. காதலர்களுக்கு உறவினர் என்று ஓங்கிப் பேசி நடிக்கும் மனிதர்கள் இதை உற்று நோக்குவார்களாக!

சந்தோஷத்தையும் சலிப்பையும் உண்டாக்கிக் கொள்கிறவன் மனிதனே.

இக் கோலாகலத்தி னிடையில்—இந்த சந்தோஷ சாகரத்தின் மத்தியில்—ஒரு ஜந்து துக்க மிகுதியால் பொருமிக்கொண் டிருக்கிறதென்றால் யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள்? அந்த ஜந்து யார்? அவள்தான் மணமகளான அகல்யா என்றால் யார் நம்புவார்கள்? இது வாஸ்தவந்தான். அகல்யா அடித்தலம் காணமுடியாத துக்கக் கடலில் ஆழ்ந்துவிட் டிருக்கிறாள்.

பிரதாபன் மேவார் நாட்டு முடிமன்னன். அழகிய தேகக்கட்டு உடையவன். திண் தோளான். கரியோராயிரம் தனி நின்று நொறுக்க வல்லான்; உலகமே தலைகீழாகக் கவிழ்ந்தாலும் மன வலி நீங்காதான். செல்வம் மிகுந்தோன்.

அகல்யா ஜெயசிங்கின் ஏகபுதல்வி. அருந்தவக் குழந்தை. அழகில் ஒப்புவமை இல்லாதவள். காதளவோடு பாந்து நீண்டிருக்கும் அவள் கண்கள் வீசும் ஒளி உயிர்க் கனலை வீரக் கொழுங் கனலாக்கிவிடும்.

அகல்யா கன்னிப் பருவம் அடைந்துவிட்டாள். இவளது பேரழகையும், நலங்களையும் கேட்டுவிட்டுப் பிரதாபன் அவள்மீது தீரா மையல் கொண்டுவிட்டான். அவளோடு கூடி வாழும் இன்பப் பெரும் பேற்றைப் பெரிதும் விரும்புகிறான். நிற்க,

ஜெயசிங்கும், பிரதாபனும் தீராப் பகைவர்கள். ஜெயசிங்கை எங்ஙனமேனும் வென்றுவிட வேண்டுமென்பது பிரதாபனின் நெடுநாளையக் கனவு. பிரதாபனைப் போரில் பங்கப்படுத்திவிட வேண்டுமென்று ஜெயசிங் வீராப்புக் கூறுகிறான். இருவரும் மற்றவரை எதிர்க்கத்தக்க சமயத்தையே நோக்கிக்கொண் டிருந்தனர். சமயமும் வாய்த்துவிட்டது. முன்னமே பிரதாபன் கொண்டுவிட்டிருக்கும் போர்புரியும் ஆர்வத்திற்கு அகல்யா மீது ஏற்பட்டிருக்கும் காதல் இன்ப நெய் வார்த்துவிட்டது. போரில் தனக்கே ஜெயம்! ஜெயலக்ஷ்மி தன்னையே அடைந்துவிடுவாள் என்று உறுதியாக நம்பிவிட்டான் பிரதாபன். அநேக ஆயிரம் ஜனங்கள்—சிந்தை துணிந்த ரஜபுத்திர வீரர்கள் அடங்கிய பெரியதோர் படையைத் திரட்டிக்கொண்டு கானோர் கோட்டையை எதிர்க்கப் புறப்பட்டுவிட்டான்.

பிரதாபன் தன்மீது படையெடுத்து வருவதை ஒற்றர்களால் அறிந்துகொண்டான் ஜெயசிங். இப்பொழுது நாட்டைப் பகைவன் கைகளி லகப்படாது காக்கவேண்டியது ஜெயசிங்கின் கடனாகிவிட்டது. எதிரியும் கிட்ட நெருங்கிக்கொண்டே வருகிறான்.

மோட்சமோ நரகமோ உன் நிலைகளே.

ஜெயசிங்கிற்குச் சோதனை நாள் நெருங்கிவிட்டது. தியாகம் கூவிக் கூவி அழைக்கின்றது. தன் உயிரை உலகநற்றாயின்—தனது நாட்டின் பலிபீடத்தில் வைத்துவிட வேண்டிய காலம் வந்துவிட்டது. இதையெல்லாம் கண்டு அஞ்சினானா ஜெயசிங்? இல்லவேயில்லை.

பிரதாபன் அகல்யாவைக் காதலித்தான். ஆனால் அகல்யா, பகதூர் சிங் எனும் இளங்கோவிற்குத் தன் இருதயத்தைத் தத்தம் செய்துவிட்டிருந்தாள். எனின் பிரதாபனுக்குக் கொடுக்க அவளிடம் வேறு இருதயம் ஏது?

ஜெயசிங் சிறிதும் கலங்காத ஊக்கமும், உள்வலியும், நாட்டின் மீது உண்மைப் பற்றும் கொண்டு நோகத் தான் அர்ச்சிக்கும் காலா தேவி கோவிலுக்குச் சென்றான்; வணங்கினான். "காலா தேவியே! சிவாஜியின் வீரமும், விஜயன் வில் திறமும், பீமனின் மனோ வலியும் எனக்கும், என் படைக்கும் கொடுத்து, உன் நாட்டையும், உன் பக்தர்களையும் இப்பெருந் துன்பத்தினின்று காப்பாய், அன்னையே!" என்று வேண்டிக்கொண்டு ஜெயசிங் தனது மந்திராலோசனை மண்டபத்திற் சேர்ந்துவிட்டான். அங்கு அன்று ஜனங்கள் யாவரும் கூடியிருக்கின்றனர். அரசன் வந்ததும் அவனுக்கு நல்வரவு கூறினார்கள். ஜெயசிங் யஜமான ஸ்தானம் வகித்துக்கொண்டான். அவனிரு நயனங்களும் தியாக உணர்ச்சி எனும் தீப் பறக்க, சக்தி மயமாக விளங்குகின்றன. இறுதியாக அவன் கூறுவான்: "பிரிய மகா ஜனங்களே! பிரதாபன் நம் மீது எதிர்த்துப் போராட வந்துகொண்டிருக்கிறான். நம்மை உணர்ச்சி யூட்டி வளர்த்த தாய், சக்தியன்னையின் உறைவிடமாக விருக்கும் நம் நாட்டை, இவ் வபாயத்தினின்று விடுவித்தல் நம் கடமை. எதிரி எத் தன்மையவனாயினும், சத்தியம் சிரம் காக்கும். இப் போர் தர்மப் போர். அதர்மத்தைத் தகர்த்தெறிவோம். தர்மம் தலை தூக்கிவிட்டது. மகா சக்தியின் அருள் நம்மிடம் பூரணமாயிருக்கின்றது. அச்சம் ஒழியுங்கள். உங்களுடைய தியாகம்தான் பாக்கி. என்னுடைய தீரம் தான் குறை! இவைகளை நாம் செய்து முடித்துவிடுவோமேல், சாமுண்டி—வீரசண்டி நமக்கு வெற்றியைத் தந்திடுவாள். நம் நாட்டைக் காத்திடுவோம்! தர்மமே ஜயம்! எழுமின்! விழிமின்!" என்றவன் கம்பீர சுரத்தில் கூறியதைக் கேட்டுவிட்டு ஜனங்கள் யாவரும் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டனர். தத்தமக்குள்ளே ஒவ்வொருவரும் சிறந்த தியாகிகளாகிவிட்டனர். எத்துணை மாறுபாட்டை சிருஷ்டித்துவிட்டன அவ் வீர மொழிகள்!

முதலாளி, தொழிலாளியை அடக்கியாள முயல்கிறான். தொழிலாளி முதலாளியை வெறுத்து, தொழில் வேற்றுமையை நீக்க முயலுகிறான்.

எழுந்தனர் ஜனங்கள்! அவர்களது அச்சமும் பீதியும் போன இடம் தெரியவில்லை. அவர்களிடம் தைரிய லக்ஷ்மியோடு வீர லக்ஷ்மியும் ஒருங்கே குடிபுகுந்து விட்டாள். ஆடினர்; பாடினர்; ஆனந்த பரவசமாகி "சத் ஸ்ரீ அகால்" என்று சிங்கநாதம் செய்தனர்.

ஜனங்கள் வீர உணர்ச்சி பெற்றுவிட்டபின் ஒவ்வொருவனும் போருடை யணிந்து, புரவிமீதி லமர்ந்து, சிரகவசம் சூடி, வீரக் கழல் வீசிக்கொண்டு போர் முனைக்குப் போயினர்.

இதற்குள் பிரதாபனும் காசினூர் கோட்டையை நெருங்கிவிட்டான். ஜெயசிங் எழுந்தான். தன் குடிகளடங்கிய தளத்தோடு போர்க்களம் போய்ச் சேர்ந்தான். போர் மூன்று நாட்கள் நடைபெற்றது.

போரில் வெற்றி எவர்க்கு என்று நிர்ணயிக்க முடியாமலே யிருந்தது. பிரதாபன் சேனைகள் சரமாரியாக வர்ஷிக்கின்றன. இவ் வம்புகளால் வதைக்கப்பெற்று ஜெயசிங் சேனையில் செத்து மண்ணில் விழுபவர் பலர். ஜெயசிங் சேனையும் கணைகளை ஊழிக் காற்றின் வேகத்தோடு வடவா முகாக்கினியின் வெம்மையைச் சேர்த்து பிரதாபன் வீரர்கள்மீது பொழிகின்றது. அதனால் பிரதாபன் சேனையில் பலர் மடிகின்றனர்.

மூன்றாம் நாள் பிறந்தது. ஜெயசிங் படையில் மூன்றுக்கு முக்கால் பாகம் உயிர் நீத்து விண்ணுலகு எய்திவிட்டது. பிரதாபன் படையில் அவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கவில்லை. இறுதியாகப் பிரதாபனும், ஜெயசிங்கும் நேர்முகமாகச் சந்தித்துக்கொண்டுவிட்டனர். இருவரும் வாட்போர் புரிகின்றனர். பிரதாபன் தன் வாளை வெகு வேகமாகச் சுற்றி ஜெயசிங் மீது எறிவான். அதை ஜெயசிங்கின் வாள் சீறிக்கொண்டு வந்து மேலே படாது தடுத்துவிடும். ஜெயசிங் பீமன் கதையைப் பழித்த தடியொன்றை சுழற்றி பிரதாபன் மீது குறிப்பாக விட்டெறிவான். அதை பிரதாபன் தனது வாள் வலிமையால் தடுத்துவிடுவான். இவ்விதமாகப் போர் நடந்துகொண்டிருக்கும் சமயத்தில் ஜெயசிங் களைத்துப் போய்த் தரையில் விழுந்து விட்டான். அப்பொழுது பிரதாபன் வாள் ஜெயசிங் உயிரை யுண்டு பசி ஆறிற்று.

தலைவன் கொலையுண்டான் என்று கேள்விப்பட்டதும் காசினூர் நகரத்துச் சேனை கோட்டைக்குள் புகுந்துகொண்டுவிட்டது. பிரதாபன் வெற்றியால் வந்த கர்வத்தோடு கோட்டை வாயிலை

தியானம் அலையும் மனத்தை அமைதியில் நிறுத்தும்.

அடைத்து கதவைத் திறந்துகொண்டு உட்செல்ல முயன்றான். ஜபம் ஒன்றும் பலிக்கவில்லை. கோட்டையுள் உள்ளோரும் கதவைத் திறக்கமாட்டோம் என்றுவிட்டனர்.

இப்பொழுது தந்தையின் தளபதி ஸ்தானத்தை குமாரி அகல்யா வகித்துக்கொண்டு விட்டாள். பிரதாபன் கோட்டையை முற்றுகையிட்டான். முற்றுகையும் ஒரு யாதம்வரை நீடித்தது. பிரதாபன் படையினர் கோட்டைக்குள் உணவு செல்லும் பாதையை அடைத்துக்கொண்டு விட்டனர். கோட்டையிலுள்ள ஆகாரங்களெல்லாம் ஆகிவிட்டன. நாளைச் சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லை. இருப்பினும் முன் கொண்டிருந்த ஊக்கத்திற்குச் சிறிதும் குன்றாமல் கோட்டையைக் காத்தே வந்தனர். யாதமும் இரண்டாகப் போகிறது. உண்ண உணவின்றி, குடிக்கத் தண்ணீரின்றி எத்தனை நாட்கள் உயிர்வாழ முடியும்? இறுதியாகக் கோட்டையின் கதவுகள் எதிரிகளுக்குத் திறக்கப்பட்டு விட்டன. எதிரிகளும் உள்ளே புகுந்துவிட்டனர். நேராக அரண்மனைக்கே சென்றனர். பிரதாபன் அரண்மனை அந்தப்புரத்துள் நுழைந்தான். நுழைந்தவன் சிறிது தூரம் சென்றதும் ஏதோ மந்திர வலிமையால் கட்டுண்டவன்போல சடக்கென்று ஸ்தம்பித்து நின்றுவிட்டான். பின் சற்றுத் தெளிந்து உள்ளே சென்றான்.

அங்கே ஓர் இள மங்கை, அழகிய யுவதி; ஓராசனத்தில் அமர்ந்துகொண்டு, வலது கையால் கன்னத்தைத் தாங்கியவண்ணம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருக்கிறாள். அவளே அகல்யா. அவளைக் கண்ட பிரதாபனுக்கு அவள்மீது காதல் முன்னிலும் அதிகமாகப் பொங்கிற்று.

பிரதாபன் வரவைக் கண்டுவிட்டு மங்கை சிறிது மனங் கலங்கினாள். எனினும் அதனை வெளிக்காட்டவில்லை. நாடு பகைவன் கைப்பட்டதே என்ற எண்ணம் அவளை மேன்மேலும் துன்புறுத்துகிறது. இவற்றிலெல்லாம் மேலாகத் தந்தையைக் கொன்றவனைப் பழிவாங்க வேண்டுமென்னும் எண்ணம் அவள் மனதில் அலைமேல் அலை எறிந்து குமுறுகிறது.

பிரதாபன்:—“அகல்யா! என் கட்டியமுதே! உன்னைப் பெற எத்துணை தவம் செய்தேனோ? உன்னைப் பெறவன்றோ நான் இத்துணை கஷ்டங்களெல்லாம் பட்டது! என் பகைவன்—உன் தந்தையை விண்ணுலகிற்கு அனுப்பிவிட்ட இதோ இந்த வலிமை பொருந்திய கைகளைப் பார்! உன்னைப்பற்றிக் கேள்வியுற்ற அன்று

புரோகிதர்களின் உபதேசம் குருடர்க்கு குருடர் வழிகாட்டுவதைப்போன்றது.

முதல் சதா உன் ஞாபகந்தான் எனக்கு. இனி நாமிருவரும் கூடிச் சுகித்திருப்போம்.”

தன் தகப்பனைத் தன் வலியால் வீழ்த்திவிட்டதாக வாய்ச் சவடால் அடிக்கும் பிரதாபனை நகைப்பதா அல்லது அவன் எளிமைக் கிரங்குவதா என்று நினைத்தாள் அகல்யா. ஆனால் இப்பொழுது, தான் ஓர் கைதிபோல் என்பது அவள் மனதில் படாமலிருக்கவில்லை. எனவே அவள் ஒன்றும் கூறாது இருந்துவிட்டாள்.

‘என்ன பெண்ணே! நான் கூறுவதற்கெல்லாம் மௌனம் சாதிக்கிறாய்? உனக்கென்ன குறை சொல்? அதைப் பூர்த்திபண்ணி வைக்கின்றேன்’ என்றான் பிரதாபன்.

அகல்யா:—ஒன்றுமில்லை. ஆனால்.........

பிரதாப்:—என்ன ஆனால்? அதை என்னிடம் சொல்லக் கூடாதா? கண்ணே! ஏன் பயப்படுகிறாய்? சொந்தப் பர்த்தாவிடம் உனக்கேன் இவ்வளவு கூச்சமும் அச்சமும்?

அகல்யா:—ம்......... ஒன்றுமில்லை.

பிரதாப்:—சரி. சொல்ல இஷ்டமில்லையாக்கும். போகிறது. சரி, கண்ணே! நான் எனது வீரர்களைப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். எனக்குன் செம் பவள வாய் திறந்து விடை கொடு.

அகல்யா:—சரி, போய் வாலாம்.

உடனே பிரதாபன் வெளியேறிவிட்டான். அகல்யாவின் மனம் குமுறிற்று. அப்பொழுது அவள் மனம் பட்ட பாடு தாளம் படுமோ? அன்றித் தறிதான் படுமோ? எத்துணைத் துன்பம், துக்கம்? எங்ஙனமேனும் தன் தந்தையைக் கொன்றவனின் உயிரை வாங்கிவிட வேண்டுமென்ற ஒரு தனி அவாவே அவளை இப்பொழுது துன்புறுத்துகிறது. அதனால்தான் பிரதாபன் கூறியதற்கெல்லாம் சொல்லியும் சொல்லாமலும் தழுதழுக்கிறாள். உயிரை அவள் ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை. இப்பொழுது வேண்டுமானாலும் மாய்த்துக்கொள்ளத் தயார்தான். ஆனால் செய்கடன் தீர்ந்தபின்னன்றோ? பிரதாபனைச் சிக்ஷிக்கவே உயிர்வாழ்கிறாள்.

வெளியே சென்ற பிரதாபனும் அந்தப்புரம் வந்து சேர்ந்தான். அங்கோர் ஆசனத்திலமர்ந்தான்.

‘கண்மணீ! நாளை ஓர் சுபமுகூர்த்தம் இருப்பதாகச் சோதிட வல்லார் சொல்லுகின்றனர். நாளையே நாமிருவரும் கலியாணம்

மக்கள் தாயை மறந்தாலும், தாய் மக்களை மறப்பதில்லை.

செய்துகொள்ள வேண்டுமென்பது எனது எண்ணம். உனது எண்ணமும் அப்படித்தானிருக்கும் என்று நினைக்கிறேன், என்ன கண்ணே! சொல்.

அகல்யா ஒன்றும் பேசவில்லை.

பிரதாப்:— "ஏன் அகல்யா பேசமாட்டேன் என்கிறாய்? நான் அன்னியனா என்ன? ஓஹோ! அறிந்தேன் உன்னை. ஆஹா! கண்ணே நீயே கற்பரசி. புர்த்தாவிற்கேற்ற பதிவிரதை. நாணப்படுகிறாயோ? நாணமென்பது மாதர்க் கணிகலமன்றோ?, மௌனம் சர்வார்த்த சாதனம். நாளையே நம் மணத்தை வைத்துக்கொள்ளுவோம்" என்று கூறிவிட்டு மறுபடியும் விடைபெற்றுக்கொண்டு வெளியே சென்றுவிட்டான். ......

இராப்போது கழிந்தது. பொழுது புலர்ந்தது. நகரெங்கும் கோலாகலம். இம் மணத்தையே நாம் இக் கதையின் தொடக்கத்தில் வர்ணித்தது.

சபாமண்டபம் வெகு அழகாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. பல அரசர்கள் வந்து கூடியிருக்கின்றனர். இவர்களுக்குச் சற்று உயர்ந்த இடத்தில் பிரதாபனும், அகல்யாவும் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எதிரே புனித அக்கினியைப் புரோகிதர் வளர்க்கிறார். வேத கோஷம், மணமந்திரம் யாவற்றையும் மண்டபம் மாறொலிக்கின்றது. புரோகிதர் தாலியை ஏதோ மந்திரம் சொல்லி மணமகன் கையில் கொடுத்து அதை அகல்யாவின் கழுத்தில் கட்டச் சொன்னார். சபை முழுதும் ஏக நாதம்! மங்களப் பல்லியங்கள் ஓர்புறம்! வாழ்த்துக்கள் ஓர்புறம்! ஜயகோஷங்கள் ஓர்புறம்! இவ்வாறாக மணவிழா முடிந்தது.

நேரமும் மாலையாகிவிட்டது. சூரியன் இம் மணத்தைக் கண்டுவிட்டுப் பிரதாபன்மீது வெகுண்டவன்போல் மேல் திசையில் செக்கச் செவேலெனச் சிவந்து தோன்றுகிறான். பறவைக் கணங்களின் சப்தமும் அடங்கிவிட்டது. சோலையில் காற்று 'விர் விர்' என்று அலறுகின்றது. செடிகளில் மொட்டுகள் வாய் நெகிழாது மூடியே இருக்கின்றன. இம் மணத்தின் முடிவை உன்னி இயற்கை அன்னை வருந்தினாள் போலும்.

இரவுமாகிவிட்டது. அரச இணைக்காகப் படுக்கையறை வெகு ரம்மியமாக—அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு வைக்கப்பட்ட பலவித மலர்களின் நறுமணமும், அகில், சந்தனம் முதலிய

அரசு எவ் வழியோ அவ் வழியே குடிகள்.

வைகளின் புகையின் வாசனையும் 'கம் கம்' என்று எட்டு காத தூரம் வரை வெடித்து, இன்றுதான் காணோர் ராணியின் திருமணம் என்று அங்குள்ளோருக்கு அறிவிக்கின்றது.

பிரதாபனும் அகல்யாவும் படுக்கையறையுள் சென்றனர். வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்ட பொன்னமளியில் பிரதாபன் உட்கார்ந்தான்.

'கண்ணே! அகல்யா! இன்றே நன்னாள்! வாழ்க்கையின் பயனை நான் இன்றே அனுபவிக்கின்றேன். வாழ்க்கைக் கோப்பையிலுள்ள அமுதத்தை நான் இன்றுதான் பருகுகிறேன். உலக அன்னையே! இவ் வின்பம் என்றும் எங்களிடை குன்றாது மேன்மேலும் தழைத்தோங்க அருள்பாலித்தருள்! கண்மணி! என்னருகே வா! நாம் கூடிக் களித்திடுவோம்' என்றான் பிரதாபன்.

அகல்யா:—இதோ வந்துவிட்டேன். இந்தப் பாலை அருந்திவிட்டுப் பின் நாம் பிறவற்றைப் பார்ப்போம். ஏனெனில்.........

இதைச் சொல்லி முடிப்பதற்குள் பிரதாபன் இடைமறித்துப் பேசுவான் "கண்ணே! இந்தச் சமயத்தில் இப் பசுவின் பால் நமக்கெதற்கு? காமதேனுவின் பாலினும் இன்சுவைத்தான பாலை நாம் அனுபவிப்பதை விடுத்து இதையா இச்சிப்பது? என்னருகே வா! கண்ணே! ஆஹா! என்ன தவம் செய்தோம் இப் பாக்கியம் கிட்டிட!"

இவ்வொவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு கூரிய முனையான ஈட்டிபோன்று அவள் மனதை அறுத்தது. அவள் நோட்டம் பிரதாபனைப் பழி வாங்குவதிலேயே சென்றது. எனவே சொல்கிறாள்:

"இருக்கட்டும் நாதா! இப் பால் பின் ஆறிவிட்டால் யார் சாப்பிடுவது? அதைக் கொட்டிவிடவா?"

பிரதாப்:— "பின் அதைச் சாப்பிடுகிறேன் என்று சொல்லிக்கொண்டு அகல்யா கையிலிருந்து பாலை ஓர் கையால் வாங்கினான். வாங்கும்பொழுது அகல்யாவின் முகத்தை நோக்கி ஓர் இள நகை அரும்பினான். அவன் உள்ளம் தேனில் கிடந்து சிறகிழந்து தவிக்கும் வண்டுபோன்று, அவளுடைய பேரழகில் லயித்துவிட்டுத் தவிக்கின்றது. முகத்தை நோக்கிய அவன் கண்கள் அதைவிட்டு எட்டேன் என்கின்றன. உலகம் முழுவதும் அவளுடைய இரண்டு விழிகளுள் அடங்கிவிட்டது என்பது அவனுடைய நினைவுபோலும். அவன் கண்கள் அவள் கண்ணிணையோடு போதங் கடந்து உரையாட, வாய் அநாயாசமாகப் பாலைப் பருகுகின்றது. பாத்திரத்திலுள்ள பால் முழுதும் காலி.

கொலைப் புரட்சி, அமைதியையோ சுதந்திரத்தையோ கொடுக்காது.

கிராமவாசி.

"அனுபவி"

கிராம ஜீவியம் மேன்மையோ இல்லையோ அதைப்பற்றி என்னுடைய அனுபோகத்திலிருந்து அறிந்துகொள்ளுங்கள். நான் ஒரு நகரவாசி. என் தலைவிதி ஒரு கிராமத்தில் ஜீவிக்கும்படி நேரிட்டது. சரி, கிராமத்துக்குப் போனேன். குடியிருக்க வீடு வேண்டும். வாடகைக்கு வீடு கிடைப்பதென்றால் மிக லேசான காரியமென்று எண்ணிக் கொண்டிருந்தேன். வீடு விசாரித்தால் உங்களுக்கேற்ற வீடு கிடையாது; கொஞ்சம் கஷ்டந்தான்; இங்கே போய்பாருங்கள், அங்கே போய்பாருங்கள் என்று சொல்லுவாரைத்தான் நான் முதலில் கண்டேன். வீடு கிடை-

---

சிறிதுநேரம் கழித்து, "கண்மணீ! கண்மணீ! அகல்யா!" என்று கத்தினான் பிரதாபன்.

அகல்யா பிரதாபனை அண்மி 'என்ன? என்ன?' என்றுமட்டும் கேட்டாள். பிரதாபன் சிறிது நேரம்வரை ஒன்றும் பேசவில்லை. அகல்யாவின் முகத்தை மட்டும் குறிப்பாக நோக்கினான்.

பிரதாபன் குக்ஷமத்தை அறிந்துகொண்டு விட்டான். பாலில் விஷம் ஏதேனும் அகல்யா கலந்துள்ளாள் என்பது அவன் அறிவில் பட்டுவிட்டது. 'அட பாதகி! உன்னை எவ்வளவு தூரம் நம்பியிருந்தேன்? உயிருக்கு உயிராக! கண்ணுக்குக் கண்ணாக! உன்னையுடைய நான் எத்தனைக் கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தேன். அவை யாவினுக்கும் கைம்மாறு—செய்நன்றி—இதுவோ? அட பாதகி! சண்டாளி!" என்று இவ்வாறெல்லாம் வைதான் பிரதாபன். நேரம் செல்லச் செல்லப் பிரதாபனின் உயிரும் சிறிது சிறிதாகச் சிறுத்துக்கொண்டே வந்து பஞ்சபூதங்களும் தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றுவிட்டன.

சிறிது நேரத்திற்கு முன் பிரதாபன் நன்னாள் என்று குறித்த தினம் இதுவோ, அன்றி எத் தினமோ?

யாவிட்டால் என்ன செய்வது? வசதியான வீடு கிடைக்கமாட்டாது அது நிச்சயம். தாசில்தாருக்கு எழுதி ஒரு தர்க்காஸ் நிலத்தில் ஒரு குடிசை போடலாமென்று நினைத்தாலும், 6 மாதம் சென்றாலும் செல்லும்; 6 வருஷம் சென்றாலும் செல்லும்; ஒருக்கால் கிடைக்காமல் போனாலும் போகும். நகரவாசிக்கு பிரியமான வீடு கிராமத்தில் கிடைக்குமோ? முக்கால்வாசி வீடுகள் மண்ணால் கட்டிய கூரை குடிசைகள்தான். ஒரு குடிசைக்குள் போனால் ஒரே அறை; ஒரு விராந்தா மட்டுந்தான் கிடைக்கும். வாடகைக்கு ஒரு பாகம் மாத்திரம் கிடைக்கும் கேட்கும் முன்னதாக ஜாதி, மதம், கலியாணம் முதலிய விவரங்கள் எல்லாம் சொல்லித் தீர வேண்டும். பிறகு நாலு ஐந்து பேரைக் கூட்டிக் கொண்டுபோய் வீட்டுக்காரனைக் கண்டு கால் அரை கூட்டி, கால் அரை குறைத்து வீடு வாடகைக்குப் பேசி எடுத்துக் கொண்டேன்.

சாப்பாட்டுக்கு என்ன வழி யென்று பார்த்தால், அதோ கெதிதான். சமைத்தே தீரவேண்டும். இல்லாவிடில் சாகத்தான் வேண்டும் போல் இருந்தது. நான் ஒரு ஜாதி பித்தன். என் ஜாதியிலோ, மற்ற எந்த ஜாதியிலோ எதுவும் வாங்கி உண்ண மனமற்றவன். உதவி வேண்டுமானால் ஓடித்தான் பெற்றுக்கொள்ள வேண்டும், அரிசி வேண்டியமட்டும் விலைக்கு கிடைக்கும். அரிசியை வாங்கிக் கொண்டு என்ன பண்ணுகிறது? காய்கறிகள் எல்லாம் கிராமத்தில் விளைந்தாலும் வாங்கப் போனால் ஒன்றும் கிடையாது. ஏனென்றால் கிராமத்தில் சரியான விலை கொடுக்க மாட்டார்களாம். இந்த விஷயம் பசியாயிருக்கும் எனக்கு ரொம்ப நேர்த்தியாய்த்தான் இருந்தது. காய்கறிகள் உண்டாகிறது. கிராமத்தில் கிராமக்காரர்கள் வாங்கும் காய்கறிகள் நகரத்தில்தான். நானும் அப்படியே செய்வதென்றால் தற்சமயத்திற்கு சரிவராது. கிராமத்திற்கும் நகரத்திற்கும் ஏறக்குறைய 4 மைல் தூரம். போய்வருவதானால் 8 மைலாகும். இனிமேல் எப்பவாவது போனால், வாரத்திற்கு வேண்டிய சாமான்களை எனக்குத்தானே மாசத்திற்கும் சப்ளை செய்துகொள்வது உத்தமமென்று உணர்ந்து கொண்டேன்.

நான் வைத்திருக்கிற பித்தளை பாத்திரங்களில் சமைப்பதென்றால் வயிற்றுக்குக் கெடுதி. கிராமத்தில் மண் சட்டிகள், பானைகள் பைசாவுக்கு பத்து பதினைந்து பாத்திரங்கள் வாங்கலாமென்று எண்ணிக்கொண்டிருந்தேன். அந்தக் காலம் போய்விட்டது. நான் குடியேறிய கிராமத்தில் குயவனே கிடையாது. பக்கத்திலுள்ள கிராமத்திற்கு போக வேண்டியிருந்தது. போய் வாங்கி வந்து சமைக்கும்

ஈஸ்வர த்ரோஹி. *

திரு. S. V. வெங்கட்டநாராயண சர்மா அவர்கள் B.A.,B.L.

ஒரு வருஷத்திற்கு முன் ஒரு நாள் ஒரு பிச்சைக்காரி கல்கத்தாவின் ஒரு தெரு வழியாகச் சென்றுகொண்டிருந்தாள். அவளுடைய சரீரத்தின் மேல் அழுக் கடைந்தும் அநேக இடங்களில் கிழிந் திருந்ததுமான ஒரு நிஜாரும், அதே போன்ற ஒரு ஷர்ட்டும் போட்டுக்கொண்டிருந்தாள். தலையின் மேல் பேலாக்குச்சுப் பதிலாக இரண்டு முழ நீளம் ஒரே முழ அகலமுள்ள துணி—துணி அல்ல அதைக் கந்தை என்றே சொல்ல வேண்டும்—போட்டுக்கொண்டிருந்தாள்.

வரை மனுஷன் பசி தாங்குவானு? அதுவுமல்லாமல் புதுப் பானையில் சமைப்பது வழக்கமில்லையே. இதெல்லாம் கவனிக்கும் போது பசி ஒரு பக்கம், கோயம் ஒரு பக்கம் ஜாஸ்தியாகிறதே யொழிய தணிகிற வழியைக் காணேம்.

வாழைப்பழக் கடைக்குப் போய் ஒரு சீப்பு பழம் வாங்கிச் சாப்பிட்டால், பசி யெல்லாம் பறந்து போகுமென்று எண்ணி கடைக்குப் போனேன். பழத்தைப் பார்த்தால் சூம்பிச் சுருங்கி ஒரு விரல் பருமன்தான் இருக்கும். விலையைக் கேட்டால், ஐயா! பணத்திற்கு பத்துப் பழம் என்று சொன்னுன். பசிக்கு 1 அணு பழம் போதுமா? 2 அணுவுக்கு வாங்கினுலும் போதாதே; அரிசி 1 அணுவுக்கு வாங்கி சமைத்தால் இரண்டு பேர் தாராளமாய் சாப்பிடலாமே என்று புத்தி பலவாராக ஓடினது. இப்படியே யோசித்துக்கொண்டு போனுல் காரியமாகாது. காசைக் கொடுத்து பழத்தை வாங்கி வயிற்றில் போட்ட பின் பல நல்ல யோசனைகள் உண்டானது.

அவைகளை கிராமவாசியாகிய நான் ஆசிரியரின் அனுமதியினுல் என் அனுபோகத்தை யாவரும் அறியும்படி எழுத ஆவல் உள்ளவனுயிருக்கிறேன், 20, 25 விஷயங்களைப் பற்றி நான் நகரவாசிகளாகிய உங்களுக்கு அறிவிக்க வேண்டி யிருக்கிறது.

---

* உக்ர என்பவர் ஹிந்தியில் எழுதிய ஈஸ்வா த்ரோஹி என்ற சிறு கதையின் தமிழ் மொழிபெயர்ப்பு.

காலை சுமார் 9, 10 மணி இருக்கும். வியாபாரத்திற் கருத்தாயிருக்கும் ஜனங்கள் அங்கும் இங்கும் அலைந்து தெருவின் அமைதியை நாசம் செய்துகொண்டிருந்தார்கள்.

ஒரு மகமதிய வாலிபன் தன் பக்கமாகப் போவதைப் பார்த்து அப் பிச்சைக்காரி அவனைப் பார்த்து "ஐயா எஜமானே! கடவுளின் பெயரைச் சொல்லி எனக்கு ஏதாவது கருணை புரியுங்கள்" என்று கேட்டாள்.

"என்ன?" என்று கேட்டுவிட்டு கேள்வி கேட்பவளை ஏற இறங்கப் பார்த்தான். அவள் நல்ல யுவதி.

வாலிபன் நிற்பதைப் பார்த்து அவள் மறுபடியும் "ஐயா! மிகுந்த பசியாயிருக்கிறது. நேற்று முதல் சாப்பிடுவதற்கு ஒன்றும் கிடைக்கவில்லை. ஏதாவது கருணை செய்யுங்கள். கடவுள் உங்களுக்கு மங்களத்தைச் செய்வார்" என்றான்.

"வீட்டுக்கு வருகிறுயா?" வாலிபனுடைய குரலில் இரக்கத்தைக் காட்டிலும் சோதாத் தனம் அதிகமாகக் காணப்பட்டது.

வாலிபனது துஷ்டத்தனம் நிறைந்த கண்களையும், புன்னகை கொண்ட முகத்தையும் பார்த்து பிச்சைக்காரியின் கன்னங்கள் சிவந்துவிட்டது. அவள் மிகவும் வணக்கத்தோடு,

"இவ்விடத்திலேயே ஏதாவது கொடுங்கள்" என்றாள்.

"வீட்டுக்கு வந்தால் எல்லாம் செய்ய முடியும். இவ்விடத்தில் இல்லை. இப்போது என்னிடம் ஒரு காசும் இல்லை."

"ஆனுல் கிடக்கட்டும். நான் வேறு கொடையாளிகளின் கதவண்டை செல்வேன்." என்று சொல்லி, "அதோ தெரிகிறதே அந்த வீடு மகமதியர் வீடோ?" என்று பணிவாகக் கேட்டாள்.

"ஆனுல் என் வீட்டுக்கு வர மாட்டாயோ?"

"மாட்டேன்! அந்த வீடு மகமதியர் வீடா என்று சற்று தயவு செய்து சொல்லுங்கள்."

பிச்சைக்காரி தன் வீட்டுக்கு வரச் சம்மதியாததைக் கண்டு சிறிது முகத்தைச் சுளித்துக்கொண்டு

எல்லா யோகங்களிலும் கர்மயோகமே சிறந்தது.

"ஆமாம்! அங்கேயே போ. அது மகமதியன் வீடுதான்; அங்கே உனக்கு வேண்டிய அளவு மரியாதை கிடைக்கும்" என்று சொல்லிவிட்டு மேலே நடந்தான்.

வீட்டின் கதவைத் தொட்டவுடனே அது திறந்துகொண்டது. மாடிப்படி காணப்பட்டது. பிச்சைக்காரி சற்றுத் தயங்கினாள். பிறகு சற்று ஆலோசித்துவிட்டு, மெதுவாகப் படியின் மேல் ஏற ஆரம்பித்தாள். படிகளைக் கடந்த பிறகு ஒரு திறந்த கதவு காணப்பட்டது. கதவைச் சேர்ந்தாற் போல் ஒரு அறை காணப்பட்டது. அது மிகவும் சாதாரணமாகவே அலங்கரிக்கப்பட்டிருந்தது. பக்கம் பக்கமாகப் போட்டிருந்த பலகைகளின் மேல் மெத்தையும் அதன் மேல் சுத்த வெள்ளையான துணிகள் விரிக்கப்பட்டிருந்தன. அவைகளில் ஒன்றின் மேல் ஒரு தலையணையின் மேல் சாய்ந்துகொண்டு ஒரு இளைஞன் ஏதோ படித்துக்கொண்டிருந்தான். அவன் நல்ல உயரமும், சிவந்த நிறமும், சுந்தரமான உருவத்தையும் உடையவனாக இருந்தான். அவனுடைய வயது சுமார் 17 அல்லது 18 ஆகக் காணப்பட்டது. பிச்சைக்காரி கதவண்டை பேசாமல் நின்றுகொண்டு வாலிபனையே பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால் வாலிபனோ பிச்சைக்காரி வந்த விஷயத்தைச் சிறிதும் கவனிக்கவில்லை. அதற்குள் உள்ளிருந்தபடியே யாரோ ஒருவர்:

"ராமு, நீ வெளியே போகவேண்டுமானால் என்னிடம் சொல்லிவிட்டுப் போ! நான் கதவைச் சாத்திக் கொள்ளுகிறேன்" என்று சொன்னார்.

"நல்லது அண்ணா" என்று சொல்லிவிட்டு வாலிபன் முகத்தைத் தூக்கினான். கதவின் பக்கம் கந்தைகள் அணிந்த லக்ஷ்மியைப் போல் சுந்தரமான ஒரு பெண் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து, "எவ்வளவு அழகு! அதற்கு இந்த வேஷமா? என்ன சமாசாரமோ தெரியவில்லையே?" என்று எண்ணமிட்டவாறே வாலிபன் பிச்சைக்காரியைப் பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த யுவதியின் கன்னங்கள் வாடியிருந்தன. ஆனால் ரோஜா மலரை ஒத்திருந்தன. உதடுகள் வரண்டிருந்தன. ஆனால் சாஸமானவை. கண்களைச் சுற்றிக் கறுமை நிறம் இருந்தது. ஆனால் கண்கள் கொஞ்சிக்கொண்டிருந்தன. அழுக்கடைந்த கிழிந்த சட்டை கிழார் இவைகளுக்கிடை இடையே அவளுடைய சுவர்ண நிறமுடைய சரீரம், சௌந்தரியமே கந்தல்களின் வழியாகப் பொங்கி வழிவது போல் இருந்தது. மெய்மறந்து அந்தப் பெண்ணைக் கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டேயிருந்த பிறகு அவனுக்குத் தன் கடமையின் நினைவு வந்தது.

தன் குற்றத்தை உணர்கிறவன் பிறர் குற்றத்தைக் கவனிக்கான்.

தன்னைச் சமாளித்துக்கொண்டு புன்னகையோடு "என்ன?" என்று கேட்டான். அந்தப் புன்னகையின் மதிப்பை இருதயம் அறிந்திருக்கும்; கண்களுக்குத் தெரியாது. "நீர் மகமதியரா?" என்று அதே குரலோடும் அதே பாவத்தோடும் பிச்சைக்காரி கேட்டாள். அவளுடைய 'நீர்' என்னும் பதம், சிறிது அதிகப்பிரசங்கித்தனமாகவும் குத்தலாகவும் இருந்தது. ஆனால் வாலிபனுக்கு மிகுந்த அன்புள்ளது போல் காணப்பட்டது.

"நான் மகமதியன் அல்ல; ஹிந்து. "ஏன்?"

"இல்லை; நீர் மகமதியர்தான்" என்று சொல்லிச் சிரிக்க ஆரம்பித்தாள்.

வாலிபன் பலகையிலிருந்து எழுந்து கதவண்டை சென்று யுவதிக்கு எதிரே நின்றுகொண்டு:

"அதிருக்கட்டும் உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"பிச்சை வேண்டும். காசு."

"நீ பிச்சையா எடுக்கிறாய்? உன் ஜாதி என்ன?"

"பார்த்தால் தெரியவில்லையா? நான் மகமதிய ஸ்திரீ."

"உன் வீடு எங்கே?"

"லக்ஷ்மணபுரியில்."

"இங்கே கல்கத்தாவில் என்ன செய்கிறாய்?"

"பிச்சை எடுக்கிறேன்."

வாலிபன் கேள்வி கேட்கும் மாதிரியையும் அவன் முகத்தின் மாறுபாடுகளையும் பார்த்து அந்த யௌவனப் பெண் சிரிக்க ஆரம்பித்தாள்.

"ஏதாவது கொடுக்கிறீரா?" என்று பிச்சைக்காரி கேட்டாள்.

"என்ன வேண்டும்?"

"உடுக்க என்ன இஷ்டமோ, அது."

"அப்படியானால் இங்கேயே இரு. அண்ணாவைக் கூப்பிடுகிறேன். அவர்தான் கொடுப்பார்."

நாடு, பாஷை, நிறம், வகுப்பு, சாதி, மதம், அந்தஸ்து முதலிய வேற்றுமைகளை நீக்கி ஒற்றுமையை ஏற்படுத்தவல்லது கலப்பு மணம்.

"ஆனால் நான் போகிறேன். நீ ஒன்றும் கொடுக்கப் போவதில்லை" என்று சொல்லி ஒரு படி கீழே இறங்கினாள். ஆனால் அவளது கண்கள் வாலிபனோடு மேல் நோக்கியபடியே இருந்தன.

வாலிபன் அவளைக் கூப்பிட்டுக்கொண்டே "போகாதே! போகாதே! ஒரு முறை என் அண்ணாவைக் கேட்டுவிடுகிறேன். பிறகு ஏதாவது கொடுக்கிறேன். அவசியம் கொடுப்பேன்" என்று சொன்னான்.

2

நவாபின் பெண்

வாலிபன் பிச்சைக்காரியை அவ்விடத்திலேயே விட்டு விட்டு வீட்டுக்குள் சென்று, சிறிது நேரத்தில் வேறொரு மனிதரோடு திரும்பி வந்தான். அந்த மனிதனுடைய வயது சுமார் 50 இருக்கும். தலையில் பெரும்பான்மையான மயிர்கள் நரைத்திருந்தன. பெரிய பெரிய மீசைகளும் ஒரு தாடியும் இருந்தன. அவன் மிகுந்த பிரபாவமுள்ளவனாகக் காணப்பட்டான். வாலிபன் அவனை 'அண்ணா' என்று கூப்பிட்டான்.

பிச்சைக்காரியை அநேக தடவைகள் ஏற இறங்கப் பார்த்து விட்டு அவர் "நீ தனியாக இருக்கிறாயா? அல்லது உன்னோடு யாராவது இருக்கிறார்களா" என்று கேட்டார்.

இந்தக் கேள்விகளைக் கேட்ட வுடனே பிச்சைக்காரியின் கண்களில் கண்ணீர் ததும்பியது. அவள் கம்பீரமான முகத்தோடு "இச்சமயம் இவ் வுலகத்தில் நான் தனிமையாகவே இருக்கிறேன்" என்று பதிலளித்தாள்.

"உனது அழகு சாதாரணப் பிச்சைக்காரிகளி னின்றும் வேறாக இருக்கிறது. உலக அநுபவமுடையவர்கள் உன்னை இந்த நிலைமையில் பார்த்தும் உன்னைப் பிச்சைக்காரி என்று ஒப்புக் கொள்ள மாட்டார்கள். உன் தாய் தகப்பன்மார் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?"

பிச்சைக்காரியின் கண்களிலிருந்து இரண்டு பெரிய துளிகள் வழிந்து ரோஜா மலர் போன்ற கன்னங்களில் பிரகாசிக்க ஆரம்பித்தன. "என் தாய் தந்தையர் பகல்களில் தங்கள் தலைவிதியை நொந்துகொண்டும், இரவில் முகங்களை மூடிக்கொண்டு வேஷம் மாறி, வயிறு வளர்ப்பதற்காகப் பிச்சை எடுத்துக்கொண் டிருந்தார்கள்" என்று சொன்னாள்.

கெட்ட குணங்களை நீக்குவதுதான் துறவு.

"அவர்கள் எப்போதும் பிச்சைக்காரராகவே இருந்தார்களோ?"

ஒரு பெருமூச் செறிந்து பிச்சைக்காரி சொல்லத் தொடங்கினாள். "இல்லை என் பாட்டனார் லக்ஷ்மணபுரியில் ஒரு நவாப்பாக இருந்தார். நவாப் வேலை முடிந்த பிறகு, என் பாட்டனார் ஆங்கிலேயருக்கு விரோதமாக வாஜித் அலியே லக்ஷ்மணபுரியின் நவாப் ஆவதற்கு உரிமை உள்ளவர் என்று கோஷம் செய்து வாஜித் அலிக்கு உதவி செய்ய ஆரம்பித்தார். வாஜித் அலி கைது செய்யப்பட்டார். 15 வருஷத்திற்குப் பிறகு என் பாட்டனார் இறந்துவிட்டார். அச் சமயம் என் தகப்பனாரிடம் சுகமாகக் காலம் கழிப்பதற்குப் போதுமான தனம் இருந்தது. ஆனால் என் தகப்பனாருடைய சரீரத்தில் நவாப்புகளின் ரத்தம் ஓடிக்கொண்டிருந்தது. அவருக்கு காசு என்றால் தண்ணீர்பட்ட பாடு. கையில் பணம் இருந்த வரையில் ஒருவரையும் லக்ஷ்யம் செய்யாமல் செலவழித்து வந்தார். திடீரென்று ஒரு நாள் நாங்கள் முற்றிலும் பிச்சைக்காரர்கள் ஆகிவிட்டோம். அன்னம் கிடைப்பது மிகவும் துர்லபமாய்ப் போய்விட்டது. பிறகு இந்தியாவின் அநேக நவாப்புகளைப் போலவே அவரும் பரதேசம் சென்றுவிட்டார். என் மாதா பிதாக்களுக்கு என்னென்ன கஷ்டங்கள் உண்டாயினவோ அவைகளைச் சொல்ல என்னால் இயலாது. எனது அண்ணன்மார்களும் ஒரு சகோதரியும் ஒரு துண்டு ரொட்டிக்காகவும், ஒரு கை ஜலத்திற்காகவும் பரிதபித்து இறந்தார்கள். என் தாய் தந்தையரும் பிச்சை எடுத்தும், கஷ்டங்களை யனுபவித்தும், குருடர்களாய்ப் போய் இப்பொழுது இறந்து மூன்று மாதங்கள் ஆயின. நவாப் வம்சத்தில் பிறந்த அவர்களைப் புதைப்பவர்களும் எவரும் இல்லாமல் போய் விட்டார்கள். அநாதைப் பிரேதங்களுக்கு என்ன கதி ஆகிறதோ அதுவே என் தாய் தந்தையருக்கும் ஆயிற்று.

என் தகப்பன் இருக்கும் காலத்திலேயே லக்ஷ்மணபுரியிலுள்ள போக்கிரிகளும் சோதாக்களும் என்மேல் கண்வைத்திருந்தார்கள். அவர்கள் இறந்த பிறகு அங்கே வசிப்பது எனக்கு அசாத்தியமாய்ப் போய்விட்டது. என் கற்பை அழிப்பதற்கு இருபது முப்பது சோதாக்கள் சமயம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு உதவி செய்வார் ஒருவருமில்லை. கடைசியில் வேறுவழி யில்லாமல் நான் லக்ஷ்மணபுரியை விட்டு ஓடவேண்டி நேர்ந்தது. கல்கத்தாவைப்பற்றி அநேகர் புகழ்ந்திருப்பதை என் காதாறக் கேட்டிருக்கிறேன். அங்கே அநேக ஏழைகள் சுகமே காலம் கழிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆகையால் இவ்விடத்திற்கு ஓடி வந்து விட்டேன். ஆனால் ஐயோ! இங்கே வந்து பார்த்த பிறகு இவ்விட

சாதி இரண்டொழிய வேறில்லை. அதாவது நல்லோர் தீயோர்.

த்திய நிலைமையும் லக்ஷ்மணபுரியைப் போலவே இருக்கிறது. இவ்விடத்திலும் தயை புரிபவர்கள் மிகவும் குறைவு. ஆனால் நரப் பிசாசுகள் அநேகம். இந்தப் பதினைந்து நாட்களாக இவ்விடத்திய நிலைமையைப் பார்த்துக் கொண்டு வருகிறேன். யாரையும் பாருங்கள்! என்னிடம் அசங்கியமான வார்த்தைகள் பேசவும் என் மானத்தைக் கெடுக்கவுமே தயாராயிருக்கிறார்கள். ஆனால் கடவுளின் பெயரைச் சொல்லி என் மேல் கருணை புரிபவர் ஒருவரும் இல்லை. இந்தக் கஷ்டங்களை அனுபவிப்பதற்கு நான் என்னதான் குற்றம் செய்தேனோ தெரியவில்லை. என் தலைவிதி சாவுகூட எனக்கு...''

பிச்சைக்காரியின் கண்களிலிருந்து முத்துப் போன்ற துளிகள் அவளது வரண்ட கன்னங்களின் மேல் தாரை தாரையாக வழிய ஆரம்பித்தன.

வாலிபனோடு வந்த மனிதர் அவளைப் பார்த்து, ''அம்மா! எங்கள் வீட்டிலேயே இருக்கிறாயா?

''நான் மகம்மதிய ஸ்திரீ ஆயிற்றே?''

''பாதகம் ஒன்றுமில்லை. முகம்மதியரும் மனிதர்தான். ஹிந்துக்களும் மனிதர்தான். நான் மனிதனைப் பூஜிப்பவன். ஹிந்து அல்லது மகமதியனைப் பூஜிப்பவன் அல்ல. உனக்கு யாதொரு ஆக்ஷேபணையும் இல்லாவிட்டால், இந்த வீட்டில் நீ தங்குவதற்குப் போதுமான இடம் இருக்கிறது.''

பிச்சைக்காரியின் கீழ்நோக்கிய கண்கள் மேலே எழுந்தன. அவர் பிச்சைக்காரியின் கண்களைப் பார்த்தார். அக் கண்களின் பாஷையை 'ஹிந்து,' 'முகமதியன்' அல்லது 'கிறிஸ்தவன்' அறிய முடியாது. கேவலம் மனிதன் என்பவன்தான் அறிய முடியும்.

3

கோபால்ஜீ

வாலிபன் பெயர் ராம்ஜீ. அவனுடைய பிதாவின் பெயர் கோபால்ஜீ. கோபால்ஜீக்குத் தெரிந்தவரையில் அவரது வம்சத்தினுடைய சரித்திரம் மிகவும் விசித்திரமானது. அவர் யாரைத் தனது தகப்பனென்று எண்ணியிருந்தாரோ அவர் இறக்கும் தருவாயில் கோபால்ஜீயைக் கூப்பிட்டு,

''குழந்தாய் நீ என்னை அப்பா, அப்பா என்று அழைக்கிறாய். எங்களுக்குக் குழந்தை ஒன்றும் இல்லாத காரணத்தால், நானும்

சரீரத்தில் கடவுளொளி கலந்திருப்பது எள்ளில் எண்ணெய் இருப்பது போல்தான்.

[illegible]

என் மனைவியும் உன்னை எங்கள் சொந்தக் குழந்தைபோல் வளர்த்து அன்பு காட்டி வந்தோம். ஆனால் நீ எங்கள் [illegible] அல்ல. உன்னுடைய சரீரத்தில் இந்த ஏழையாகிய எனது [illegible] இல்லை. இந்த ரகசியத்தை உன்னிடம் தெரிவித்து, உனக்குத் துன்பத்தை உண்டாக்கவேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஆனால் இப்பொழுது கடவுளின் முன்னிலையில் போகிறவன் ஒரு பொய்யை இருளில் மறைத்துவிட்டுச் செல்வதினால் மிகுந்த பாபம் சம்பவிக்கும்.

''உனது உண்மைத் தாய் ஒரு க்ஷத்ரிய மாது. நான் வைஸ்யன். அவளது கணவன் ஒரு சுதேச ராஜ்யத்தில் வேலைக்காரனாக இருந்தான். உன் தாய் யுவதியாயும் சுந்தரியாயும் இருந்தாள். ராஜாவின் பார்வை சதா அவள்பேரிலேயே இருந்தது. அவன் எப்படியாவது உன் தாயை அடைய வேண்டுமென்று யோசித்துக் கொண்டே இருந்தான். ஆனால் உன் தாயின் கணவனும் க்ஷத்ரிய வீரன். அந்த காரணத்தால் அரசனுக்கு தைரியம் வரவில்லை. கடைசியில் அரசனுக்கு ஓர் உபாயம் தோன்றிற்று. உன் தாயின் கணவனை சாக்குப்போக்குக் காட்டி, ராஜாங்க வேலையாக வேறு தேசத்துக்கு அனுப்பிவிட்டான். இங்கும் அங்குமாக ஒன்றரை வருஷம்வரை தூரதேசத்திலேயே இருக்கும்படி செய்தான்.

''கணவனைப் பரதேசம் அனுப்பிய பிறகு ராஜா உன் தாய்க்கு ஆசைகள் காட்டியும் பயமுறுத்தியும் தன்வசம் செய்துகொள்ள முயற்சித்தான். தனது யுக்திகள் ஒன்றும் அவளிடம் செல்லாததைக் கண்டு, அரசன் ஓர் இரவு தன் வேலைக்காரர்களை அனுப்பி, அவளை பலாத்காரமாகக் கொண்டுவரும்படி அனுப்பினான். இந்த விஷயம் காதோடு காது வைத்ததுபோல் நடந்துவிட்டது. ஒருவருக்கும் இந்த விஷயம் தெரியாது. அந் நாள் முதல் உன் தாயார் பதினைந்து ஆனாள். பிறகு யாதொரு ஆக்ஷேபணையும் இல்லாமல் அவள் ராஜாவிடம் போக்குவரத்தாயிருந்தாள். கடைசியில் உன் உற்பத்தியும் உண்டாயிற்று.

''நான் அந்த ராஜாங்கத்தில் மாதம் 10 ரூபாய் சம்பளமுள்ள வேலைக்காரனாக இருந்தேன். நீ பிறந்த அன்றைய தினமே அரசன் என்னைக் கூப்பிட்டு 5000 ரூபாய் அடங்கிய பையை என் கையில் கொடுத்து, ''இந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு நீ வேறு எங்கேயாவது சென்று வசி. ஆனால் இந்த ரகசியத்தை மாத்திரம் வெளியிடக்கூடாது'' என்று கட்டளையிட்டான். நான் அன்றைய தினமே புறப்பட்டுக் கல்கத்தா வந்து சேர்ந்தேன். என் மனைவிக்கும் குழந்தை இல்லாததால், உன்னை அடைந்து ஆனந்தமடைந்

அறிவு தெய்வமே கலைமகள்.

தாள். பிறகு நாங்கள் இருவரும் உன்னை எங்கள் குழந்தை என்று சொல்லிக்கொண்டு உன்னை வளர்த்துப் படிக்கவைத்தோம். எப்படி இருந்தபோதிலும், என் சம்பத்து எல்லாம் உன்னுடையனவே. நான் இறக்கும் தருவாயிலிருக்கிறேன், நீ உன் தாய் தந்தையரை வீணே தேட முயலாதே. ஏனென்றால் உன் வார்த்தைகளைக் கேட்டு உலகம் சிரிக்கும். உன்னை ஏளனம் செய்யும். உன்னை அவமானப்படுத்தும். அவ்வளவுதான். நீ என்னுடைய மகன். நான் உனது தந்தை. இந்த என் மனைவியே உன் தாய்!"

இதுவே கிழக் கோபால்ஜீயுடைய சரித்திரம். இறப்பதற்கு இரண்டு வருஷம் முன்பே அவனுடைய போஷகத் தந்தை அவனுக்கு மணமும் முடித்துவைத்தார். தந்தை இறந்த சில நாட்களில் தாயும் இறந்துவிட்டாள். பிறகு எல்லாச் சொத்தும் கோபால்ஜீயின் கைக்கு வந்தது. அவரும் ஏராளமாகச் சம்பாதித்தார். ஒருதடவை இரும்பு வியாபாரத்தில் அவருக்கு ஒரு லக்ஷ ரூபாய் லாபம் கிடைத்தது. இந்தத் தொகையை பாங்கியில் போட்டு, கோபால்ஜீ வியாபாரத்தினின்றும் ஜன சமூகத்தினின்றும் விலகித் தனிமையில் தன் வாழ்நாளைக் கழிக்க ஆரம்பித்தார்.

அதற்கு ஒரு காரணம் இருந்தது. அவருக்குத் தன் பிறப்பின் அந்தரங்கம் தெரிந்த பிறகு அவருடைய நிலைமை விசித்திரமாக மாறியது. அடிக்கடி அவர் தன் மனைவியிடத்திலும், நண்பர்களிடத்திலும் "இந்த உலகம் ஏமாற்றுபவர்களாலும், போக்கிரிகளாலும், அயோக்கியர்களாலும் நிறைந்தது" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு சொல்லுவார். ஈஸ்வரன் என்ற பெயரைக் கேட்டால், அவருக்கு மிகுந்த அருவருப்பு உண்டாகும். ஈஸ்வரனது பேச்சு வரும் சமயத்தில் அவர் கோபத்துடன் குதித்தெழுந்து, "எல்லாம் பொய், சுத்தப் புரட்டு, ஈஸ்வரன் என்பவர் ஒருவரும் கிடையாது; ஈஸ்வரன் எங்கேயும் கிடையாது; பணக்காரர்களும், உலகத்தை நரகமாகச் செய்யும் அறிவாளிகளின் புத்தியுமே, ஏழைகளின்மேல் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துவதற்காகச் செய்த ஓர் கற்பனை, எல்லாம் பொய், எல்லாம் புரட்டு" என்பார். ஆனால் கோபால்ஜீயின் இந்தத் தெள்ளிய சித்திரத்தை ஏற்றுக்கொள்ள உலகம் தயாராக இல்லை. அதுவுமில்லாமல் மானிட தர்மத்தையே அனுசரித்து வந்த கோபால்ஜீ எந்த ஜாதியாரிடத்தும், எந்த மதத்தாரிடத்தும் யாதொரு தடையுமில்லாமல் உண்டு குடித்து வந்தார். இதை ஜன சமூகம் பொறுக்கவில்லை. ஆனால் கோபால்ஜீயோ தன் தர்மத்தில் திடமாயிருந்தார். அவர் ஜன சமூகத்தின் பேச்சுக்களை

சிறிதும் பொருட்படுத்தவில்லை. ஜன சமூகத்தின் மதாசாரியர்களின் மேல் அவருக்கு மிகுந்த வெறுப்பு ஏற்பட்டது.

கிழ கோபால்ஜீ மதம், தனம், ஜன சமூகம், கோயில், மசூதி, சர்ச் இவை எல்லாவற்றையும் துச்சமாக நினைத்தார். இவைகளைக் காட்டிலும் இந்த எல்லாத் தொல்லைகளுக்கும் மூலகாரணமான 'ஈஸ்வரன்' என்பவனை இன்னும் துச்சமாகக் கருதினார்.

யாருடைய கண்களிலாவது கண்ணீரைக் கண்டால் அவரது மனது இளகும். ஏழைகளைக் கண்டால் அவரது மனம் கரைந்துருகும். உலகத்தோர் எவரை அவமானம் செய்கிறார்களோ, எவர்கள் ஏழைகளோ, எவர் பதிதர்கள் என்று கருதப்படுகிறார்களோ அவர்களே கோபால்ஜீயின் கடவுள். மனிதத் தன்மையே அவரது மதம்.

4

ராமு

ராமு ஐந்து வயதுள்ள அறியாச் சிறுவனாயிருக்கும்போது அவனுடைய தாயார், கோபால்ஜீயின் பத்னி பரலோகப் பிராப்தி அடைந்தாள். அதுமுதல் ராமு கோபால்ஜீயின் அன்பிலேயே வளர்ந்தான். தகப்பனுக்கு மகன்பேரிலும், மகனுக்குத் தகப்பன் பேரிலும் ஒரு தெய்வீகமான அன்பு இருந்தது. மனைவி இறந்த பிறகு கோபால்ஜீ வேண்டுமானால் இரண்டாவது விவாகம் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. "விவாகத்தின் முக்கிய உத்தேசம் அன்பே; காமம் அல்ல. மனைவி இல்லாவிட்டாலும் இருவருடைய ஐக்கிய ஸ்நேகமே உருவெடுத்தாற்போன்ற ராமு என்னுடைய அன்புக்குப் பாத்திரனாயிருக்கும்போது, வேறு விவாகத்தின் அவசியம் என்ன?" என்பார்.

மனைவி இறந்த பிறகு, முதலில் சிறிது காலம் வரை ராமுவைப் பார்த்துக்கொள்ளுவதற்காகவும், அவனுடைய ஆகாரம் முதலியவை தயார் செய்வதற்காகவும் ஒரு வயதான பிராம்மணத்தியை அமர்த்தியிருந்தார். ஆனால் அந்த பிராம்மண தேவதை ராம்! ராம்! என்று ஜபம் செய்துகொண்டே ராமுவுக்குக் கொடுக்கும் பால், நெய், வெண்ணெய் முதலியவற்றைத் தன் குழந்தைகளின் செலவுக்கு எடுத்துக்கொள்ள ஆரம்பித்தது கண்டு, கோபால்ஜீ அவளை நீக்கிவிட்டு, ராமுவின் தாயாருடையவும் செவிலித்தாயினுடையவும்

ஸ்தானத்தைத் தானே எடுத்துக்கொண்டார். புத்திரனைக் குளிப்பாட்டுவதும், அவனுடைய துணிமணிகளைத் தோய்ப்பதும், அவனுக்குச் சமையல் செய்வதும், அவனை உண்பிப்பதும் தானே செய்ய ஆரம்பித்தார். உதவிக்காக ஓர் வேலைக்காரனையும் அமர்த்திக்கொண்டார். குழந்தைப் பருவத்திலிருந்து வயதாகும்வரை அவர் ராமுவைத் தன் பக்கத்திலேயே—தன் மார்போடு அணைத்துக் கொண்டு தூங்கவைப்பார். இந்த துக்கமயமான, பாபம் நிரம்பிய உலகத்தில் 'ராமு' என்ற பதமே எல்லாவற்றைக் காட்டிலும் சர்வ சிரேஷ்டமான சுகம் என நினைத்தார். ராமுவைக் கண்ட மாத்திரத்தில், அவருக்கு ஒரு இணையற்றதும் வர்ணிக்க முடியாததுமான சுகம் உண்டாகும். முகம் மலர்ந்துவிடும். அவனைப் படிக்கவைப்பதற்கும் மிகுந்த அழகான ஏற்பாடு செய்திருந்தார். அவன் கல்கத்தாவிலுள்ள சர்வகலாசாலையில் 'ப்ரவேஸிகா' பாஸ் செய்துவிட்டு, பி.ஏ.யில் இரண்டாவது வருஷப் படிப்புப் படித்துக்கொண்டிருந்தான். காலேஜிலேயே ஆங்கிலத்துடன் சம்ஸ்க்ருதமும் எடுத்துக் கொண்டிருந்தான். வீட்டிலும் கோபால்ஜீயின் பழைய நண்பரான ஒரு மௌல்வி அவனுக்குப் பார்ஸி கற்றுக்கொடுத்து வந்தார்.

ஈஸ்வர த்ரோகியான கோபால்ஜீயின் ஹிருதயத்தைக் கொள்ளை கொண்ட ராமு ஸ்வபாவமாகவே ஹிந்துவாக இருந்தான். ஈஸ்வரனைப் பூஜிப்பவனாக இருந்தான். தனக்காக தேவி தேவதைகளில் கோபால்ஜீக்கு நம்பிக்கை இல்லாதபோதிலும், தன் மகன் வற்புறுத்துவதற்காக ராமர் கோயிலுக்கும் காளி கோயிலுக்கும் போவார். சிற்சில சமயம் பக்தி நிரம்பிய மகனுக்கும், நாஸ்திகத் தகப்பனுக்கும் ஈஸ்வரனைப்பற்றிய அழகிய வாக்குவாதம் உண்டாகும். கோபால்ஜீ வாக்குவாதத்தில் ஜயமடைந்த போதிலும், தன்னைத் தோற்றுப்போனவனாகவே கருதுவார். ஆனால் குழந்தை ராமு தகப்பனாரின் கழுத்தைக் கட்டிக்கொண்டு கன்னத்தோடு கன்னம் ஒட்டவைத்துக்கொண்டு, "அண்ணா! நீங்கள் ராம், ராம் என்று சொல்லாதவரை நான் சாப்பிடவே மாட்டேன். ராமனே நமது கடவுள்" என்று சொல்லும்போது கோபால்ஜீ 'ராம் ராம்' என்று சொல்லுவதோடு நிற்காமல் "என் அருமைக் கண்மணியின் பெயரே ராமு ஆயிற்றே! அப்படியிருக்க எனக்கு ராம் ராம் என்ற பெயரை உச்சரிப்பதில் என்ன ஆக்ஷேபணை?" என்பார்.

தற்காலம் நமது நாட்டில் ஆரம்பக் கல்விக்கென அரசாங்கத்தினர் அதிகம் பொருட் செலவு செய்து, அதற்காக நகரங்களிலும் கிராமங்களிலும் கல்விக் கூடங்களை மிகுதியாக அமைத்து வருகின்றனர். இது வெளிநோக்கம் கொண்டு காண்பதற்குப் பெருநலம் தருவதாகக் காணப்படினும், உள் நாடி நோக்குங்கால் பயன்தரா முயற்சி யென்பது புலனாகும்.

5

மௌல்வி ஸாஹப்

கல்கத்தாவின் தெருக்களில் நேற்றுவரைத் தாண்டவமாடிக் கொண்டிருந்த கலகத்திற்குப் பதினைந்து நாள் முன்னதாக ஒருநாள் கோபால்ஜீயின் பழைய நண்பரும், ராமுவுக்குப் பார்ஸி கற்றுக் கொடுப்பவருமான மௌல்வி ஸாஹப் சதாவத் அலிக்கும், ஈஸ்வர த்ரோகியான கோபால்ஜிக்கும் "ஹிந்துக்களும் முசல்மான்களும்" என்பதைப்பற்றிப் பெரிய வாக்குவாதம் நடந்தது. அந்த வாக்கு வாதம் ஆரம்பித்த தெவ்வாறென்றால்:—

"தங்கள் பிச்சைக்காரப் பெண் எப்படி இருக்கிறாள்?" என்று மௌல்வி சாஹப் தொடங்கினார்.

"சுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறாள்; ஏன்?" என்றார் ஈஸ்வர த்ரோகி.

"ஊரிலுள்ள மகமதியர்களுக்கெல்லாம் அவள் ஹிந்து அல்ல என்பது தெரியும்."

"அதனால் என்ன? தங்கள் கேள்வியின் அர்த்தம் என்ன?"

"அதனுடைய அர்த்தம் ஒன்றும் எனக்குத் தெரியாது. ஆனால் உங்களிடமிருந்து அப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு போய் அவளை மறுபடியும் மகமதிய மதத்தில் சேர்க்கப்போகிறார்களாம். மகமதிய மதத்தைச் சேர்ந்த ஒரு பெண் ஹிந்துவின் வீட்டில், ஹிந்துவைப்போல் வசிப்பதை மகமதியர்களாகிய அவர்கள் பார்க்கச் சகிக்கவில்லையாம். அதுதான் எனக்குத் தெரியும்" என்றார் மௌல்வி சாஹப்.

"அஹ்ஹஹ்ஹா" என்று பலமாகச் சிரித்துக்கொண்டு ஈஸ்வர த்ரோகியான கோபால்ஜீ "இந்தப் பிச்சைக்காரி அன்றையதினம் பசியினால் இறந்துகொண்டிருக்கும் சமயத்தில் முசல்மான்கள் எங்கே சென்றுவிட்டார்கள்? தன்னை முசல்மான்கள் என்று சொல்லிக்கொள்ளும் * * * * * * அவர்கள் அவளுடைய கற்பை அழிப்பதற்காக அவளைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும் சமயத்தில், மகமதிய மதம் எங்கே சென்றுவிட்டது? வெறுப்பு, கொலை, கொடுமை, போக்கிரித்தனம், சண்டை சச்சரவு இவைகளின் பெயர் மகமதிய மதம் அல்ல. வீணே எதற்காகக் கடவுளின் பெயரையும் மதத்தின் பெயரையும் கெடுக்கக்

தமிழர் கலைமகளை வாழ்த்தி, வழிபட வேண்டுமாயின், நாட்டிற்கு நலம் செய்யும் பத்திரிகைகளைப் படித்தல் வேண்டும்; பாதுகாத்தல் வேண்டும்.

197892

கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்?" என்று கோபத்தோடு மௌல்வியைப் பார்த்துக் கேட்டார்.

"இது போக்கிரித்தனம் அல்ல ஐயா! இதை மதத்திற்கு மரியாதை செய்தல் என்கிறார்கள்."

"மனிதனுடைய மதம் மனிதனுக்கு மரியாதை செய்யவேண்டுவதே! எந்த மதத்தில் மனிதனுக்கு மரியாதை இல்லையோ அது மதம் அல்ல; புரட்டு!"

"முசல்மானுக்கு மரியாதை செய்வதே இஸ்லாம் தர்மத்தின் தன்மை. முசல்மான் அல்லாதவர்களைக் 'காபிர்' என்று சொல்லுகிறோம்."

"கொஞ்சம் பொறுங்கள்" என்று சொல்லி ஈஸ்வர த்ரோகி அதிக ஆவேசமடைந்து சொல்லுவாராயினர். "யாரையாவது காபிர் என்று சொல்லுவது மனிதனையே அவமானப்படுத்துவதற்குச் சமமானது. நானும் எந்த மதத்தையாவது எந்தக் கடவுளையாவது ஒப்புக்கொள்ளுகிறதில்லை. ஆனால்........."

"ஆனால்?"

"ஆனால் எவனாவது தன்னை முசல்மான் அல்லது கிறிஸ்தவன் அல்லது வேறு ஏதாவது பெயரை வைத்துக்கொண்டு, என்னை ஹிந்து என்று கருதி, என்னை அவமானப்படுத்துவானேயானால் என்னைக்காட்டிலும் திடமான ஹிந்து வேறொருவரும் இல்லை. அப்படிப்பட்ட நிலைமையில் நான் அடிமை ஆகவும் தயார். ஆனால் ஹிந்துவாகவே இருப்பேன். இறப்பதற்கும் தயாராகுவேன். ஆனால் ஹிந்துவாக இருந்தால், இந்த நிலைமையில் அவமானம் யாரைச் சேர்ந்தது? ஹிந்துவுக்கு அல்ல, மனிதனுக்கு. நானும் ஒரு மனிதன்: மௌல்வி சாஹப்! நான் எல்லா மதங்களையும், நாம் அணியும் உடைகளைக் காட்டிலும் அதிகமாகக் கருதவில்லை. லுங்கி அணியும் ஒருவன், வேஷ்டியை அணியும் ஒருவனைப் பார்த்துக் 'காபிர்' என்று சொல்லுவது தகாது. உருமாலை வைத்துக்கொள்பவன், துருக்கிக் குல்லா வைத்துக்கொள்பவனைப் பார்த்து மிலேச்சன் என்று சொல்லவும் கூடாது. அவரவர்களுடைய இஷ்டம். தாங்கள் இஸ்லாம் மதத்தை ஒப்புக்கொள்ளுகிறீர்கள்—லுங்கியை அணிந்துகொள்ளுங்கள். ராமு ஹிந்து. அவன் வேஷ்டியைக் கட்-

வெறிகொண்ட சீர்திருத்தங்கள் எங்கெங்கு நிகழ்ந்தனவோ அங்கெல்லாம் அச் சீர்திருத்தங்களின் நோக்கம் நிறைவேறவில்லை யென்று உலக சரித்திரம் நமக்கு போதிக்கின்றது.

டிக்கொள்ளட்டும், நான் ஒன்றுமில்லை. ஆனால் மனிதன். எது என் மனதுக்குத் தோன்றுகிறதோ அதை அணிந்துகொள்வேன். ஆடைகளுக்காகச் சண்டைசெய்வது முசல்மான் தன்மையுமல்ல; ஹிந்துத் தன்மையுமல்ல. அதை அற்பத்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்."

இதைக் கேட்டு மௌல்வி சாஹப்பும் கம்பீரத்தோடு "கல்கத்தாவில் கலகம் ஏற்பட்டுவிட்டால் தாங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

"தீனர்களின் பக்ஷத்தைச் சேர்ந்தவனாயும், குற்றமற்றவர்களுக்கு உதவியளிப்பவனாயும், போக்கிரிகளோடு சண்டை செய்பவனாயும் இருப்பேன்."

"போக்கிரிகள் யார்?"

"எவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறானோ அவன். அவன் ஹிந்துவா யிருந்தாலும் சரி, முகம்மதியனா யிருந்தாலும் சரி. அதைப்பற்றிக் கவலையில்லை."

*   *   *   *

இவ்வாறு மௌல்வி ஸாஹபுக்கும் ஈஸ்வர த்ரோகிக்கும் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்த அதே சமயத்தில் வீட்டுக்குள், இப்பொழுது ராஜாத்தி என்று அழைக்கப்படும் பிச்சைக்காரிக்கும் ராமுவுக்கும் சம்பாஷணை நடந்துகொண்டிருந்தது.

"ராஜாத்தி!"

"ராஜாத்தியின் எஜமானரே!"

"என்னை ஏன் எஜமானன் என்று அழைக்கிறாய்?"

"நீர் ஏன் என்னை ராஜாத்தி என்று அழைக்கிறீர்?"

"அப்படியானால் நீ நவாபின் பெண் அல்லவா?"

"அப்படியானால் நீர் என் எஜமானர் அல்லவா? நீர் எனக்குப் புகலிடம் கொடுத்தீரல்லவா?"

"அப்படியானால் சரி. நீ ராஜாத்தி அல்ல. வெறும் 'நீ' தான்.

"ஆனால் சரி! நீரும் எஜமானர் அல்ல. வெறும் 'நீர்' தான்."

"நீ இனிமேல் காய்கறி வாங்கக் கடைக்குச் செல்லாதே!"

கண்டனத்தினால் எத்தகைய நன்மையும் [illegible] விளையாது.

"ஏன்?"

"மீன்கடைத் தெருவிலுள்ள மகமதியர்கள் உன்னை ஹிந்துவின் வீட்டினின்றும் வெளிப்படுத்த நிச்சயித்துக்கொண்டிருக்கிறார்கள்."

"என்னை வெளிப்படுத்த நிச்சயித்திருக்கிறார்களா? இது என்ன? இது ஆங்கிலேய ராஜ்யமல்லவா? துலுக்க ராஜ்யமா?"

"நல்லது நீ மகமதியப் பெண் ஆய்விடுகிறதுதானே?"

'நீர் ஏன் முசல்மான் ஆகவில்லை?"

"நான் ஹிந்து. ஹிந்துவாய் இருப்பதையே நான் கௌரவம் என்று நம்புகிறேன்."

"அப்படியானால் நானும் ஹிந்து. ஹிந்துவாயிருப்பதே எனக்கும் கௌரவம். எந்த வீட்டில் 'அண்ணா' அவர்களைப் போன்றவரும், எந்த வீட்டில் 'நீர்'-உம் இருக்கின்றீர்களோ அந்த மதமே உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் மேன்மை பெற்றது என்று நினைக்கிறேன்."

"உலகத்தாருடைய பார்வையில் எங்களையும் நீ மகமதியராகச் செய்துவிட்டாய்."

"ஆயின் 'நீர்' என்னை ஹிந்துவாகச் செய்துவிடவில்லையா? நீர்........."

ஸ்ரீமதி 'நீ' என்பவளுடைய முகத்தில் கையை வைத்து ஸ்ரீமான் 'நீர்' என்பவர் "பேசாதே" என்றார். உடனே ஸ்ரீமதி 'நீ' என்பவள் ஸ்ரீமான் 'நீர்' என்பவருடைய வாயில் கையை வைத்துப் "பேசாதே" என்றாள்.

6

கலகம்

கல்கத்தாவில் மூன்று நாளாகக் கலகம் நடந்தது. ராமுக்கும் பிச்சைக்காரிக்கும் கோபால்ஜீக்கும் முதல் முதல் சந்திப்பு ஏற்பட்ட அதே அறையில், கோபால்ஜீ விசனத்தோடு உட்கார்ந்திருந்தார். பிச்சைக்கார ராஜாத்தியும் கோபால்ஜீக்கு எதிரில் ஒரு நாற்காலியின் மேல் உட்கார்ந்திருந்தாள். அவளுடைய முகத்திலும் விசனமும் கவலையும் குடிகொண்டிருந்தன.

தியாகத்தினால் இன்பங்களை அனுபவியுங்கள். இதுவே உபநிஷத்தின் ஸாரமாகும்.

"குழந்தாய்! என் ராமு இன்று ஆரிய சமாஜ ஊர்வலத்தைப் பார்ப்பதற்காக ஒரே மணி நேரத்திற்கு விடை பெற்றுச் சென்றவன் இன்னும் வரவில்லையே! அவசியம் அவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்துவிட்டது. இல்லாவிட்டால் அவனுடைய கிழட்டு 'அண்ணா'வைப் பாராமல் ஒரு நிமிஷங்கூடச் சகியான்!" என்று நடுங்கிய குரலோடு கோபால்ஜீ சொன்னார்.

அதே சமயத்தில் யாரோ ஒருவன் கதவைத் தட்டினான். ராஜாத்தி கதவைத் திறப்பதற்காக எழுந்தாள். அதற்குள் கிழவர் 'நீ போகாதே ராஜாத்தி! ஒருவேளை அவன் ஏதாவது அயோக்யனாயிருக்கலாம். நான் போகிறேன்' என்று சொல்லிவிட்டுக் கதவைத் திறக்க, அவருடைய வேலைக்காரன் நந்தன் உள்ளே நுழைந்தான். அவனுடைய முகம் வெளுத்திருந்தது. ஒரே மூச்சில் ஓடி வந்தவனைப்போலப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தான்.

"என்ன சமாசாரம்? ராமு எங்கே?" என்று அவனைக் கேட்டார்.

நந்தன் தலையைத் தொங்க விட்டுக்கொண்டு பேசாமல் நின்றான்.

"அடே! ஏன் பேசாமல் நிற்கிறாய்? எனதருமை ராமு எங்கே?"

வேலைக்காரன் விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். வேலைக்காரனது இந்த நிலைமையைப் பார்த்துக் கோபால்ஜீயின் முகம் கருத்துவிட்டது. இன்னும் ஒரே நிமிஷத்தில் தன்மேல் கோரமான இடி விழும்போல் அவருக்குத் தோன்றிற்று.

"நந்தா! அடே நந்தா! ஏன் பேசாமலிருக்கிறாய்? அவர் எங்கே" என்று நடுங்கிய குரலோடும் பீதி அடைந்த மனதோடும் ராஜாத்தி கேட்டாள்.

நந்தன் மெதுவாகச் சொல்ல ஆரம்பித்தான்.

"எஜமானே! ராமுவுக்கு.........". அவன் ஆரம்பித்ததை இத் தடவையும் முடிக்க முடியவில்லை. இச் சமயம் கோபால்ஜீ அவனை அதட்டிய குரலோடு,

"அடே! ஏன் தெளிவாய்ச் சொல்லாமலிருக்கிறாய்? முட்டாளே!" என்று கேட்டார்.

நந்தன் தன் சக்தி எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்து இவ்வாறு வர்ணிப்பானாயினன்.

ஆரம்பக் கல்வியில் அமையாத கல்வியுரம் இடை கடை எதிலும் அமையப் போவதில்லை. அஸ்திவாரம் வன்மை பெறாவிடில், மேற் சுவர் எவ்வாறு நிலைக்கும் என்பதை யோசியுங்கள்.

“ஆர்ய சமாஜ் ஊர்வலம் நடந்த அன்றைய தினம் மகமதியர்கள் ஊர்வலத்தைத் தாக்கி, ஹிந்துக்களையெல்லாம் நையப் புடைத்தார்கள். அபினிக் கடைத் தெருவிலிருக்கும் ராமுவின் ஒரு நண்பர் ராமுவைத் தன் வீட்டிலேயே தடுத்து வைத்துக்கொண்டார். மறு நாள் மகமதியர்களது அக்கிரமம் அதிகரித்ததைக் கண்டு ராமுவும் அந்த நண்பரும் முகமதியர்களை எதிர்ப்பதற்காக வெளிக்கிளம்பினார்கள். அநேக இடங்களில் முகமதியர்களைத் தாக்கி, அடித்து விரட்டி விட்டார்கள். இன்று காலை ராமு தங்களைச் சந்திப்பதற்காக வீட்டை நோக்கி வரும் சமயத்தில் ஒரு மகமதியச் சண்டாளன் ராமுவின் வயிற்றில் கத்தியால் குத்திக் கொன்றுபோட்டான். அதற்குப் பிறகு ராமுவின் கதி என்னவாயிற்றோ எனக்குத் தெரியாது. இந்த சமாசாரம் கிடைப்பதே மிகவும் கஷ்டமாய்விட்டது.”

“அவரை மகமதியர்கள் கொன்றுவிட்டார்களா? அவரை!...... அவரை!!” என்று ராஜாத்தி கோவென்று கதற ஆரம்பித்தாள். ஆனால் கோபால்ஜீ மிகவும் கம்பீரமாகவே இருந்தார். அவருடைய கண்கள் கலக்கவுமில்லை. கண்களில் கண்ணீரும் வரவில்லை. ஒரு நிமிஷத்திற்குப் பிறகு அவர் தன் இருக்கையைவிட் டெழுந்து வேலைக்காரனைப் பார்த்து “வீட்டில் எவ்வளவு ஆயுதங்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் என் முன் கொண்டுவந்து வை” என்றார்.

சிறிது நேரத்தில் வேலைக்காரன் இரண்டு மூன்று தடிகள், இரண்டு பட்டாக்கத்திகள், ஒரு துப்பாக்கி முதலியவற்றைக் கொணர்ந்தான். கிழவர் முதலில் கத்தியை எடுத்து இரண்டொரு தடவை இங்குமங்கும் சுழற்றிப் பழுது பார்த்தார். பிறகு ஆடைகள் அணிய ஆரம்பித்தார். அச் சமயத்தில் அவருடைய பார்வை அழுதுகொண்டிருக்கும் ராஜாத்தியின் மேல் விழுந்தது.

“குழந்தாய்! இப்போது இந்த வீடு உன்னுடையதே. நான் என் ராமுவைத் தேடிச் செல்லுகிறேன். அவன் கிடைத்தால் திரும்புவேன். இல்லாவிட்டால் இதுவே நமது கடைசிச் சந்திப்பு” என்றார்.

கோபால்ஜீயின் சிவந்த கண்ணீர் நிறைந்த கண்களைப் பார்த்து ராஜாத்தி, “நானும் செல்லுவேன்” என்றாள்.

“நீ எங்கே செல்லுவாய்?”

ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய சின்னஞ் சிறு இலகுவான இலக்கியங்களான சன்மார்க்க நூல்களை நன்கு அறிந்த மாணவர் தமிழ் நாட்டில் எத்தனைபேர் இருக்கிறார்கள்?

“அவரைத் தேட.”

“அது மிகவும் கடினமான காரியம் ராஜாத்தி! நீ அறியாப் பெண். ராமுவை என் பங்குக்கு விட்டுவிடு. அவனை நானே தேடுவேன்.”

“அதெல்லாம் முடியாத காரியம். தாங்கள் எங்கே இருப்பீர்களோ அங்கேயே நானும் இருப்பேன். இருங்கள்” என்று சொல்லிவிட்டு ராஜாத்தி உள்ளே சென்று ஆண்பிள்ளை போல் வேஷம் தரித்துக்கொண்டு கையில் நீண்ட கத்தியுடன் கிழவர் எதிரில் வந்து நின்றாள். ராஜாத்தி அணிந்திருந்த ஆண் உடை, ராமுவினுடையதே. ராஜாத்தியின் முகமும் ராமுவின் முகம் போலவே பொன்னிறமாகவும், நீண்டும் அழகாகவும் இருந்தது. மேலும் அவள் ராமுவின் உடைகளையும் அணிந்ததைப் பார்த்து கிழ ஈஸ்வர துரோகிக்கு ராமுவின் நினைவு வந்துவிட்டது. அவரது கண்களில் நீர் நதியைப் போல் பொங்கிற்று.

இவ் வுலகத்தினின்றும் வெகுதூரம் சென்றுவிட்ட ராமுவைத் தேடிக்கொண்டு ராஜாத்தியும், ஈஸ்வர த்ரோகியும், தங்களை ஆயுதங்களால் அலங்கரித்துக்கொண்டு வெளியே கிளம்பினார்கள். ரஜபுத்திரர்கள் காவி உடை தரித்துக் கையில் ஆயுதம் எடுத்து ரண பூமியில் குதிக்கும்போது அவர்களுடைய முகம் எப்படி இருக்குமோ அதுவே போல் கோபால்ஜீயின் முகம் காணப்பட்டது. காவியுடை தரித்த கணவர்களைச் சண்டைக்கு அனுப்பிய பிறகு தீக்குளிக்கும் ரஜபுத்திரப் பெண்மணிகளின் முகம்போலவே ராஜாத்தியின் முகமும் காணப்பட்டது.

7

ராஜாத்தியும் கோபால்ஜீயும் அந்தத் தெருவைக் கடந்து செல்வதற்கு முன்பே 7, 8 மகமதியர்கள் அவர்களைத் தாக்கினார்கள். “அலீ! அலீ!! அல்லா! அல்லா!! இந்த த்ரோகிகளைக் கொல்லுங்கள். இருவருமே ஹிந்துக்கள். இருவரும் ‘காபிர்’கள்” என்ற கூக்குரல் தெருவெங்கும் எதிரொலித்தது.

ராஜாத்தியைப் பின்னால் நிறுத்திக்கொண்டு கோபால்ஜீ முன் வந்து கையில் தடியைத் தயாராக வைத்துக்கொண்டு,

“கொலைபாதகர்களே! அலீ! அலீ!! என்றும் அல்லா! அல்லா!’ என்றும் ஏன் கூப்பிடுகிறீர்கள்? சைத்தான்! சைத்தான்!! என்று

அறியாமையே எல்லாத் தீமைகளுக்கும் காரணம்.

கூப்பிடுங்கள். ரத்த தாகங் கொள்ளும் கடவுள், கடவுள் அல்ல! சைத்தான் தான்! பயங்காளிகள் பின்புறம் வந்து தாக்குகிறார்கள். இப்படி எதிரில் வந்து நில்லுங்கள். இன்று ஒரு முடிவு செய்து விடுவோம். நீங்கள் ஏழு பேர்கள். நாங்கள் இருவரே. உங்களில் ஒருவனாவது பிழைத்துவிட்டால் பார்த்துக்கொள்."

இடுப்பில் இருந்த கத்தியை உருவி, கோபால்ஜீ கோபங் கொண்ட சிங்கத்தைப்போல் அந்த அயோக்கியர்களின் மேல் பாய்ந்தார். அந்த அயோக்கியர்களும் அதி ஜாக்கிரதையாக எதிர்த்தார்கள். இருபுறங்களிலும் கோரமான யுத்தம். ஒரே நொடியில் கிழச்சிங்கம் மூன்று மகமதியர்களைக் கொன்று வீழ்த்தினார்.

அதே சமயத்தில் பின்னாலிருந்து "இறந்தேன் அண்ணா! இறந்தேன்" என்ற சத்தம் உண்டாயிற்று. கோபால்ஜீ பின்னால் திரும்பிப் பார்த்தார். இரண்டு மகமதியர்கள் ராஜாத்தியின் மிருதுவான சரீரத்தை இரக்கமில்லாமல் கத்தியால் துளைத்துக்கொண்டிருந்தார்கள். அந்த வீர மாதை ரக்ஷிக்கும்பொருட்டு இப்பக்கம் திரும்பியதற்குள் அவளை ஒரு நொடிப்பொழுதில் மகமதியர்கள் கொன்று முடித்தார்கள். கோபால்ஜீ ஒரு குதி குதித்து ராஜாத்தியின் அருகடைந்தார். அதற்குள் பின்னால் இருந்து ஒரு மகமதியன் ஒரு நீண்ட கத்தியால் கோபால்ஜீயின் அடிவயிற்றில் குத்தினான். கோபால்ஜீ 'ஐயோ!' என்று சத்தமிட்டுத் திரும்பி ஒரு அடியில் அந்த மகமதியனை இரண்டு துண்டுகளாக்கிவிட்டார். முண்டம் ஒருபுறம், தலை ஒருபுறம் துடிதுடிக்க ஆரம்பித்தன. அதற்குள் மற்ற அயோக்கியர்கள் ஓட்டம்பிடித்தார்கள்.

கோபால்ஜீக்குப் பெருத்த சாயம் பட்டுவிட்டது. குடல் வெளியே வர ஆரம்பித்தது. குடல் வெளியே வாராதபடி கையால் அழுத்திப் பிடித்துத் தன் மேல் ஆடையால் இறுகக் கட்டி, மேல் நோக்கி நடந்தார். கொஞ்சதூரம் சென்று தெருக்கோடியைக் கடந்ததும் பாதையை அடைந்தார். அவ்விடத்தில் ஒரு சார்ஜன்ட்டும், 7, 8 சிப்பாய்களும் நின்றுகொண்டிருந்தார்கள். இந்தக் கிழவீரர் செல்லுவதைப் பார்த்து அவர்கள் அவரைத் தடுத்து "எங்கே செல்லுகிறாய்?" என்று கேட்டார்கள்.

கோபால்ஜீ தட்டுத் தடுமாறிய குரலில் "நான் எனது ராமுவைத் தேடிச் செல்லுகிறேன். இன்று என் ராமு எனக்கு அகப்படாவிட்டால், இந்தப் பட்டணத்திலுள்ள எல்லா முசல்மான்களையும் ஒருங்கே கொன்றுவிடப்போகிறேன். குழந்தாய் ராமு! என் அன்பே ராமு!"

இராஜா இராம் மோகன ராய் அவர்களின் நூற்றாண்டு விழா.

திரு. என். வேங்கடரமணன் அவர்கள்.

ஆண்டு செப்டம்பர் மாதம் 27உ ஒரு புண்ணிய நாளாகும். இந்தியாவின் நவயுக புருஷரும், சர்வமத சமரச பக்தி மார்க்க பிரதிபாதகரும், ஆசார சீர்திருத்த ஸ்தாபகரும், இந்திய அபலைகள் இரத்தக் கண்ணீர் வடிக்கும் சதிச் செயலைத் தடுத்தாட் கொண்ட பேருபகாரியும், மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும் இந்திய மக்களின் மனத்தைக் கவர்ந்திருந்த மடமையை அறிவின் ஒளியால் அகற்றியவரும், பகுத்தறிவுக்குப் பரம சாதனமான ஆங்கிலக் கல்வியை இந் நாட்டிற் பரப்ப ஆரம்பத்தில் அடிகோலியவரும், இந்திய மக்கள் அரசியற் சுதந்திரம் பெற வேண்டுமென்ற ஆசையை அடியில் தூண்டியவரும், மேல் நாட்டு நாகரீகச் சமய வெள்ளத்தில் முழுகுண்டு இந்தியா தன் தனிமையை யிழக்க நின்ற சமயத்தில், இந்தியாவின் பழம் பெருஞ் சமயத்தைச் சீர்திருத்தி யமைத்து நிலை நாட்டியவரும், தாய் நாட்டின் நன்மைக்கெனத் தம் உடல், பொருள், ஆவியை ஒருங்கே அர்ப்பணஞ் செய்து உழைத்து வந்ததன் பயனாய், இங்கிலாந்தில் தம் இன்னுயிரை நீத்தவரும் ஆகிய பெரியார் **இராஜா இராம் மோகன ராய்** அவர்கள் இம் மண்ணுலக வாழ்வை நீத்துச் சென்று இற்றைக்குச் சரியாக நூறு ஆண்டுகள் நிறைவுறுகின்றன. இந்தியாவில் பெண்களை இறந்துபட்ட அவர்களது கணவரின் உடலோடு உடன்

காயம் மிகுந்த ஆழமாயிருந்தது. கோபால்ஜீ அதே இடத்தில் திடீரென்று விழுந்து குவியலாய்ப் போய்விட்டார்.

அந்தப் பாதைக்கு அக்கம் பக்கத்திலுள்ள மாளிகைகளில் "குழந்தாய் ராமு! என் அன்பே ராமு!" என்று கோபால்ஜீயின் கடைசிக் குரல் வெகு நேரம்வரை எதிரொலித்துக்கொண்டிருந்தது.

கட்டை யேற்றித் தீயில் எரித்து மாய்க்குங் கொடுஞ் செயலை, இராம மோகனர் இராஜப் பிரதிநிதியாக விருந்த லார்ட் வில்லியம் பெண்டிங் துரைமகனாரைக் கொண்டு சட்டத்தின் மூலமாகத் தடுத்துவிட்டதன் மேல், இந்திய வைதீகப் பித்தர்கள் தங்கள் சமயமும், சமூகமும் அடியோடு அழிந்து பட்டதென்று கூக்குரலிட்டு, அச் சட்டத்தை அடியோ டழித்துவிட வேண்டுமென்று ஆங்கிலப் பாராளும் மன்றத்திற்கு மகஜர்கள் அனுப்பி ஆர்ப்பாட்டங்கள் செய்யலாயினர். அச் சமயத்தில் ஆங்கில மக்களுக்கு நேரிற் சென்று இந்தியப் பெண்கள் உடன்கட்டை யேற்றும் வழக்கத்தாற் படும் பாட்டினை உள்ளவாறு எடுத்துக் கூறி, உண்மையை நிலை நாட்டுவதற்காக இங்கிலாந்து சென்று, ஆங்கில மக்களுக்கு உண்மையை யறிவுறுத்தி வெற்றியுற்ற நிலையில், ஐரோப்பியப் பேரறிஞர் பலரால் புகழப் பெறும் பெருமை வாய்ந்து, அந் நாட்டிலேயே தேக அசௌக்கிய முற்றதன் காரணமாக 1833-ம் ஆண்டு செப்டம்பர்மீ 27உ பிரிஸ்டல் நகரத்தில் தம் பூத வுடம்பை நீத்துப் புகழுடம்பைத் தாங்கினார். அவ்வாறு இராம மோகனர் காலஞ் சென்று இன்றைக்கு எனவே இவ்வாண்டு செப்டம்பர்மீ 27உ ஒரு நூற்றாண்டு முடிவடைகிறது. எனவே இத் தினத்தை இந்தியா வெங்கும் பெரு நாளாகக் கொண்டாட முயற்சிகள் நடைபெறுகின்றன. இந் நாட்டிலேயே யன்றி இங்கிலாந்து முதலிய அயல் நாடுகளிலும் இராஜா இராம் மோகனரின் சமயத்தைப் பின் பற்றியவராலும், அவரது உழைப்பை நன்கு மதித்துப் பாராட்டும் பிற அறிஞர்களாலும் இந் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் செய்திகள் எட்டுகின்றன. உலகில் வீரர்களாகவும், தியாகிகளாகவும், தேசத் தலைவர்களாகவும், பரோபகாரிகளாகவும், சமயாசாரியர்களாகவும், பண்டிதர்களாகவும் விளங்கிய பெரியோர்கள் பலரும் பிற்காலத்திய ஜன சமூகத்தினரால் பாராட்டப்படுவது தொன்று தொட்டு வரும் வழக்கமாகும். இராமர், கிருஷ்ணர் முதலிய புராண புருஷர்களும், புத்தர், இயேசு, சைதன்யர், மஹம்மது, சங்கரர், இராமாநுஜர் முதலிய மத போதகர்களும், சிவாஜி, பிரதாப் ராணா, நெல்சன், நெப்போலியன் முதலிய வீரச் சிங்கங்களும், கபீர், நாநக், துளசிதாஸ், இராமதாஸ் போன்ற பக்தர்களும் உலக மக்களால் போற்றப்பட்டு வருவது கண்கூடு. மேற்கண்ட பெரியோர்களின் பிறந்த அல்லது இறந்த நந் நாட்களைத் திருநாளாகக் கொண்டு மக்கள் வழிபடுவதால், அப் பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றினை யறிந்து, அதனை முன்மாதிரியாகக் கொண்டு, தாமும் அவ்வாறு செயற்கரிய செயல்கள் புரிந்து பெருமை வேண்டுமென்ற விருப்பம் எழச் சாதகமுண்டாகும். உலகில் எந் நாட்டைக் கவனித்தாலும்

அந் நாட்டுப் பெரியோர்களை அந்தந்த நாட்டினர் குறிப்பிட்ட தினங்களில் விழா வாற்றிக் கொண்டாடியே வருகின்றனர்.

இராம மோகனரின் பெருமை

இந்தியாவில் நாட்டின் நன்மைக்கும், மக்களின் நலத்திற்கும் அரசியல்—சமூகம்—சமயம்—கல்வி முதலிய பல துறைகளிலும் ஒருங்கே யுழைத்த பெரியார்கள் ஒரு சிலருள் இராஜா இராம் மோகன ராய் அவர்கள் முதன்மையானவராகும். அவர் ஒரு சீர்திருத்த சமயவாதியாகவும், ஆசார சீர்திருத்தக்காரராகவும், சமூக ஊழியராகவும், பண்டிதராகவும், யுக புருஷராகவும் திகழ்ந்தார். அவர் விக்கிரக ஆராதனையோடு கூடிய மூடச் சடங்குகளைக் கண்டித்து, இந்து மத வேத சிரசுகளெனக் கூறப்படும் உபநிஷத்துக்களின் உண்மைத் தத்துவங்களை விளக்கிக் காட்டி, ஏகேசுவர உபாசனையை (ஒரு தெய்வ வணக்கத்தை)ச் செய்யுமாறு இந்திய மக்களைத் தூண்டினார். அவரது கொள்கையைப் பின்பற்றிய ஆயிரக் கணக்கான மக்கள் இன்று உலகெங்கும் பிரம்ம சமாஜிகளென விளங்கிக் கொண்டிருக்கின்றனர். பிற சமயங்களைப் போல் ஒரு இடத்தை, ஒரு மொழியை, ஒரு நூலை, ஒரு மனிதரைப் பின்பற்றியதன்று இச் சமயம். எத் தேசத்திலாயினும், எம் மொழியிலாயினும், எந் நூலிலாயினும், எம் மனிதராலாயினும் வெளியாகும் பகுத்தறிவுக்குப் பொருத்தமான எல்லா உண்மைகளையும் தன் சொந்தமெனக் கொள்ளுவதே பிரம்ம சமாஜ மதத்தின் சீரிய நோக்கமாகும். இந்தியாவில் ஆங்கிலேய துரைத்தனம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இந் நாட்டில் அவதரித்த மகான்களில் இராம் மோகனர் தலைமையானவராகும். காலஞ் சென்ற மஹாதேவ கோவிந்த ரானடே அவர்கள் இராம் மோகனரை (The Father of Modern India) "தற்கால இந்தியாவின் தந்தையார்" என்று கூறியுள்ளார். கவியரசர் ரவீந்திர நாத தாகூர் அவர்கள் (Ram Mohun Roy Inaugurated the Modern Age in India) "இராம் மோகன் ராய் அவர்கள் இந்தியாவில் புதிய யுகத்தை ஏற்படுத்தினார்" என்று அருளியுள்ளார். "இராம் மோகனருக்குப் பிற்பட்ட காலத்தை இராம் மோகனர் யுகம் என்று அழைத்தல் தகும்" என்று சரித்திரக்காரரெனப் பெயர் பெற்ற இரமேச சந்திர தத் அவர்கள் கூறியிருக்கின்றார். எனவே அத்தகைய பெரியாரின் நூற்றாண்டு விழாவை இந்திய மக்களனைவரும் சிறப்பாகக் கொண்டாட வேண்டுவது இன்றியமையாததாகும்.

இவ்விழாவைக் கொண்டாடும் முயற்சியில் இன்று கல்கத்தா முதன்மை யடைந்து விளங்குகிறது. கடந்த பிப்ரவரி மாதத்தி

லேயே கல்கத்தாவின் செனெட் மண்டபத்தில் கவியரசராகிய இரவீந்திர நாத தாகூர் அவர்களின் தலைமையில் ஒரு மகாநாடு கூடி ஷ்டி விழாவைக் கொண்டாடுவதற்கான முயற்சிகள் செய்வதற்கென ஒரு சங்கம் நிறுவப்பட்டுள்ளது. அச் சங்கத்தின் தலைவர் கவியரசரே யாவர். உதவித் தலைவர்களாக ஸர். ஜகதீச சந்திர போஸ், ஸர். பிரபுல்ல சந்திர ரே, ஸர். ஹாஸான் ஸுஹ்ராவார்டி, ரெவரெண்ட். பி. ஜி. பிரிட்ஜ், மஹோமஹோபாத்யாய பண்டிட் பிரமத நாத தர்க்கபூஷண் முதலிய பல மதங்களைச் சார்ந்த பெரியோர்கள் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கின்றனர். அச் சங்கத்தார்கள் இராம் மோகனரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக மேற்கொண்ட முறைகளிற் சில பின் வருவனவாம்:— 1. இராஜா இராம் மோகன் ராய் அவர்கள் ஆங்கிலம், வங்காளம், பர்ஷியன், சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் எழுதிய நூல்களைத் தேடிச் சேகரித்து அச்சிட்டுப் பிரசுரித்தல் 2. வரப்போகும் கிறிஸ்மஸ் விடுமுறை காலத்தில் கல்கத்தாவில் பல்வேறு மதங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைக் கொண்ட சர்வமத மகாசபை யொன்று நடத்தல். 3. இராம் மோகனரது வாழ்க்கைக்கும், அவரது ஊழியங்களுக்கும் சம்பந்தப்பட்ட பொருள்களைத் திரட்டி ஒரு பொருட்காட்சியை ஏற்படுத்தல். 4. வங்காள மொழி வளர்ச்சிக்கான மகாநாடும், வங்காள ஸ்திரீகள் மகாநாடுங் கூட்டுவித்தல். 5. இராம் மோகனர் பிறந்தவிடமாகிய இராதாநகரத்திற்கு யாத்திரைப் போகுதல். 6. கல்கத்தா நகரத்தின் மத்தியில் இராம் மோகனரின் உருவச் சிலையை உலோகத்தாற் செய்து அமைத்தல். 7. பல்வகைப்பட்ட சமயங்களின் ஆராய்ச்சிக்குத் துணைபுரிய வல்ல சிறந்த உபந்நியாசங்களை ஆண்டுதோறும் தக்க மேதாவி யொருவரைக் கொண்டு புரிவித்தல். இது போன்ற மற்றும் பல வழிகளைத் தேர்ந்தெடுத் திருக்கின்றனர். பெரியார்களை வழிபடுந் திருநாட்களில் அவர்களுடைய படங்களையோ அன்றி உருவங்களையோ வைத்து அவைகளுக்குப் பூமாலைகளைச் சாத்தி, பலகாரம், பக்ஷணம் பழம், சாதம் முதலியவற்றை வைத்துப் படைத்து, வயிறு புடைக்கத் தின்று, அன்றைய பொழுதை களியாட்டங்களில் கழித்து வரும் நம்மவர்கள், இனியாவது காலத்திற்கேற்ப நேரிய வகையில் திருநாட்களைக் கொண்டாடி, அதனால் உண்மையான பயனைப் பெற முயலுதல் அவசியம் எனவே, தமிழ் நாடெங்கும் இராஜா இராம் மோகன் ராய் அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பு வகையில் கொண்டாடப்படுமென்று எதிர்பார்க்கின்றோம். வந்தே மாதரம்.

பிறரைச் சீர்திருத்தம் செய்யப் புகுவோர், முதலாவது தம்மைச் சீர்திருத்தஞ் செய்துகொள்ளல் வேண்டும்.

பைந்தமிழ்ச் சோலை.

காதல்.

கலக்கமும்—பண்பும்.

ஸ்ரீவை. திரு. R. வேங்கடாசலம் அவர்கள்.

"கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு"

என்று பாரதியாரால் கூறப்படுஞ் சிறப்பு நமது நாட்டிற்கு இயல்பானது. இத்தகைய கவிதைக்கு விசேஷ சிறப்பைக் கொடுத்தது காதற் சுவையும், வீரச் சுவையும், இயற்கை யழகுமே. உலகத்தில் வழங்கப்படும் பல இலக்கியங்களில் காதற் சுவை விசேஷமாகக் காணப்படுகிறது. உரிய பருவத்தில் உண்டாகும் ஒரு வகை உணர்ச்சி படிப்படியாக வளர்ந்து முற்றும்பொழுது வன்மையை யடைகின்றது. அதற்குக் குறுக்கே வரும் எத்தகைய இன்னல்களையும் லக்ஷியம் செய்யாமல் தாண்டிச் சென்ற காதலர்களின் சரித்திரங்களை நாம் படித்திருக்கிறோம். காதல், ஆரம்பத்திலேயோ, அன்றி முற்றிப் பலன் பெறும் வேளையிலோ ஏமாற்றத்தை யடைந்துவிடுமானால், சாதலைத் தவிர வேறு வழியில்லை. காதலோடு நாணமும் உண்டாகின்றது. புதிதாகக் காதலனைச் சந்திக்கும் பெண், தன் உள்ளக்கிடக்கையை அவனிடம் வாய்விட்டுச் சொல்லமாட்டாள். ஆனால் உள்ளத்தில் காதல் கொந்தளிக்கத் தொடங்கும்பொழுது, கூறாமலிருக்க முடியாது. இது பாரதியின் குயில் பாட்டில் வெகு அழகாக வர்ணிக்கப்பட் டிருக்கின்றது. குயில் கூறுகின்றது:

"........................காதலுற்ற செய்தியினை
மாதர் உரைத்தல் வழக்கமில்லை யென்றறிவேன்.
ஆனாலு மென்போ லபூர்வமாங் காதல்கொண்டால்,
தானா வுரைத்தலன்றிச் சாரும் வழியுளதோ?"

சரித்திர பூர்வமாக இவ் வாக்கின் உண்மையை நாம் அறிவோம். உபகுப்தன் மீது வாசவதத்தை கொண்டிருந்த காதல் இத்தன்மையது.

நல்லெண்ணங்களால் சத்தியத்தை நிலைபெறச் செய்யலாம்.

ஆங்கிலக் கவிஞர்கள் இத்தகைய காதலிகளின் மனோபாவத்தையும் போக்கையும் பல மாதிரியாக வர்ணித்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் உயர்ந்த சுவையோடு விளங்குகின்றன. தமிழ்க் கவிதைகளிலும் இவ்வாறு பல காதல் நிலைகள் வர்ணிக்கப்பட்டிருந்தாலும், தற்கால நாகரீகத்திற்குச் சற்றும் பொருத்தமில்லாமல் பல பாவனைகள் அமைந்திருக்கின்றன. பாரதியாரின் காதற் கவிதைகளில் மட்டும் ஓரளவிற்குப் புதுமையை அனுபவிக்கின்றோம்.

கிருஷ்ண பகவான் மீது ராதா தேவியார் கொண்டிருந்த காதல் மாசு மறுவற்ற தென்பதோடு தெய்வீகமும், உறுதியும் வாய்ந்த தென்பதை வர்ணிக்கும் ஜெயதேவரின் கீதகோவிந்தத்தைப் படிக்கும் எவரும் சுவை மிகுந்த கவிதை விருந்தை யனுபவிப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. யமுனையாற்றின் ஓரத்தில் வாழ்க்கையின் மற்ற விசார மொன்று மில்லாமல், கொடி வீடுகளைத் தேடிச் செல்லும் ராதாவின் செயல்கள் வெகு அழகாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஐதீகமான விஷயத்தில் இணங்கிப் போகவேண்டுமென்ற விசாரம் சிறிதும் இல்லாமல் வங்கக் கவிஞன், ரவீந்திரநாதர் தோட்டக்காரனில் (Gardener) தலைவியின் நிலையை வர்ணிப்பதைக் கவனிப்போம்.

> "இரவில் குளிர்ந்த நேரத்தில் காதலனைச் சந்திக்கப் போகும்பொழுது, பறவைகள் பாடவில்லை; காற்றும் அசையவில்லை; தெருவின் இருபக்க வீடுகளும் அமைதியா யிருக்கின்றன. ஆனால் எனது காற் சதங்கைகள் மட்டும் ஒவ்வொரு அடி நான் வைக்கும்பொழுதும் ஒலிக்கின்றன. எனக்கு வெட்கமா யிருக்கிறது."

இவ்வாறு வர்ணிக்கும் தலைவிகள் காதலர்களைத் தேடிச் செல்லும் பொழுது, வழியில் திரியும் கொடிய சர்ப்பங்களையும் மிதித்துவிடுவார்கள். பயமென்பதே அப்பொழுது தெரியாது. பாரதியின் கண்ணன் பாட்டில் இதைப்போன்ற சம்பவங்கள் நன்றாக உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதில் விவரிக்கப்பட்டிருக்கும் காட்சியில் எவ்வளவு பயங்கரமான இடையூறுகள் தென்படுகின்றனவென்பதைப் பாருங்கள். கண்கள் இவைகளைக் கண்டு சாதாரணமாக அஞ்சுமானாலும் காதலின் இமைகள் பார்வையை மூடிவிடுகின்றது.

"....................................மதி
வஞ்சித் திடுமகழிச் சுனைகள்—முட்கள்
மண்டித் துயர் கொடுக்கும் புதர்கள்—ஒரு (திக்குத்)

அயல் நாட்டுப் பொருளை வாங்குவதால், நாம் அயல் நாட்டு அரசாங்கத்தை ஆதரிக்கிறோம்.

ஆசை பெற விழிக்கும் மான்கள்—உள்ளம்
அஞ்சக் குரல் பழகும் புலிகள்—நல்ல
நேசக் கவிதை சொல்லும் பறவை—அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு— ஒரு (திக்குத்)

தன்னிச்சை கொண்டலையும் சிங்கம்—அதன்
சத்தத்தினிற் கலங்கும் யானை—அதன்
முன்னின்றோடு மிள மான்கள்—இவை"

இவையெல்லாம் சாதாரண உளம் படைத்தவர்களுக்குப் பீதியைக் கொடுக்கும். ஆனால் காதல் ததும்பும் உள்ளத்தவளான இம் மங்கைக்கு பயத்துக்கு இடமேது? பயம் தோன்றுமானால் தற்காப்பு ஆயுதமும், மனோ தைரியமும் இல்லாத பேதை இங்கு வர முடியாது.

காதல் கிளர்ச்சி மிகுந்தவர்களில் மஹா சாமர்த்தியவதிகளான யுவதிகள் உண்டு. 'நடு இரவில் ஒரு பெண் திடீரென்று எழுந்தாள். அநேகந் தடவை அங்கும் இங்குமாக நாற்புறமும் பார்த்தாள். வீட்டை விட்டு மெதுவாக நழுவ ஆரம்பித்தாள். காவல் நாய் விழித்துக்கொண்டிருந்தது. அது குரைத்து எவரையும் எழுப்பக் கூடாதென்பதற்காக, மெதுவாக அதன் பக்கத்தில் போய் உட்கார்ந்து தட்டிக்கொடுத்தாள். தாய் எழுந்துவிடுவாளென்ற பயத்தால் ஓசைப்படாமல் காலடி வைத்துக் காட்டிற்கு ஊடே போகலானாள். எங்கே போகிறாள்? தன் காதலனைச் சந்திப்பதற்காக' என்று ஆங்கிலக் கவிஞர் ஒருவர் வர்ணிக்கிறார்.

பாரதியார் சொல்லுவதுபோல் 'காதல் வழிதான் கரடு முரடானது' (The course of true love never runs smooth). பெரும் அதிர்ஷ்டசாலிகள்தான் இப் பாதையில் பிரவேசித்து அதிகக் கஷ்டங்களுக்கு ஆளாவதில்லை. லைலி மஜனூன், ஹாம்லெத்—ஒபீலியா, ரோமியோ—ஜூலியத் போன்றவர்கள் மஹா துர்ப்பாக்கியம் படைத்தவர்கள். 'கனி கண்டவன் தோலுரிக்கக் காத்திருப்பானோ?' வென்று நமது தமிழ்க் கவிஞர் பாடுகிறார். ஆனால் அதற்குள்ளாக வரும் ஏமாற்றமான கஷ்டம் எத்தகையதென்றால், மேற்கூறியவர்களின் சரிதத்தைப் படிக்கும்பொழுது நாமும் அத்தகைய உணர்ச்சியை மானசீகமாக அனுபவிப்போம்.

சோற்றுத் தொண்டர்களுக்குக் கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையானால், அவர்கள் வாழ்க்கையை அதிகம் பாதிக்காது. ஆனால்

காதல் மணமே இயற்கை மணம்.

காதல் விருந்தில் உட்கார்ந்தவர்களுக்கு இவ்விதக் கஷ்டம் நேரிடுமானால் பேரிடி விழுந்த மாதிரிதான்.

முற்றிப்போன காதல் திருப்தியடையாத வரையில் பைத்தியத்தையும் உண்டாக்கி விடுவதுண்டு. உண்மையில் பைத்தியமல்ல. அதைப்போன்ற செயல்கள் நம்மாழ்வாரின் திருவாய் மொழியில் இதே மாதிரிப் பித்தேறியவன் செய்கை வெகு அழகாக வர்ணிக்கப்படுகின்றது.

“கூத்தர் குடமெடுத்தாடில் கோவிந்தனாமெனா ஓடும்
வாய்த்த குழலோசை கேட்கில் மாயவனென் றுடையாக்கும்
ஆய்ச்சியர் வெண்ணெய் காணில் அவனுண்ட வெண்ணெய் [ஈதென்னும்
பேய்ச்சி முலை சுவைத்தார்க்கு என் பெண் கொடியேறிய பித்தே.”

கண்ணன் மீது மையல் கொண்டவள் நிலையிது. அவனது சரித்திர சம்பவங்கள் இவள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. தான் காணும் பொருள்களி லெல்லாம், கேட்கும் குழலோசையில் கண்ணனது சம்பந்தம் இருப்பதாக எண்ணிப் பிதற்றுவது அபூர்வமாங் காதலின் வெளியீடு. வெறும் உருவெளித் தோற்றம்.

காதலிகளுக்கு மற்றொரு விதமான ஆற்றலுண்டு. தன்மீது தீராக் காதல்கொண்ட புருடனை யேற்றுக்கொள்ளும் பொழுதோ, அதற்கு முன்போ தான் விரும்பும்படி பெரும் வீரனாகவும், தேச பக்தனாகவும் செய்துவிடும் பெண்கள் அநேகர். ரஜபுத்திரர்களின் சரித்திரத்தைத் திருப்பிப் பார்த்தால் இதற்கு எவ்வளவோ உதாரணங்கள் கிடைக்கும்.

ஓர் தமிழ் மகன் உல்லாசமாக இருக்கும் வேளையில் தன் துணைவியைப் பார்த்து, ‘இம்மைப் பிறப்பில் பிரியலாம்’ என்று கூறுகிறான். இவ் வார்த்தைகளைக் கேட்ட அம் மாது, சந்தோஷத்திற்குப் பதிலாகக் கண்ணீர் விடத் தொடங்கினாள். அவனுக்கு இச் செய்கை பேராச்சர்யத்தைக் கொடுத்தது. அவள் நிலையை உணர்ந்துகொண்டான். இம்மையில் ஏற்படும் மரணத்திற்குப் பிறகும் மற்றொரு ஜென்மத்திலும் அவளோடு கூடுவதாகச் சொல்லவில்லையென்றே வருந்துகிறாள். பாரதியாரைப் போன்று கீழ்வரும் உறுதியைக் கொடுத்திருந்தால் அவள் வருந்தியிருக்கமாட்டாள். அது வருமாறு:

“........................தையலே இன்னமு நாம்
பூமியிலே தோன்றிடுவோம். பொன்னே, நினைக்கண்டு

சடங்குகளும், சம்பிரதாயங்களும், மூடப் பழக்க வழக்கங்களும் ஒழிந்தாலன்றிச் சன்மார்க்கம் வளர்ச்சியடையாது.

காமுறுவேன். நின்னைக்கலந் தினிது வாழ்ந்திடுவேன்
இன்னும் பிறவியுண்டு மாதரசே யின்பமுண்டு
நின்னுடனே வாழ்வேனினி நேரும் பிறப்பினிலே”

காதலின் உள்ளொளி தெய்வீகமானது. அது மரணத்தையுங் கூடச் சிறிதும் மதிப்பதில்லை. ரவீந்திரநாதர், வைஷ்ணவ கீதத்தில் ஒரு பெண் தனது தோழியிடம் கூறுவதாகக் குறிப்பிட்ட வாக்கியத்தைக் கவனிப்போம். ‘சகி! நான் அவனைச் சந்திக்கும்பொழுது எனது காதல் மரணத்தின் எல்லையையும் தாண்டிவிடுகின்றது.’

சில விஷயங்களை முழுமையும் வர்ணிப்பதற்கு அர்த்த புஷ்டியான சொற்கள் கிடைப்பதில்லை. அவைகளில் காதலும் ஒன்று.

“பாரதி”ப் பத்திரிகையும்,
நமது வெளியீடுகளான புஸ்தகங்களும் மலேயா நாடுகளில்
கீழ் குறிப்பிட்டுள்ளவர்களிடம் கிடைக்கும்.

Messrs. T. Subramanyam & Co.,
7, Batu Road,
KUALA LUMPUR, F. M. S.

The Manager, “India Novel Depot,”
71, Serangoon Road,
SINGAPORE, S. S.

மனதிற்கு எவ்வாறு பயிற்சி அவசியமோ, அவ்வாறே தேசத்திற்குப் பயிற்சி அவசியம்.

ஆராய்ச்சி மேடை.

இராஜா இராம் மோகன ராய்.

ஆசிரியர்:—பண்டித பக்கிரிசுவாமி செட்டியாரவர்கள்.

வெளியிட்டவர்:—K. T. தேவராஜுலு நாயுடு கம்பெனி,

விலை அணு 4. 261, சைனு பஜார் ரோடு, சென்னை.

தண் தமிழ்த் தொண்டாற்றித் தனது வாழ்வைத் தமிழ்த் தாய்க்கே அர்ப்பணம் செய்திருக்கும் திருமிகு பண்டித பக்கிரிசுவாமி செட்டியா ரவர்களைத் தமிழபிமானிகள் அனைவரும் அறிவார்கள். ஸ்ரீமான் செட்டியாரவர்கள் வெறும் தனித் தமிழ்ப் பண்டிதரல்ல. உலகத்தின் மாறுபாட்டையும், காலத்தின் வேகத்தையும், ஜன சமூகத்தின் போக்கையும் அறிந்த, பொது அறிவு படைத்த, விசால நோக்கமுடைய ஆசிரியர். பத்திரிகை அனுபவ மிகுந்த ஆற்றல் வாய்ந்த எழுத்தாளர்.

லார்டு வில்லியம் பெண்டிங், கவர்னர் ஜெனரலாயிருந்த காலத்தில், அப் பிரபுவின் உதவியினால் சதி என்னும் உடன்கட்டையேறும் வழக்கத்தை நிறுத்தும்படி செய்தார் ராஜா ராம் மோகன் ராய் என்று இந்திய சரித்திரம் படித்தவர்கள் மட்டும் அறிவார்கள். இந்திய அன்னை உற்பவித்த இக்கால மக்களில் உலகத்தார் முதலாவது அறிந்து மெச்சியது யாரென்றால், ராஜா ராம் மோகன் ராய் என்று யோசிக்காமல் சொல்லலாம். இந்தியாவின் முதலாவது தேசாபிமானி—சமூக சீர்திருத்தக்காரர்—"ஒரே கடவுள், ஒரே சாதி, ஒரே மதம்" என்ற மதமாம் பிர்ம சமாஜ ஸ்தாபகர் என்று அவரை நம்மில் எத்தனை பேர் அறிவார்கள்?

ராம் மோகனப் பெரியாரது சரிதையைச் சிறுவர்களுக்கு இளமையிலே போதிக்கவேண்டும்; அந்த அறிஞரது உணர்ச்சி, ஒழுக்கம், நோக்கம் முதலிய அருங் குணங்கள் சிறு மாணவர்கள் மனதில் பதியவேண்டும் என்னும் நோக்கத்துடன் இச் சிறு புஸ்தகம் எழுதப் பெற்றதாகும். இலகுவான கவர்ச்சியான நடையில், நவீன முறையில், உணர்ச்சி உண்டாக்கும் மாதிரியில் எழுதப்பெற்று, பெரிய எழுத்துக்களில் அச்சிடப் பெற்றிருக்கிறது. எல்லா வழிகளிலும் இச் சிறு நூல் சிறந்திருப்பதால், தமிழ் இளைஞர் உலகத்திற்காக நாம்

இதை அதிக ஆவலுடன் வரவேற்கிறோம். எல்லா ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் உயர் வகுப்புக்களிலும் இதை உப பாடப் புஸ்தகமாக ஏற்படுத்த வேண்டுமென நாம் சிபார்சு செய்கிறோம். இதை நூற்றுக் கணக்காக வாங்கி ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு இனமாய் வினியோகிக்க வேண்டுமெனப் பணம் படைத்த பிரபுக்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தமிழகம் கனம் செட்டியாருடைய உழைப்பை ஏற்று ஊக்கமளித்தால், இவரிடமிருந்து எத்தனையோ நல்ல நல்ல நூற்கள் வெளி வருவது நிச்சயம்.

நகர தூதன்.

பல உயர்ந்த பத்திரிகைகளே ஆதரிப்பாரற்று மறைந்துபோகும் இத் தருணத்தில், தமிழருக்குப் பத்திரிகாபிமானம் குறைந்த இக் காலத்தில் சிறந்த பத்திரிகைகள் சேவைசெய்யும் நோக்கத்துடன் வெளிவருவது மிகக் கஷ்டமே.

இதுவரையில் சிறிய அளவில் வெளிவந்து பெருத்த ஊழியம் புரிந்த **"நகர தூதன்"** என்னும் திருச்சி நகர் வாரப் பத்திரிகை இந்தப் புதிய ஆண்டிலிருந்து பெரிய அளவில் தோன்றிச் சிறப்பாக திருச்சிப் பட்டினத்திற்கும் பொதுவாகத் திருச்சிராப்பள்ளி ஜில்லாவிற்கும் புதிய உற்சாகத்துடன் உழைக்க முன்வந்திருக்கிறது எமக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அனுபவ ஞானியாம் பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் இராமானுஜலு நாயுடுகாரும் இன்னும் சில அறிஞர்களும் இதில் வியாசங்கள் எழுதுகிறார்கள். இப் பத்திரிகைக்குத் திருவாளர் மணவை திருமலைசுவாமி அவர்கள் ஆசிரியராக அமைந்திருப்பது போற்றத் தக்கதாகும். தமிழ் நாட்டிற்குத் தனது பேனா முனையால் தொண்டு செய்து வந்திருக்கும் அன்பர் சுவாமி திருமலையின் சக்தி திருச்சி நகருக்குப் பயன்படுத்தப்படுகிறது மிக நன்மையே. இப் பத்திரிகை பல்லாண்டுகள் வாழ்க வாழ்க!

மானேஜர், **"நகர தூதன்,"** உறையூர், திருச்சி.

குமார விகடன்.

இது காஞ்சீபுரத்திலிருந்து புறப்படும் ஒரு ஹாஸ்ய மாதப் பத்திரிகை. கொல்லென்று சிரிப்பை உண்டாக்கத்தக்க அநேக நகைச் சுவையுள்ள கட்டுரைகளும், சீர்திருத்தங்களை உண்டாக்கத்

ஆசிரியக் குறிப்புகள்.

ஆசிரியரது அறிக்கை

மதிப்புரைகள் வேண்டிப் புஸ்தகங்கள் அனுப்புபவர்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகளையே அவஸியம் அனுப்ப வேண்டுகிறோம். மதிப்புரைக்காக சில அறிஞர்களுக்கு நாங்கள் அனுப்ப வேண்டியிருப்பதால் இரு பிரதிகள் தேவை. ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் வராவிட்டால், மதிப்புரை எழுதப்படமாட்டாது.

இந்தியத் தொழிலாளரின் நிலை

உலகம் துன்பத்தால் சுடப்பட்டுத் துக்கத்தால் மூடப்பட்டிருக்கிறது. உலகில் இப்பொழுது பணப் பஞ்சம் உண்டாகியிருக்கிறது. இந்த ஏழை நாட்டில் இது மிகவும் கொடுமையாயிருக்கிறது. இந்நாட்டில் தொழிலாளர்கள் எவ்வாறு கஷ்டப்படுகிறார்கள் என்பதைச்

தக்க வியாசங்களும், மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டிக்கும் உரைகளும் விகடங்களும் இதில் ஜ்வலிக்கின்றன. அறிவு விளக்கத்திற்கான சித்திரப் படங்களும் விகடப் படங்களும் இம் மாசிகையை அழகுபடுத்துகின்றன. சாதாரண நடையிலேயே கட்டுரைகள் எழுதப் பெற்றிருக்கின்றன. இப் பத்திரிகைக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிடைப்பதாக!

பத்திரிகானுபவ மிக்க ஸ்ரீமான் தணிகாசல மவர்கள் இதற்கு ஆசிரியராய் அமர்ந்திருப்பதே இப் பத்திரிகையின் உயர்வுக்கு உத்திரவாதமாகும். இதை வெளியிடும் திருமிகு D. K. சுவாமி அவர்களின் உற்சாகத்தை மிக மிகப் பாராட்டுகிறோம்.

சந்தா:

உள்நாடு		ரூ. 1–4–0.	வெளி நாடு	ரூ. 2–0–0.
,,	தனிப்பிரதி	0–2–0.	,, தனிப்பிரதி	0–3–0.

மானேஜர், **"குமார விகடன்,"** ஆபீஸ், காஞ்சிபுரம்.

புஸ்தகப் படிப்புடன் இயற்கைக் கல்வியிலும் பயிற்சி பெறல்வேண்டும்.

சிறிதும் செல்வர்கள் உணருவதைக் காணோம். சீமான்கள் வாழுமிடங்களான பட்டினங்களில் எத்தனையோ லட்சக் கணக்கான தொழிலாளர்கள் எவ்வளவு கேவலமாய் வாழ்கிறார்கள்! வீடும் குடியும் இல்லாத தொழிலாளர், வீதியில் படுத்துறங்குகிறார்கள். வீதிகளே இவர்களுக்கு வீடுகள். சென்னை நகரில் 8000 பேர்களுக்கு மேலாகத் தெருக்களில் வசிப்பதாகத் தெரியவருகிறது. இவர்கள் வீதிகளிலேயே சமைக்கிறார்கள், உண்கிறார்கள். நூற்றுக் கணக்காகப் பிள்ளைப் பேறுகளும், விவாஹங்களும், இழவுகளும் தெருக்களிலேயே நடைபெறுகின்றன. இவர்கள் சுகாதார விதிகளைக் கவனிப்பதில்லை. இவர்களுக்குச் சுகாதார உணர்ச்சியுமில்லை. கல்வி யிருந்தாலல்லவோ விவேகமிருக்கும். நகர சபையார் இவர்களைப்பற்றி நன்கு கவனிப்பதைக் காணோம்.

நகரங்களைக் காட்டிலும் கிராமங்களின் நிலை மோசமாயிருக்கிறது. ஒரு சிறு குடிசையில் எத்தனையோ பேர்கள் வசிக்கிறார்கள். அறியாமையும் வறுமையும் இந்த ஏழைத் தொழிலாளர்களைப் பிடித்தாட்டிக்கொண் டிருக்கிறது. தேசத் தலைவர்கள் இதைக் கவனிப்பார்களாக! இந்தியச் சர்க்கார் கண்ணை மூடிக்கொண் டிருக்காது, தொழிலாளர்களின் மீது இரக்கம் காட்டி, அவர்களது நிலையை உயர்த்துவது தன் கடமை என்பதை உணர்ந்து உழைக்க வேண்டுகிறோம்.

ஜவஹர் லால் விடுதலை

இந்தியாவின் வீரகேசரி பண்டித ஜவஹர் லால் விடுதலை பெற்றது இந்தியரனைவர்க்கும் மகிழ்ச்சியே. தாயார் மனைவியார் முதலியவர்களின் அசௌக்கியத்தைக் கவனித்துக்கொண் டிருப்பதுடன் அவர் தேச காரியங்களையும் மறந்துவிடவில்லை. மகாத்மாவுடன் சம்பாஷித்தார், கலந்து யோசித்தார். தேசத்தின் தற்கால நிலையைக் கவனித்துப் புதிய திட்டம் போட்டுக்கொண் டிருக்கிறார். இந்த சிங்கம் எப்பொழுது கர்ஜனை செய்து, அடிமை இந்தியாவை எழுப்பப் போகிறதோ?

அறிஞர் சோமசுந்தர பாரதியாரவர்கள்

அண்ணாமலை சர்வகலாசாலையின் தமிழ் இலாகாத் தலைவராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் உள்ள பதவியை உயர்திரு பாரதியாரவர்கள் ஏற்றுக்கொண்டதைக் கண்டு மகிழ்கிறோம். அண்ணாமலை சர்வகலாசாலை இவரை அடைந்ததால், அது கௌரவம் பெற்றதேயன்றி,

---

தன்னடக்கம் சக்தியைக் கொடுக்கும்.

அதனால் இவர் எள்ளளவும் கௌரவம் அடையவில்லை. இவரைப் பற்றி "பாரதி"யில் ஒரு பிரத்தியேகமான கட்டுரை நாம் விரைவில் எழுதப்போகிறோ மாகையால் இதனை இத்துடன் முடிக்கிறோம்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள்

பர்மா, இலங்கை, மலேயா, கயானா, பீஜி, தென்னாப்பிரிக்கா முதலிய அயல் நாடுகளுக்கு இந்திய மக்கள் ஆதியில் அதிக அன்புடன் வரவேற்கப்பட்டனர். இந்தியத் தொழிலாளர்கள் தாங்கள் சென்ற நாடுகளை எவ்வளவோ திருத்தியிருக்கிறார்கள். இது நிற்க, தென்னாப்பிரிக்காவிற்குச் சென்று, காடாய்க் கிடந்த அந் நாட்டைத் தங்களது பேருழைப்பால் பண்படுத்திப் பொன் விளையும் பூமியென ஆக்கியதை உலக மறியும். இந்திய மக்கள் அங்கு விருத்தியாகிக் கொண்டு வருவதை யறிந்த வெள்ளையர்கள், இந்திய மக்கள்மீது பொறாமை கொண்டு, அங்கு இருக்க விடாது துரத்த முயலுகிறார்கள். இவர்கள் ஆள்வோர்களாம், நாம் ஆளப்படுவோராம்; நாம் கறுப்பர்களாம், அவர்கள் வெள்ளையர்களாம்; அவர்கள் நாகரீகமுற்றவர்களாம், நாம் நாகரீகமற்றவர்களாம். பாழும் நிற வித்தியாசம் அங்கு தாண்டவமாடிக்கொண் டிருக்கிறது. கல்விச்சாலைகளிலுங்கூட இந்தியர்களைச் சேர்ப்பதில்லை. சாரணச் சிறுவர்களிற்கூட இந்தியர்களென்று தனியான பிரிவு! எத்தனையோ வழிகளில இந்தியர்களைத் தாழ்த்திக் கேவலமாய் நடத்துகிறார்கள் அங்கு நம்போன்று குடியிருக்கும் வெள்ளையர்கள்.

நாம் சுயாதீனமாயிருந்தால், நாம் சென்ற விடமெல்லாம் சிறப்புக் கிடைக்கும். நம் சகோதரர்கள் அயல் நாடுகளில் துன்பமடைய நாம் சும்மா பார்த்துக்கொண் டிருக்கிறோம். இந்திய அரசாங்கமும் மௌனம் சாதித்துக்கொண் டிருக்கிறது. நாம் இதற்காக முயற்சிகளும் கிளர்ச்சிகளும் செய்யவேண்டும். தீனபந்து ஆண்ட்ரூஸ் நற்றுரைமகனார் தனக்கு 62 ஆண்டு ஆகியும், தென்னாப்பிரிக்காவில் இந்தியருக் கேற்பட்டிருக்கும் இக்கட்டுகளைக் கவனிப்பதற்காகத் தென்னாப்பிரிக்காவிற்குச் சமீபத்தில் செல்ல உத்தேசித்திருப்பதாய் நாம் அறிகிறோம். இவரது முயற்சி எம்மட்டில் கைகூடப்போகிறதோ! இந்தியா விடுதலை பெற்றவுடன்..........................

197892
சென்னை-600 008

பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

நமது புதிய பிரசுரங்கள்

வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!!

சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்
நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.

"தமிழ் நாடு" ஆசிரியர்

டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களின்
முகவுரையுடன் கூடியது.

தோட்டியும் தொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்
ஏற்றத் தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற

சோவியத் ருஷியாவை அறிய இதுவே முதல் சந்தர்ப்பம்.

விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஆப்டோன்
படங்களுடன் கூடிய

ஆர்ட் & கிளேஸ் பதிப்பு **விலை ரூ. *1—4—0.***
தபாற் செலவு வேறு

ராட்டூர்-
-வீரன்-
துர்க்கா தாஸ்.

(சரித்திர சம்பந்தமான ஓர் தேசீய நாடகம்)
வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்
எழுதியது.

அவரது நாடகங்களத்தனையிலும்

இத் துர்க்கா தாஸே முதன்மையானது.

ஆரம்ப முதல் இறுதி வரை
அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! அலங்கார பாஷை!!
மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!
கிரௌன் 1/8 சைஸ்

380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—4—0.
தபாற் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.